629

# பொன்னி

1-12-52.. PONNI.. 4.அணா



208416

# பொன்னி

## பொங்கல் மலர்—1953




அழகிய கலைக்களஞ்சியமாகத்

தயாராகிறது

விலை ரூ. 1—0—0

## மக்கள் மன்றம்

★

இன்றைய அரசியல், வாழ்க்கை நிலை ஆகிய அன்றாட நிலவரங்கள் பற்றி 'பொன்னி'யின் வாசகராகிய நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் கருத்துரையைப் 'பொன்னி மக்கள் மன்ற'த்தில் அரைப் பக்கத்துக்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள்.

கருத்துச் செறிவுக்கும், பல்வகைக் கருத்துச் சாயல்களுக்கும், நடையழகுக்கும் தனி மதிப்பும் பிரதிநிதித்துவமும் கொடுத்து 'மக்கள் மன்றம்' வெளியிடும்.

★

# பொருளடக்கம்


மலர் 6 | டிசம்பர் 1, 1952 | இதழ் 19

திருவள்ளுவர் ஆண்டு 1983
கார்த்திகைத் திங்கள் 16-ம் நாள்



மக்கள் மன்றம் ... 1
வழி மறைத்திருக்குதே ...! ... 2
உணவுக் கொள்கை ... 3
தாம்பத்தியம் ... 7
தங்கச்சுரங்கம் ... 17
முடிவு ... 22
சிரித்தாள்! .... 30
அந்த மண்டு மாரன் ... 33
எச். ஜி. வெல்ஸ் ... 40
ஹேமாவின் கணவன் ... 42
ஒற்றை ரோஜா (தொடர்கதை) ... 49
ஒளிச்சுடர் ... 60
வளரும் இலக்கியம் ... 62
பொழுது போக்கு .... 64


★

இந்த இதழ் அட்டைப் படம்
'ஒற்றை ரோஜா'
தொடர்கதையில் வரும் சம்பவம் ஒன்றைச் சித்தரிக்கின்றது.

# வழி மறைத்திருக்குதே.......!




தற்போதய நெசவாளர் கோரிக்கை, மத்திய அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்படாதவ...
தங்கள் செல்வாக்கை உபயோகித்து வருகின்றனர்.

# பொங்கல் வாழ்த்து

பல நிறங்களில் கவர்ச்சிகரமான அழகிய பொங்கல் வாழ்த்துக்கள் விற்பனைக்குத் தயாரிலிருக்கின்றன.

ஒரு அணு, இரண்டு அணு, மூன்று அணு, விலையில் மூன்று வகைகள் கிடைக்கும். 8 அணு தபால்தலை அனுப்பினால் மாதிரி வகைக்கொன்று அனுப்பப்படும்.

ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டருக்கு மொத்த விலை:

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அணு | விலையுள்ளது | 100 | 5—0—0 |
| 2 | அணு | ,, | ,, | 10—0—0 |
| 3 | அணு | ,, | ,, | 15—0—0 |

தபாற் செலவு இலவசம்—விற்பனை வரி தனி

விவரங்கட்கு:

**பொன்னி லிமிடெட்,**

த. பெ. எண். 1165 :: சென்னை—21

# உணவுக் கொள்கை இங்கும் – அங்கும்

'பீரங்கிகளைப் பார்க்கிலும் உணவு நமக்கு முக்கியமானது' என்று நாட்டின் உணவுத் தேவையின் உயிர்நிலைத் தத்துவத்தைப்பற்றி முதல்வர் நேரு வற்புறுத்தியுள்ளார். இந்த உயர் குறிக்கோள் வாசகத்தின் மெய்ம்மையை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் நாட்டின் உணவுத் தேவையைக் கவனிப்பதில் குறிக்கோள்மட்டும் போதாது. அதற்கு விரிவான தேசியத் திட்டம் வேண்டும். அத்திட்டத்தை வகுப்பதற்கான மூலக்கோட்பாடு வரையறுக்கப் படவேண்டும். இக்கோட்பாடு நாட்டின் எல்லா மக்களின் நலங்களையும் கருத்தில் கொள்வதாயிருக்கவேண்டும்.

சென்னை மாகாணத்தில் இன்று பஞ்சமும் பட்டினியும் தாண்டவமாடாத மாவட்டங்கள் இல்லை என்று கூறலாம். சென்னை நகர் நோக்கியும், தஞ்சை, திருச்சி நோக்கியும் பங்களூர் நோக்கியும் பட்டினிப் பட்டாளங்கள் சாய்ந்து வருகின்றன. முதல்வர் நேருவே அண்மையில் பல பஞ்சப் பகுதிகளையும் பஞ்சகால உதவி ஏற்பாடுகளையும் நேரில் பார்த்துச் சென்றிருக்கிறார். தொடுத்து ஐந்தாண்டுக் காலமாக மழையில்லாததாலும், சென்ற ஆண்டு இரு பருவகால மழையும் தவறிவிட்டதாலும், முக்கியக் குடிசைத் தொழிலான கைத்தறி நெசவாளர் தொழிலின்மையாலும் ஏற்பட்ட உணவு நெருக்கடியைப் பொதுவாகத் தென்கிழக்கு ஆசியா வெங்கும் ஏற்பட்டுள்ள முடையும் மிகுதிப் படுத்தியுள்ளது.

உணவு நெருக்கடிக்கும் பஞ்ச நிலைக்கும் இயற்கை மிகுந்த அளவு காரணம் என்பதை நாம் ஒத்துக்கொள்ள முடியும். ஆனால் அதுவே முழுவதும் காரணமாகாது. அரசியலார் திட்டமின்மையும், கொள்கைத் தவறும் அதை மிகவும் பெருக்கியுள்ளதென்

பதில் ஐயமில்லை. காங்கிரஸ் அரசியலில் இதுவரையில் இல்லை என்பதுமட்டுமல்ல. அவர்களிடையே கொள்ளை றுமைகூட இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் இ சென்னையில் முதல்வர் இராஜகோபாலாச்சாரியார் கட்டுப் டொழிப்பில் நம்பிக்கையுடையவராய் அதை நோக்கி விலை கொண்டு வந்திருக்கிறார். பங்கீட்டு முறை ஒழிக்கப்பட்டுவிட் ஆனால் அங்கே—தில்லியில்—இந்தியாவெங்கும்—கட்டுப்ப இருந்து வருகிறது.

முதல்வர் இராஜகோபாலாச்சாரியாரின் கொள்கை இந்திய உணவு மந்திரியும், உணவு மாநாடும் ஆதரவு தந்தது. நடு அரசின் உணவு மந்திரி கித்வாயும் அதன் பக்கமாகவே சாய்ந் தவர் தான். இதன் பயனாக, இந்தியா முழுவதும் கட்டுப்பாட்டு ஒழிப்பு மூலக்கொள்கையாய் விடுமோ என்ற நிலை ஏற்படவிருந்தது. ஆனால் முதல்வர் நேருவும் பல காங்கிரசுக் குழுக்களும் கட்டுப் பாட்டு ஒழிப்பைத் தீவிரமாக எதிர்த்தன. திட்டக் குழுவின் ஐந்தாண்டுத் திட்டத்துக்குக் கட்டுப்பாட்டொழிப்பும் அதன் பயனாக விளையக்கூடும் விலை ஏற்றமும் குந்தகமானவை என்று எடுத்துக் காட்டி விவாதிக்கப்பட்டது. முடிவில் ஆங்காங்கே சிறு மாறுதல்களுடன் உணவுக் கட்டுப்பாட்டுக் கொள்கையே நீடிக்கும் என்ற முடிவு நடு அரசியலால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. சென்ற மாதம் 18-ம் தேதியன்று மாமன்றம் அரசிய லாரின் இக்கொள்கைக்குத் தன் இணக்கம் தெரிவித்தது.

உணவுப் பொருள்களும், மற்ற இன்றியமையாத் தேவைப் பொருள்களும் ஒரு நாட்டின் குடும்ப நிர்வாகத்தைப்போன்றவை என்பதையும், அவை எப்போதும் திட்டமிட்டே அமைக்கப்பட வேண்டும் என்பதையும், முதல்வர் நேரு வலியுறுத்தியிருக்கிறார். இவ்விரண்டும் நாட்டின் எல்லா மக்களுக்கும் தரப்படவேண்டும் என்பதே இந்தியாவின் உணவுத்துறை அடிப்படைக் கொள்கை. இன்று அரசியலார் புதிதாகத் திருத்தி ஏற்கும் கோட்பாட்டில் இந்த அடிப்படைக் கொள்கை மாறவில்லை. கால இடச் சூழ்நிலை களுக்கேற்ப ஒரு குறிப்பிட்ட பொருளின் கட்டுப்பாட்டையோ, ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள கட்டுப்பாட்டையோ மட்டுந் தான் தளர்த்தவேண்டி வரலாம் என்று வகுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியா முழுவதிலும் பற்றுக்குறை நிலைமை நீங்கி, நாட்டுத் தேவைக்குப் போக மிகுதியை ஏற்றுமதி செய்யமுடிகிற காலம் வந்த பிறகுங் கூட, இந்த அடிப்படைக் கொள்கை மாறு படாது. ஏனெனில், நாட்டின் திட்டங்கள் நிறைவேறுவதற்கும், வருங்காலத் தொழில் வளத்துக்கும் இக்கொள்கை தேவை யானது என்று முதல்வர் விளக்கினார்.

உணவு வகையில் முதல்வர் நேருவின் கோட்பாடே முற் போக்கான கொள்கை என்பதில் ஐயமில்லை. இத்துறையில் கட்டுப்பாடு இல்லாத தான்தோன்றித் தனமான வாணிகப்

பொது மக்களுக்கு நலம் பயக்காது. சென்னையில் இம் நோக்கித் தானும் சென்று, பிற மாகாணங்களுக்கும் இந்தி தம் இந்தக் 'கண்ணன் காட்டிய வழி'யைச் சிபாரிசு செய்த வர் இராஜகோபாலாச்சாரியாரே, இப்போது பஞ்ச நிலையின் றலையும் அரசாங்கக் கையிருப்பின் கரைவையும் சமாளிக்கப் தாய் பழய கட்டுப்பாட்டு விலையிலேயே கொள்முதலை மேற் ள்ளவேகூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் து. நேரு காட்டிய வழியை அவர் நேரடியாக அல்லாவிட்டா , சுற்று வழியிலாவது பின்பற்றவேண்டியதாகிவிட்டது.

ஆனல், கட்டுப்பாடுகூட நிலைமையைச் சரிவரச் சமாளித்து விடாது. உணவுப் பெருக்க இயக்கத்தின் நத்தை வேகமோ, குதிரை வேகத்தில் பாய்ந்து முன்னேறும் பஞ்ச நிலையை எளிதில் எட்டிப் பிடிக்க முடியாது. இவ்விரண்டிலும் இறக்குமதியிலும் கருத் செலுத்தவேண்டியது அவசியம். ஆனல் இந்திய அரசாங்கமோ நீண்டகாலத் திட்டத்தை நினைத்து, இறக்குமதித் தடையைத் தன் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையுமுன்பே இறக்குமதியைப் படிப் படியாக வேகமாகக் குறைப்பதும், அதைத் திட்டகாலத்துக்கு முன்னேயே நிறுத்து வதும் அவர்கள் குறிக்கோளாக இருந்து வருகிறது.

மாநில அரசியலார் இறக்குமதித் தடையில் காட்டும் ஆர்வம் உணவுப் பெருக்கத்தில் காட்டும் ஆர்வத்தை விட மிகுதி என்பது தெளிவு. தவிர அவர்கள் எதிர்பார்க்கும் நாட்டின் தன்தேவை நிறைவுக்குக் கட்டுப்பாடும், இறக்குமதித் தடையும் உதவவேண்டு மானல், அவை உணவுப் பெருக்கம், உழவர் நலம் ஆகிய இரண் டையும் குறியாகக் கொண்டு திட்டமிட்டு வகுக்கப்படவேண்டும். ஆனல் அவை இன்று இந்திய அரசியலின் போக்கில் சுண்டைக் காயளவு கூடக் கவனிக்கப்படவில்லை; சென்னை அரசியலோ அதைக் கடுகளவுகூடப் பேணவில்லை. பயனீட்டாளர் நலன்களை மட்டும் கூறிக்கொண்டே திட்டங்கள் அமைக்கப்படுகின்றன.

உண்மையான உணவுப் பெருக்கம் ஏற்பட வேண்டுமானல், உணவு பெருக்கும் உழவுத் தொழிலாளருக்கு நல்ல நேர்மை யான விலையும் உழைப்பூக்கமும் வாய்ப்பும் கிடைக்கவேண்டும். கட்டுப்பாடுகளும் இறக்குமதித் தடைகளும் நேர்மையான குறைந்த விலையை மட்டுமல்லாமல், கூடுமானமட்டும் நேர்மை யான உயர் விலையையும் பேணவேண்டியதவசியம். மேலும் பயனீட்டாளர்களிலேயே இந்நாட்டில் மிகப் பெரும்பாலோர் உழவுத் தொழிலாளர்களே. அவர்கள் நலனைப் புறக்கணித்துப் பயனீட்டாளர்களைக் கவனிப்பது என்பது உண்மையில் பய னீட்டாளர்களைக் கவனித்ததாகக்கூட ஆகாது. பயனீட்டாளரில் ஒரு சிறுபான்மையோர்களுக்கு—உயர் வகுப்பினர், உயர் நடுத்தர வகுப்பினர், இன்ப வாழ்வினர், நகர மக்கள் ஆகிய வர்களுக்கு மட்டுமே இது உதவும்.

நேர்மையான விலை அமைந்தால்கூட, இன்றுள்ள அந்த விலையின் மிகப் பெருப்பகுதியும் உணவு உண்டுப உழவுத் தொழிலாளருக்குப் போய்ச் சேராது. உழையா கிழார்களுக்கும். இடையீட்டு வணிகர்களுக்கும் அதன் பகுதி ஆதாய வடிவில் சென்று சேரும். நாட்டின் பான்மை மக்கள், அடிப்படைத் தொழிலாளர், நாட் முதுகெலும்பு என்று பலவாறாக மேடைகளில் புகழப்படுபவ உழவு வகுப்பினர். அவர்கள் நலன்களைப் புறக்கணி அரசியல் பெயரளவில் சுதேசிய அரசியலாய் இருக்க ஆனால் விதேசிய அரசியல்கள் செய்த செயலையே அவை செய் வரக்கூடும்.

உண்டுபண்ணுவோர், பயனீட்டாளர் ஆகியவர்களுக்கிடையே விலையையும் தம் ஆதாயத்தையும் தாமே அறுதி செய்யும் இடையீட்டாளர் ஒழியவேண்டும் என்றுதான் காந்தியடிகள் வாழ்நாள் முழுதும் கனவு கண்டார். அதே கனவு காணும் ஒரு காந்தீயக் காங்கிரஸ் இன்றைய இந்தியாவின் மிகப்பெருந் தேவை ஆகும்.

தனி மனிதர் நில உடைமை எல்லை வகுத்தல், அவ் எல்லைக்கு மேற்பட்ட அளவுக்கு மிகுதி வரி, சாவுவரி விதித்தல், உழையர்த நில உரிமையுடைய தனிமனிதர் நிலையங்களைப் படிப்படியாக ஒதுக்கி, உழுதொழில் உழவர் உரிமைகளைப் பெருக்கல் ஆகியவற்றுக்கான நல்ல சட்டங்களை அத்தகைய காந்தீயக் காங்கிரஸே தேச நலனில் அக்கரைகொண்டு நிறைவேற்றப் பாடுபடமுடியும். இந்திய மாநிலமெங்கும் தளர்ந்துவரும் காந்தீயத்தை நிலைநிறுத்தக் காங்கிரஸ் தலைவர்கள் முன் வருவார்களா?


**சர்ஜீவன் சிலாஜித் லேகியம்** எல்லா காலங்களிலும் பலத்தை அளிக்கிறது.

இது ஹிமாலய மலைகளிலிருந்து எடுக்கப்பட்ட சிறந்த லேகியம்




இதை உபயோகிப்பதால் தேக புஷ்டியும், தாது விருத்தியும் ஏற்படுவதுடன், வயிற்று வலி, பசியின்மை, க்ஷயம், இருமல், மலச்சிக்கல், வெகு மூத்திரம், வாய்வு, மூலம் முதலிய சகல ரோகங்களும் நிவர்த்தியாகும். மாணவர்கள் ஞாபகசக்தி பெற்று சுறுசுறுப்படைவார்கள். வயோதிகர்கள் பலம் பெறுவார்கள். ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல ரோகங்களும் தீரும். குழந்தைகள் ஆரோக்கியமடைவார்கள்.

விலை:- **44** நாட்கள் டப்பி ரூ. **5-4-0** | தபால் செலவு
**22** ,, ,, ரூ. **3.4-0** | இனாம்

நீலகிரி டிப்போ, அரிசிப்பேட்டை சவுக், பெங்களூர் சிடி.

NILGIRI DEPOT, AKKIPET SQ., BANGALORE CITY.

த் தொடர்ச் சித்திரம்

# தாம்பத்தியம்

எழுதியவர் : ‘மாயாவி’

**சுதர்சனது தாயின் சாவின் அடிவாரத்தில் சுதர்சன்—உமா இருவரின் தாம்பத்தியம் வாழ்வு கொண்டு பிறந்தது. புதிர்கள் பலவற்றை உள்ளடக்கிக் கடைசியில் முடிவு சொல்லுகிறது கதை. உணர்ச்சி செறிந்த உயிருள்ள அழகிய கதை!**

ஏழு ஆண்டுகள் வெளிநாட்டில் இருந்துவிட்டு அன்றுதான் இந்திய மண்ணை மிதித்தேன். பம்பாயில் கப்பலை விட்டிறங்கியதும் எங்கே தங்குவது என்று சிலருக்கு எழும் பிரச்சினை எனக்கு எழவில்லை. சுங்க அதிகாரிகளின் பரிசோதனைகள் முடிந்து சாமான்களுடன் துறைமுகத்தை விட்டு வெளியே வந்ததும், நேரே ஒரு டாக்ஸியில் ஏறி அமர்ந்து “மலபார் ஹில்லுக்கு விடப்பா” என்றேன்.

மலபார் ஹில்லில் எனது நெடுநாளைய நண்பன் சுதர்சன் வசித்து வந்தான். சுதர்சனை நண்பன் என்று குறிப்பிடுவதைவிடச் சகோதரன் என்று குறிப்பிடுவது பொருந்தும். ஏறக்குறையப் பதினைந்து ஆண்டுகள் நாங்கள் அவ்வாறுதான் பழகிவந்தோம். இவ்வளவுக்கும் நாங்கள் வெவ்வேறு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். அவன் குஜராத்திச் சீமானின் மகன். நான் தமிழன். ஆனால், ஜாதியோ பாஷையோ, நட்புறவு முதிருவதற்குத் தடையாயிருந்தது கிடையாதே!

என் வருகையை முன்கூட்டி அறிவிக்காததால் சுதர்சன் என்னைக் கண்டதும் திகைப்படைந்தான். ஆனால் அது ஒரு கணந்தான். மறுவிநாடி ஆவலோடு ஓடிவந்து என்னைக் கட்டிக்கொண்டான்.

“ஸ்ரீதர்!”

“சுதர்சன்!”

இருவருக்கும் ஆனந்த மிகுதியால் பேச வார்த்தைகள் எழவில்லை.

“அத்தை சவுக்கியமா, சுதர்சன்?”

நான் குறிப்பிட்டது சுதர்சனின் சொந்த அத்தையைத்தான். அவளே அவனை வளர்த்தவள்; ஆளாக்கியவள். ஏன்? அவனுக்கு எல்லாமே அவள்தான்.

சுதர்சனின் பிறப்பு வரலாறு சிறிது மர்மம் நிறைந்தது. அதைப் பற்றி அவனுக்கே திட்டமாக எதுவும் தெரியாது. அந்த வட்டாரத்தார், அவனைக் குஜராத்திக்காரருக்கும் வெள்ளைக்காரிக்கும் பிறந்தவன் என்று பேசிக்கொள்ளுவார்கள். ஆனால், அவன் பிறந்தபோது உடனிருந்த அவனுடைய அத்தை, சுதர்சனின் தந்தைக்கும் தாரா என்ற ஓர் பஞ்சாபிப் பெண்ணுக்கும் முறைப்படி ரிஜிஸ்தர் மணமாகிய பின்னர் அவன் உதித்தான் என்று கூறுவாள். இந்தத் தகராறுகளுக்கெல்லாம் அடிப்படை என்ன தெரியுமா? காலாகாலத்தில் தாம்பத்தியத்தில் ஈடுபடாத குறைதான். அது அவர்கள் குடும்பத்துக்கே ஏற்பட்ட தொத்துவியாதி. சுதர்சனின் தாத்தாவுக்கும் முன்பிருந்து அக் குடும்பத்து ஆணும் சரி, பெண்ணும் சரி, வாலிப வயதில் மணவினையில் ஈடுபட்டதே கிடையாது. இந்த வியாதி நாள்படப் பெருகி வந்ததென்றுதான் சொல்லவேண்டும். ‘சுதர்சனின்

அத்தை லதாதேவி இருக்கிருளே, நான் எழு வருஷங்களுக்கு முன்பு வெளிநாடு சென்றபோது அவளுக்கு நாற்பத்தெட்டு வயது. அன்றளவும் அவள் கன்னிப் பெண்தான். அவளால் வளர்க்கப்பட்ட சுதர்சனே? அவன் அப்பொழுது காளைப் பிராயத்தவனுக இருந்தும், தனது பிறப்பு மர்மத்தைக் காரணமாகக் காட்டி, கலியாணப் பேச்சை எடுக்கும் எனக்கு வாய்ப்பூட்டு இட்டுவிடுவான்.

சுதர்சனின் தாத்தா தாம்பத்தியப் பிணைப்பில் ஈடுபட நேர்ந்தபோது அவருக்கு வயது நாற்பத்தெட்டாம். பிரமச்சரியத்தை அளவுகடந்து சோதித்து, கடைசியில் அது வெறி கொண்ட மாடு கட்டை அறுத்துக் கொண்டு வேலியேறி வீழ்வது போல, தன் வீட்டுச் சமையற் காரியையே மணக்கச் செய்தது.

அத்தை கூறிய அந்தத் தாராவையோ அல்லது ஊரார் ஏளனித்த வெள்ளைக்காரியையோ அவர் தாம்பத்திய உறவு கொண்டபோது, அவளுக்கும் ஏறக்குறைய முப்பத்தைந்து பிராயமாகியிருந்ததாம். தந்தை இறந்ததும் மேல்படிப்புக்காகத் தங்கை லதாவுடன் கேம்பிரிட்ஜுக்குச் சென்ற இடத்தில் அவருடைய பிரமச்சரியம் கட்டவிழ்த்துக் கொண்டது. சுதர்சன் பிறந்தான். அவன் பிறப்பைப்பற்றிக் கதைகள் பிறக்குமாறு ! சுதர்சனுக்கு ஒருவயது நிறையும் முன்பே அவன் அன்னையும் தந்தையும் விமானவிபத்தில் உயிரிழந்தனரென்று அத்தை லதாதேவி சொல்லுவாள். எனவே தான் சுதர்சனுக்குக் குழந்தைப் பிராயத்திலிருந்து லதாதேவியே தாயும் தந்தையுமாக இருக்க நேரிட்டது.

'அத்தை சவுக்கியமா' என்ற என் கேள்விக்குப் பதிலாகச் சுதர்சன் "அத்தையா? அது யார்?" என்று மறுகேள்வி கேட்டபோது நான் திகைத்துப் போனேன்.

"சரியாய்ப்போயிற்று. ஏண்டா அப்பா, உன் பிரமச்சரியத்தின் வீரியத்தில் பித்தம் முற்றிப்போய் விட்டதோ? பின், உன்னை தெடுத்த லதா அத்தையையே யோடு மறந்துவிட்டு, 'யார்?' கேட்கிருயே" என்றேன் வி புடன்.

சுதர்சன் சிரித்தான். ஆனல் சிரிப்பில் மலர்ச்சி இல்லை. செ ஞன்; "முதலில் என் பிரமச்சா தின் வீரியம் எப்பொழுதோ த சாய்ந்துவிட்டது. அப்பனே!"

"என்ன? நீ தாம்பத்தியத்தில் ஈடுபட்டுவிட்டாயா?"

"இன்னும் சந்தேகமா உனக்கு? இதோ அத்தாட்சி தருகிறேன்" என்ற அவன் உள்ளே திரும்பி "உமா" என்று விளித்தான்.

மெல்லிய இளங்குரல் ஒன்று "இதோ வந்தேன்" என்று பதில் அளித்தது. தொடர்ந்து ஓர் சந்திர பிம்பம் கூடத்தில் பிரதிபலித்தது.

"இதோ, இவன்தான் அமெரிக்காவுக்குப் போயிருக்கிருன் என்று சொன்னேனே, அந்த என் சிநேகிதன் ஸ்ரீதர்."

"ஸ்ரீதர், இவள் ஸ்ரீமதி உமாதேவி சுதர்சன்; சிறந்த ரேடியோப் பாடகி"

உமாவின் 'நமஸ்தே'க்குப் பதில் வணக்கம் தெரிவித்துவிட்டு, "கடைசியில் லதா அத்தையின் கொள்கையிலிருந்து மாறுபட்டு விட்டாயே, சுதர்சன்" என்றேன் வேடிக்கையாக.

"எங்கே அவர்கள்? அவர்களைச் சற்று கிண்டிவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டும்"

"அவர்களா? அவர்கள் அதோ!" சுதர்சன் எதிரே சுவரில் தொங்கிய லதாதேவியின் படத்தைச் சுட்டிக் காட்டிஞன்.

"அத்தை இறந்துவிட்டார்களா?"

"ஆமாம்; இவளுக்கும் எனக்கும் தாம்பத்தியப் பிணைப்பு ஏற்பட வேண்டி அவர்கள் பிராணனை விட்டார்கள்."

"நீ சொல்வது புரியவில்லையே சுதர்சன்!"

துதான்; அவள் மடியில் ...னே அதைப் புரிந்து ...வில்லையே, ஸ்ரீதர்!"

"...வரமாகச் சொல், நண்பா"

"...சொல்லத்தான் போகிறேன். முதலில் குளித்துச் சாப்பிடு...ம்" என்று என்னை உள்ளே ...ச் சென்றான் சுதர்சன்.

★

குளித்து உணவுண்டு மாடிக்கு வந்தோம். சுதர்சன் தனது தாம்பத்தியப் பிணைப்பைச் சொல்ல ஆரம்பித்தான்.

"உமாவைப் பார்த்தாயா, ஸ்ரீதர்? அவளைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான்.

"அவள் பிரமதேவனின் வார்ப்படம், எழிலுருவின் மாதிரி...? இது உருவைப் பற்றிய என் எண்ணம். ஆனால் உள்ளத்தைப்பற்றி...?"

"அதுவும் தங்கமானதுதான், ஸ்ரீதர். அமைதியின் எல்லை; பொறுமையின் பிறப்பிடம்; மென்மையின் முழு உருவம். நான் பம்பாய்ப் பிராந்தியத்தின் ரேடியோ நிலைய டைரக்டராக நியமிக்கப்பட்டபோது, ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அவளைச் சந்தித்தேன். நான் கலையைப் பூசிப்பவன் என்பதை நீ அறிந்தவனாயிற்றே! எனவேதான் இந்தக் கலாமோகினியிடம் எனக்குக் கவர்ச்சி ஏற்பட்டது. என் பிறப்பைச் சூழ்ந்திருந்த மர்மம் ஒரு மாசமாக என் உள்ளத்தில் தங்கி இராவிட்டால், உமா என்றோ அங்கே உரம் பெற்றிருப்பாள். ஆனால் அந்நிலையிலும் கூட அவளை என்னால் அறவே மறக்க முடியவில்லை. அவளை என் இதயராணியாக ஏற்றுக்கொள்ள முடியாவிடினும், கலைவாணியாகப் பூசித்து வந்தேன்.

உமா ஏழை; கத்யவாரிலிருந்த ஓர் ஏழைக் குமஸ்தாவின் பெண் அவள். அன்னையை இழந்தவள். தந்தையும் நோயும் நொடியுமாக அடிக்கடி யமனுலகை எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார். இரு உயிர்களைக்கொண்ட அக்குடும்பம் ஏழைமையில் உழன்றது. அகமதாபாது ரேடியோவில் மூன்று மாதத்துக்கு ஒரு தடவை அவளுக்குப் பாட ஒரு 'சான்ஸ்' கிடைக்கும். அதில் கிட்டும் ஊதியந்தான் அடுத்த 'சான்ஸ்' வரை அவர்களுக்கு ஜீவாதாரம்.

வேலையேற்ற சில மாதங்களுக்கெல்லாம் பிராந்திய நிலையங்களுக்கு ஓர் சுற்றுப் பிரயாணம் கிளம்பினேன். அகமதாபாது வந்திருந்தமையால் அவ்விஷயமாகப் பரிசிலனை செய்ய அங்கே சில நாட்கள் தங்கினேன். நிலையத்துக்காக அழைத்து வந்த 'டெக்னீஷியன்'கள், பாடகர், வாத்தியக்காரர்கள் இவர்களில் யார் யாரிடமிருந்து புகார்கள் வந்திருந்தனவோ, அவர்கள் அனைவரையும்



எனது அறைக்கு வரவழைத்துத் தனித்தனியே விசாரணைகள் நடத்தினேன். உமாவிடமிருந்தும் ஒரு புகார் மனு வந்திருந்தது. அதில் தனக்கு நியாயமான ஊதியம் அளிக்கப்படவில்லையென்றும், பிராந்திய டைரக்டர் வஞ்சகமாகத் தன்னை மூன்ருந்தரப் பாடகர்களின் ரகத்தில் ஒதுக்கி வருஷத்துக்கு நான்கு 'சான்ஸ்' களே தருவதாகவும், தன்னுடைய திறமையைப் பரிசோதித்து நலம்புரிய வேண்டுமென்றும் கோரப்பட்டிருந்தது.

உமா விசாரணைக்கு வந்தாள். அவளுடன் அவள் தந்தையும் உள்ளே வந்தார்.

"நீங்கள் சற்று வெளியே இருங்கள்" என்றேன் நான்.

அவர் என்னைப் பார்த்து விழித்துக்கொண்டு நின்ருர்.

"என்?"

"மன்னிக்கவேண்டும். எனக்கு உலகத்தின் மீது நம்பிக்கை அற்றுவிட்டது. முக்கியமாகப் பெரும் பதவி வகிக்கும் இளம் வாலிபர்களிடம்......"

எனக்குக் கோபம் வந்து விட்டது. "இது உங்கள் கோழைமையைக் குறிக்கிறது. மனிதர்கள் எல்லோரும் மிருகங்களல்ல" என்றேன்.

"மனிதர்கள் மனிதர்களாகத்தான் பிறக்கிருர்கள்; வளருகிருர்கள்; ஆனல் அழகு மயக்கம் அவர்களின் மனிதத்தன்மையை அழித்து விடுகிறது. டைரக்டர் ஸார், என் உமாவின் புகாரின் அடிப்படையே இதுதான்"

அவர் கூற்றில் உண்மை இருக்க வேண்டும் என்பதை உமாவின் அப்பழுக்கற்ற தோற்றம் எனக்கு எடுத்துரைத்தது. அவரையும் கூட வைத்துக்கொண்டே விசாரணையை ஆரம்பித்தேன்.

அவளுடைய புகாரின் சாரம் இதுதான்: பிராந்திய நிலைய டைரக்டரை உமாவின் அழகு கவர்ந்தது. அவர் பிரமச்சாரி; அவளை மணந்து கொள்ள விரும்பினர். உமாவின் அப்பாவிடமே தமது கருத்[illegible] யிட்டார். அவருக்கும் இஷ்[illegible] ஆனலும் பழகி அறியாத [illegible] தரின் குணத்தைப் பரிசீலனை[illegible] விரும்பினர். 'அவளுடைய க[illegible] ணம் ஆலோசித்துச் செய்ய வேண்[illegible] விஷயம்' என்ருர். வாலிப மு[illegible] கும், தாம் ஓர் நிலைய நிர்வாக[illegible] என்ற திமிரும் டைரக்டரை ஆ[illegible] வித்தன. தமது அதிகாரப் ப[illegible] தைப் பயன் படுத்தி அவர்களைப் ப[illegible] முறுத்தித் தம் இச்சைக்குட்படச் செய்ய முயன்ருர். இது உமாவுக்கும் அவள் தந்தைக்கும் அவருடைய நேர்மையற்ற சுபாவத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகப் புலப்பட்டது.

அப்பேதைப் பெண்ணின் நிலைக்கு என் மனம் மிக இரங்கிற்று. எத்தனைதான் எச்சரித்துவிட்டாலும், அழகு மயக்கம் கொண்ட ஒருவனின் கையை எதிர்பார்க்கும் நிலையில் இருக்குமட்டும், அவளுடைய பெண்மைக்கே ஆபத்து எற்படக் கூடும் என்ற நினைவு என்னுள் ஓடிற்று.

"பம்பாய் ரேடியோ நிலையத்துக்கு வருகிறீர்களா? அங்கே உங்கள் மகளுக்கு நிரந்தரமாக ஓர் வேலை தரச் செய்கிறேன். மாதம் நானூறு ரூபாய் கிடைக்கும். உங்கள் உடல் நிலைக்கும், அவ்வூர் சீதோஷ்ணம் இதமாக இருக்கும்" என்றேன்.

"என்ன ஆலோசிக்கிறீர்கள்? நான் மனிதன்; மனிதனுக, மனிதத் தன்மையுடன் வாழ விரும்புபவன்"

"அதற்கில்லை" என்று இழுத்தார் உமாவின் அப்பா.

"போய் விடுவோம், அப்பா" என்ருள் உமா. அவள் பதிலில், வயிற்றிலடிக்கும் அந்தத் துஷ்ட மிருகத்திடம் அவதிப்படுவதை விட, வயிற்றுக்கு அளிக்கும் இந்த மிருகத்திடந்தான் சில காலம் வேலை செய்து பார்க்கலாமே, என்ற முடிவு தொனிப்பதாகவே நான் ஊகித்தேன்.

…, என் ஊகம் எவ்வளவு …ாது என்பதைக் காலம் காட்டிற்று.

…வுக்குப் பம்பாய் ரேடியோ …ஷனில் நிலையப் பாடகியாக …ல போட்டுக் கொடுத்தேன்.

…ளுடைய கலையும், அழகும் என் …ம் ஓர் கவர்ச்சியை உண்டு …ணினவாயினும், அளவோடு …தியோக தோரணையில் மாத்…ரமே அவளுடன் பழகினேன். ஆனால், உமாவின் தந்தை என்னிடம் மிகவும் நெருங்கிப் பழகமுற்பட்டார். அவளுடன் தினமும் ரேடியோ நிலையத்துக்கு வருபவர் என்னை ஒரு நாளாவது கண்டு சிறிது நேரம் வார்த்தையாடாதிருந்தது கிடையாது. ஆசாமி என்னை அளவெடுக்கிறார், என்று நினைத்து உள்ளத்துள் சிரித்துக் கொண்டேன்.

ஆம், அவர் என்னை அளந்து கொண்டு தான் இருந்தார். உமாவுக்கு எத்தனை தூரம் கெடுதி செய்யக் கூடியவன் என்பதை யல்ல; அவளுக்கு எத்தனை தூரம் தகுதியானவன் என்பதைத் தான்.

ஒரு நாள் பேச்சினூடே மெல்லச் சொன்னார்: “வரும் சனிக்கிழமை உங்களுக்கு ஒரு சிறிய விருந்து கொடுக்கலா மென்று உத்தேசித்திருக்கிறேன். தயவு செய்து வீட்டில் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வரவேண்டும்”.

“எனக்கு எதற்குத் திடீரென்று விருந்தும், மருந்தும்?” என்றேன் நான்.

“நாங்கள் இப்பொழுது உண்பது உங்கள் உணவு, அதனால் தான்” என்றார்.

“தவறு; அது இந்திய அரசாங்கத்தின் உணவு. அதுவுங்கூட உங்களுக்குத் தருமமாக வழங்கப்படுவதல்ல; வேலைக்கேற்ற கூலி”.

“இருந்தாலும் அதை வழங்கச் செய்த கருவி நீங்களல்லவா?”

“கருவி கடமையைச் செய்யும்; பயனை எதிர்பார்ப்பது அதன் வேலையல்ல”.

“நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. உமா மிகவும் ஆசைப் படுகிறாள். தயவு செய்து வீட்டில் எல்லோரையும்...........”

அவர் எதை அறிய விரும்பினார் என்பதை இப்பொழுது நான் புரிந்து கொண்டேன். “என் வீடு, என்னையும், என் அத்தையையும் கொண்டது. அத்தை விருந்து வைபவங்களில் கலந்து கொள்வது கிடையாது”.

“உங்களுக்குப் பெற்றோர், மனைவி...........?”

“யாருமில்லை, நான் சந்நியாசி!”

“அர்ஜுன சந்நியாசியல்லவே!” என்று கூறி அவர் கல கலவெனச் சிரித்தார்.

அவர் பேச்சின் நயத்தை நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன். விபரீத ஆசைகளை வளர விடலாகாதென்று என் நிலையைத் திறந்தே சொல்லி விட்டேன். “நான் தாம்பத்தியத்தில் ஈடுபட விரும்பாதவன்; முடியாதவன்”.

“கோபித்துக் கொள்ளக்கூடாது; அதை ஏன் என்று தெரிந்து கொள்ளலாமோ?”

“மன்னித்துக் கொள்ளுங்கள்; அது என் சொந்த விஷயம்.”

“சொந்த விஷயத்தைக் கிளற அன்னியனான எனக்கு உரிமையில்லை தான். இருந்தாலும், ஓரளவு பூடகமாகவேனும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.”

“உங்கள் நோக்கத்தை அறிவேன். உமாவுக்கு நான் ஏற்றவனல்ல.”

உமாவின் அப்பாவுடன் நிகழ்ந்த இந்தச் சம்பாஷணை அவருடைய மனநிலையை மாத்திரம் எனக்கு உணர்த்த வில்லை; உமாவின் மனநிலையையும் அதுவே எனக்கு அறிவித்தது. அவளுடைய வாயாக நின்று அவர் பேசினார் என்ற என் ஊகம் பொய்க்க வில்லை. அதற்கு அத்தாட்சியாக வந்து நின்றது மறு நாள் உமாவிடமிருந்து வந்த லீவுக் கடிதம். தனக்கு உடல் நலமில்லை என்றுதான் அதில் குறிப்பிட்

டிருந்தாள்; ஆனால் மனந்தான் நல மில்லை என்பதை நான் தெரிந்து கொள்ளாமலில்லை.

இரண்டொரு நாட்களுக்குப் பிறகு அவள் வேலைக்கு வந்தாள். ஆனால், முகத்திலே பழைய உற்சாக மில்லை. உள்ளத்தின் ஏமாற்றம் அனைத்தும் முகத்தில் வழித்துப் பூசப் பட்டிருந்தது. புரோகிராம் லிஸ்டை வாங்கிப் போக வந்தவள், வழக்கம் போல, 'நமஸ்தே' போட்டபோது அதில் உயிர் இல்லை.

இந்த விதிக்கு நான் என்ன செய் வது, ஸ்ரீதர்? மனிதர் தாமறியாமலே பிறருக்குப் பிழை செய்துவிடும் இந்த துர்பாக்கிய நிலை என்னை மிகவும் வருத்திற்று.

அந்த வருத்தந்தான் காரணம் போலும்! அன்றிரவு எனக்குக் கடுமையான ஜுரம் வந்துவிட்டது. நாலைந்து நாட்கள் கண் விழியாது கிடந்தேன். டாக்டர் வந்து பார்த் தார். கவலையோடு அருகில் அமர்ந் திருந்த அத்தையிடம், "இது உங்க ளால் ஏற்பட்ட வியாதி" என்றார்.

"என்ன?" என்றாள் அத்தை திகிலுடன்.

"ஆமாம், இயற்கையுடன் போர் புரிவதால் ஏற்படும் நோய் வகை களில் இதுவும் ஒன்று. இருபத்து எட்டு வயதில் ஒரு வாலிபனுக்கு எது தேவையோ அதைச் செய்து வைக்க நீங்கள் தவறி விட்டீர்கள்".

"இது என்ன பிதற்றல், டாக்டர்?"

"பிதற்றலல்ல, லதாதேவி; உண்மை பேசுகிறது. ஐம்பது வயதா கியும் நான் கன்னியாக இருக்க வில்லையா என்று கேட்பீர்கள். ஆனால், பெண்ணின் உடற் கூறு வேறு; ஆணின் உடற் கூறு வேறு. தாம்பத்திய உறவு தக்க காலத்தில் இரு சாராருக்கும் அவசியம் தான் என்றாலும், ஆணுக்கு அது இன்றி யமையாதது. மனத்தைக் கட்டுப் படுத்தும் சக்தியும், அதற்கேற்ற சூழ் நிலையும் ஒரு சிலரை நோயற்ற நித்திய பிரம்மச்சாரிகளாக இருக்கச் செய்யலாம். ஆனால், உங்கள் மருமகன் கானகத்தி செடி விலங்குகளிடையே வில்லை. அவர் எழிலுலகி யில் வசிக்கிறார். அவருடைய திடமாக இருக்கலாம்; ஆனால் ஒத்து வரவேண்டாமா? இது ஆ நிலை. இந்த வியாதிக்கு மரு தாம்பத்தியந்தான். அந்தச் சைக்கு உடனே வழி பாருங்கள்'

என் கலியாண விஷயத்தை பற்றி அத்தை கொண்டிருந்த முடிவைத்தான் நீ அறிவாயே. என் தீர்மானத்துக்குப் பக்க பலமாக, 'எங்கள் வம்சவாரிக் குணம் அது. நாற்பது வயதுக்கு மேலே தான் எங்கள் குடும்பத்தில் அநேகமாக மணம் செய்து கொண்டிருக் கின்றனர். அந்தப் பிராயம் வந்ததும், அவனே அவனுக்குரியவளைத் தேடிக் கொள்வான்' என்று அவள் உன் னிடம் ஆயிரந் தடவை கூறியிருக் கிறாளே! ஆனால், இன்று இந்த டாக்டர் கிளப்பிய புதுப் பிரச்சினை அவள் திட்டத்தை எத்தனை தூரம் பாதித்துள்ளது என்பதை அறிய அவள் முகத்தை நோக்கினேன்.

அத்தையின் கண்களில் கண்ணீர் வழிந்தது!

"அத்தை!"

அவள் ஏதோ கூற வாய் திறந் தாள். ஆனால், வாசலிலிருந்து வந்த "நமஸ்தே மா" என்ற குரல் அவள் பேச்சைத் தடை செய்தது.

என் பார்வை வாயிலில் சாய்ந்த போது; அங்கே உமா நின்று கொண் டிருந்தாள்.

"நமஸ்தே ஸார்; உடம்பு சுக மில்லையாமே; பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்".

அத்தை என்னையும் உமாவையும் மாறி மாறிப் பார்த்தாள்; அவள் கண் களில் தளும்பி நின்ற கண்ணீர் வற்றிப் போயிற்று.

"இவள் எங்கள் நிலையப் பாடகி ஸ்ரீமதி உமாதேவி" என்று அத்தைக்கு அவளை அறிமுகம் செய்து வைத்தேன்.

ாம் அவர்கள் எற்றி வைத்த
' என்றாள் உமா.
த என்னை மீண்டும் காரணக்
ாடு பார்த்தாள்.
பகள் நிலையத்துக்குப் போக
ல, உமாதேவி?" என்று
டேன்.

இல்லை, அப்பாவுக்கு வழக்க
ன கபவாத ஜுரம். நேற்றும்
ன்றும் நிலையத்திற்குப் போக
முடியவில்லை. உங்களுக்கு உடல் நலமில்லை என்று கேள்விப்பட்டேன்; பார்த்துவிட்டுப் போகலா மென்று வந்தேன்".

"அப்பாவுக்கு எப்படியிருக்கிறது?"

"இத்தடவை காய்ச்சல் மிகவும் மும்முரம்; என் கவலையே அவருடைய வியாதிக்கு முக்காலும் காரணம்"

"அப்படியிருப்பவரைத் தனியே விட்டு எதற்காக இப்பொழுது நீங்கள் இங்கே வந்தீர்கள்".

"எனக்கு அவரை விட உயர்ந்தவர்களில்லையா நீங்கள்; வாழ வழி செய்த உத்தமர், தந்தையிலும் உயர்ந்தவரில்லையா, அம்மா?"

அத்தை பேசாமல் தலை அசைத்தாள். உமாவின் பேச்சும் வனப்பும் அவளையும் கவர்ந்து விட்டது போலும்!

"ஆமாம்; உங்களுக்கு என்ன உடம்பு?" என்று கேட்டாள் உமா

என்னை முந்திக் கொண்டு அத்தையே அவளுக்குப் பதில் அளித்தாள்: "உன் அப்பாவுக்குச் சமமானவன் என்று சொன்னையல்லவா? அவரைப் போலவே இவனுக்கும் மனோவியாதி வந்திருக்கிறது."

உமா என்னிடம் பேசிப்பழகியது மிகக்குறைவு. அப்படியிருக்க இன்று என்ன துணிச்சலோ, தெரியாது, தைரியமாக வீடு தேடிவந்து, முதிய என் அத்தையின் முன்பு எனது காதலி போலப் பேசிவிட்டாள். அதோடு நின்றாளா?



அத்தையின் தலை மறைந்ததும் "மனோ வியாதியா? அதெப்படி என் வியாதி உங்களைப் பீடித்தது, ஸார்?" என்று மிகச் சரளமாகப் பேச்சைத் துவக்கினாள்.

"அதுவா? அது நம் இருவர் மனமும் ஒன்றுபட்டு விட்டதால்" என்று சொல்லத்தான் என் நாத் துடித்தது. ஆனால் நான் அதை அடக்கிவிட்டேன்; சற்றே கோபம் கலந்த குரலில் சொன்னேன்: "இதெல்லாம் என்ன நாடகம் உமாதேவி? நீங்கள் யார்? நான் யார்? ஒரு இள மங்கை, வாலிபனை தனது மேலதிகாரியை, அவன் நோயுற்றிருக்கிறான் என்ற காரணத்தோடு தனியே வந்து சந்தித்தாலும், உலகம் என்ன நினைக்கும்? அப்படி என்ன நெருங்கிய தொடர்பு நம்மிடையே இருக்கிறது? இந்த ரேடியோ நிலையத்தில் உங்களைப் போல இன்னும் நான்கு இள மங்கைகள் பாடகிகளாக இருக்கிறார்கள். அவர்களில் யாராவது இங்கே வந்து என்னைப் பார்த்தார்களா?"

உமா குறுக்கிட்டாள் : "அவர்கள் உங்களைப் பார்க்க வரவில்லையென்றால், அது அவர்கள் தவறு. மேலும் அவர்களைப் போலவா நான்?"

"அப்படித்தானா? அவர்களிலிருந்து நான் மாறுபட்டவன் என்பதை உங்கள் உள்மனம் இன்னும் உங்களுக்கு அச்சுறுத்தவில்லையா?" என்று நான் கேட்டபோது உமா விம்மினாள்.

நெஞ்சத்திலிருந்து வந்த ஏக்கக் குரல் என் நெஞ்சத்தைத் தொட்டது. "உமாதேவி, உங்கள் உள்ளத்தை நான் முன்பே அறிந்து கொண்டுவிட்டேன். ஆனால் உங்களைஏற்க நான் தகுதியற்றவன்."

"இதுதான் அப்பாவிடம் சொல்லி அனுப்பிய பதிலாயிற்றே ; எனக்கும் அதுவேதானா பதில்?"

"ஆமாம்."

"காரணம்? நான் ஏழை; உங்களிடமே சேவகம் செய்யும் ஓர் ஊழியக்காரி என்பதுதானா?"

"இல்லை."

"பின் என்னதான் காரணம், எனது அன்பை, எனது காதலை, எனது வார்த்தை நிராகரிப்பதற்கு?"

"ஒரு நீசனை என் அன்புக்குகந்த உமா மணக்கலாகாது என்பதுதான் காரணம்."

"என்ன? யார்? நீங்களா நீசன்?"

"ஆமாம், உமாதேவி; பிறப்பு மர்மமான ஒரு வாலிபன் எத்தனை தான் உயர்ந்த நிலையிலிருந்தாலும் அவன் நீசனுக்குச் சமமானவனே."

"என் அன்பை இந்தத் தாழ் அடைக்காது, சுதர்சன்"

"உங்கள் அன்பு ஒரு நீசனிடங் கூடப் பாய்ந்தோடும் வலுப் பெற்றதாக இருக்கலாம்; ஆனால் நான்—என்னையே யார் என்று அறியாத நான், ஓர் உத்தமப் பெண்ணைத் துணைவியாகக் கொண்டால் நீசனிலும் கடையனாகிவிட மாட்டேனா?"

"இல்லை; இதை உண்மைக் காரணமென்று கருத என் மனம் மறுக்கிறது. சொல்லுங்கள் சுதர்சன்; உண்மையாக, உள்ளத்தை [illegible]மல் சொல்லுங்கள் ; நீங்க[illegible] விரும்பவேயில்லையா?"

"விரும்புவேன், உமாதே[illegible] பிறப்பின் உண்மை வரலாறு [illegible]தால்..."

"அதுதான் தெரிந்ததாயிற்[illegible] நான் எல்லாம் விசாரித்துவிட்டே[illegible] சுதர்சன்; உங்கள் அத்தை[illegible] வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்[illegible]யில்லையா?"

"அத்தை தனது மருமகன் மனிதரோடு மனிதனாக நடமாடவேண்டுமென்று எதை வேண்டுமானாலும் சொல்லலாம் அல்லவா?"

"அப்படியானால் எப்பொழுது, எவர்தான் நீங்கள் மாசற்றவர் என்பதை உங்களுக்கு நிரூபிக்கப் போகிறார்கள்?"

"அதைக் கடவுள் ஒருவரே செய்ய வல்லவர். அதனால்தான் இந்தப் பிறவியில் எனக்குத் தாம்பத்தியப் பிணைப்பில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்."

எங்கள் சம்பாஷணைக்கு முத்தாய்ப்பாக அத்தை இச்சமயத்தில் டீயுடன் உள்ளே வந்தாள். டீயைக் கலந்து உமாவுக்குக் கொடுத்துக் கொண்டே, "என் உமா, அப்பா தள்ளாப் பிராயத்தில் இருக்கிறார் என்கிறாய்; அவர் நோய் நீங்கித் திடமாக வாழக் கடவுள் அருளட்டும். இருந்தாலும், துரதிர்ஷ்ட வசமாக அவருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், சின்னப் பெண் நீ தனியே நிற்கவேண்டி வந்துவிடுமே" என்றாள்.

உமா லேசான மலர்ச்சியுடன், "என் வாழ்வை வகுத்தவர் உங்கள் மருமகன்; அவரே முன் நின்று, உரிய காலத்தில் என் தனிமையைப் போக்கவும் வழிசெய்வார்" என்றாள்.

அத்தை என்னை நோக்கிச் சிரித்தாள்.

ஆனால் நான் சிரிக்கும் நிலையில் இல்லையே!

★

வீட்டுக்குத் திரும்பியதும், உமா ரொம்ப நல்லபெண், , சுதர்சன்! சிறிது நோத் என்னை மிகவும் கவர்ந்து ள். "என்னைக் கேட்டால், டி ஒருபெண் கிடைத்தால் நீ இந்த வியாதிக்கு மாற்றுத் க்கொண்டுவிடலாம்."என்றாள்!

'அதுதான் உன் கொள்கைக்கு ரோதமாயிற்றே அத்தை"

"கொள்கையைக் கொண்டு குப்பையில் போடடா! சுதர்சன், அதெல்லாம் வெறும் வேஷம், பயனற்ற வீம்புக்குப் போடும் பகல் வேஷம் என்றுதான் இன்று டாக்டரின் முடிவைக் கேட்டபிறகு எனக்குத் தோன்றுகிறது."

"வேஷமோ, வேஷமில்லையோ? என் வரையில் அதை நன்றாகப் போட்டு நடிக்க வேண்டியவனாகவே இருக்கிறேன்"

"ஏண்டா அப்பா, அப்படி?"

"அதன் காரணத்தை நான் சொல்ல வேண்டுமா, அத்தை?"

"உன் பிடிவாதம் தவறானது சுதர்சன். உன் அப்பாவுக்கும் உன் அம்மாவுக்கும் உடனிருந்து ரிஜிஸ்தர் திருமணத்தை நிகழ்த்தி வைத்தவள் நான்."

என் வாழ்வில் திருப்பத்தைக் காணப் பல திக்கிலிருந்தும் முயற்சிகள் கிளம்பி வருவதாகவும், அதிலிருந்து மீளுவது இனி முடியாது என்றும் இப்பொழுது எனக்குத் தோன்றிற்று. ஆனால் நான் நேர் பிறப்புத்தானா? அதை ஊர்ஜிதம் செய்து கொள்ளாமல் வாழ்வுக் கோணத்தை நேர்மையான மனத்தோடு திரும்பிப் பார்ப்பது எங்ஙனம்?

எனக்குச் சட்டென்று ஒரு ஆலோசனை தென்பட்டது. சே! எவ்வளவு சாதாரண விஷயம்? அது இன்று வரை எனக்குத் தட்டுப்படாமல் இருந்து விட்டதே!

மனத்திலே புது நம்பிக்கை ஊற அத்தையிடம் "இன்னும் ஒரு மாத காலம் பொறுத்துக்கொள் அத்தை; உமாவை நான் மணக்க முடியுமா முடியாதா என்பதைத் திட்டமாகக் கூறி விடுகிறேன்" என்றேன்.

"ஏன்? அதற்கிடையில் என்ன பரிசோதனை நிகழ்த்தப் போகிறாய்?" என்று கேட்டாள் அத்தை.

"நான் நேர் பிறப்பு என்பதற்கு அத்தாட்சி தேடப் போகிறேன்."

"நான் ஒருவள்தானடா அதற்கு அத்தாட்சி, சுதர்சன்."

"இல்லை; உன் வார்த்தையையும் மிஞ்சிய அதிகார பூர்வமான அத்தாட்சி கொண்டு வருகிறேன். இன்றே கேம்பிரிட்ஜ் ரிஜிஸ்திராருக்குக் கடிதம் எழுதி, அப்பாவும் அம்மாவும் மணப்பதிவு செய்து கொண்ட பத்திரத்தின் நகலை அனுப்பச் செய்கிறேன்."

"எழுதேன்; ஆனால் உடனே வேண்டாம்; என் உடம்பு குணமாகிய பிறகு எழுது, போதும்" என்றாள் அவள். அத்தையின் பதில் சுவாரசியம் குன்றியிருப்பதேன்? தான் வளர்த்த பிள்ளை தன்னையே நம்ப மறுக்கிறானே என்பதால் எழுந்த ஏமாற்றமா?

★

அன்றிரவு நோய் நொடியெல்லாம் மறந்து உற்சாகமாக உறங்கினேன். நானும் உமாவும் உல்லாசமாகத் தாம்பத்தியத்தில் ஈடுபட்டிருப்பதைப் போல் தூக்கத்தில் பல கனவுகள் கண்டேன்.

ஆனால்...

அடுத்த நாள் அத்தை பிணமாகக் கிடந்தாள். மரத்துப்போன அவள் விரல்களுக்கிடையே செருகப்பட்டிருந்த கடிதத்தைத் திகிலுடன் பிரித்துப் படித்தேன்.

**"என் அருமை மகனே,**

**இப்படி வாய்குளிர அழைக்காமலே நான் போகிறேன். சந்தர்ப்பங்கள் என்னை அவ்வாறு சதிசெய்து விட்டன.**

நீ எனது வயிற்றில் பிறந்த சிசு. விமான விபத்தில், உன் அப்பா என்று பொய்யாக இதுவரைக் கூறிவந்தேனே, அந்த என் சகோதரனோடு உயிரிழந்தவர்களில் எனது ஒன்றுவிட்ட மாமா பிள்ளை மதன்மோஹன்லாலும் ஒருவர் என்பதை உனக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறேனே, அவர் தான் உன் அப்பா. காலேஜ் 'பிக்னிக்' ஒன்றின்போது நாங்கள் இருவரும் ஒன்றுபட்டோம். அடுத்த மாதம் அதே நாளில் அவர் விமான விபத்தில் இறந்து போனார். அதற்கடுத்த மாதம் நீ என் வயிற்றில் இருப்பதை உணர்ந்துகொண்டேன். கன்னிப் பெண்ணுக்கு, தகப்பன் அறியாப் பிள்ளையாக நீ பிறந்த அவதூறு பரவலாகாதென்று, 'தாரா' என்ற பஞ்சாபிப் பெண்ணுக்கும், என் சகோதரனுக்கும் பிறந்தவனாகக் கதை அளந்தேன். ஆனால் உண்மையை உணர்த்தவேண்டிய காலம் வந்துவிட்டது; உணர்த்தி விட்டேன்.

திருமணம் என்பது வெறும் சடங்கு; தூய ஒருமித்த காதலே தாம்பத்தியத்தின் அத்தாட்சி என்பதை நீ நம்புவதானால், உன் பிறப்பு தூய்மையானது எனக் கொண்டு உமாவுடன் தாம்பத்தியத்தில் ஈடுபடு.

உங்கள் இருவருக்கும் எனது ஆசிகள்.

உன்னைப் பெற்ற அம்மா,

லதா."

★

கதையை முடித்துவிட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான் சுதர்சன்.

"பிறகு?" என்றேன் நான்.

"பிறகென்னடா? அம்மாவின் சாவின் அடிவாரத்தில் எங்கள் தாம்பத்தியம் வாழ்வு கொண்டு பிறந்தது" என்றான் அவன். ★

# அடுத்த இத...

## தாம்பத்தியம்

(சிறுகதைத் தொடர்ச்சித்திரம்)

'சித்தார்த்தன்'

★

## காகிதப் படகு

(சிறுவர் தொடர்கதை)

'எல்லார்வி'

★

## எழுத்தாளர் பேட்டி

'கலைமகள்' ஆசிரியர்

கி. வா. ஜகந்நாதன்

★

## மக்கள் மன்றம்

★

கோமதி சுப்பிரமணியம்

வாணிதாசன்

வீர. பழனியப்பன்

பார்த்திபன்

பி. எல். சாமி

கலைப்பித்தன்

ஆகியவர்கள் எழுதுகிறார்கள்

# தங்கச் சுரங்கம்

எழுதியவர் : **நா. ஜெகநாதன்**

**...குழந்தை உள்ளம் ஒரு தங்கச் சுரங்கம்; சுரங்கத்திலிருந்து கிடைக்கும் தங்கத்தைவிட உயர்ந்த நல்லுரைகள் குழந்தை உள்ளத்திலிருந்து மனிதருக்குக் கிடைக்கும்.**

**க**ண்களைக் கசக்கிக்கொண்டு திடுக்கிட்டு எழுந்தார் கண்ணுச்சாமிப் பிள்ளை. எதிரே யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தார். ஒருவரையும் காணோம். விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அவர் தம் வீட்டுப் படுக்கையறையில் கட்டிலின் மேல் படுத்துக் கொண்டிருந்தார். விளக்கைப் போட்டுப் பார்த்தார். ஒருவருமில்லை. அப்படியானால் அவர் கண்டது வெறும் கனவு தானா?......

அவரது மனைவி தன் தாய் வீட்டுக்குப் புறப்பட்டுப் போயிருந்தாள். அவரது குழந்தைகள் இரண்டையும்- அவள் குழந்தையையும் அவர் முதல் மனைவியின் குழந்தையையும் கூட அழைத்துக்கொண்டு போயிருந்தாள். அந்தக் குழந்தைகளில் பெரியதான ஒன்றை அவள் வீட்டை விட்டுத் துரத்தியடிக்கிறாள். "சனியனே! எங்கேயாவது ஒழிஞ்சு போயேன்; உங்கப்பாவிடம் போய்ச் சேர்; தரித்திரம்! தாயை உருட்டி விட்டது உருப்படவா போறது! எங்கேயாவது தொலைஞ்சு போ. நீ போகாவிட்டால் நானே நாளைக் காலையில் ரயில் எற்றி அனுப்பிடறேன் பார்...!" என்று ஆத்திரத்தோடு கத்துகிறாள்.

ஆம்; அந்தக் குழந்தை அவரது முதல் மனைவியின் குழந்தை. அவள் அவரது இரண்டாவது மனைவி. இரண்டாவது மனைவியின் குழந்தையை மாத்திரம் அவள் பத்திரமாகப் பாசத்தோடு நடத்துவதாகவும், முதல் மனைவியின் குழந்தையை வீட்டைவிட்டுத் துரத்துவது போலவும், சாப்பாடுகூடப் போடாமல் துன்பப்படுத்துவதாகவும் ஒரு கனவு கண்டு திடுக்கிட்டெழுந்தார். அந்த மட்டில் அது கனவாகவே இருக்கட்டும்!

விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொண்டார்; என்றாலும் அந்தப் பாழுந் தூக்கம் அவருக்குத் துணை சேர மறுத்துவிட்டது. காரணம், தான் கண்ட கனவு ஒரு சமயம் உண்மையாகவும் இருக்கலாமோ என்று அவர் மனம் சஞ்சலப்பட ஆரம்பித்துவிட்டது. என் உண்மையாக இருக்கக்கூடாது? உலகத்தில் எத்தனை சிற்றன்னைகள் இந்தமாதிரி பாரபட்சம் காட்டுவதில்லை? எத்தனை கதைகளில், நாவல்களில் இந்தக் காட்சிகள் வருவதில்லை?...இப்படிப் பலவிதமாக எண்ணி அவர் மனம் வருந்திக்கொண்டிருந்தது. தூக்கம் எப்படி வரும்?

* * *

**க**ண்ணுச்சாமிப் பிள்ளை ஒரு பால்காரர். சுமார் பத்துப் பசுக்களுக்கு மேல் அவருக்குச் சொந்தமாக இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒரு வேளைக்கு இரண்டுபடிக்குமேல் கறக்கக்கூடியது. நல்ல தீனி போட்டு, தம் பசுக்களைக் காங்கேயத்துப் பசுக்

களைப்போல் 'கொழு கொழு' என்று வளர்த்திருந்தார். அவைகளும் தமக்குத் தீனிபோடும் எசமானுக்குத் துரோகம் செய்யாமல் முழுப் பாலையும் சுரந்தன. பசுக்களிலிருந்து கிடைக்கும் பொருள் ஒன்றே அவருக்கு வரும்படியாக இருந்தும், அவர் சிக்கனமாகச் செலவுசெய்து, ஒரு மாடிவீடு கட்டி, நன்ருக வாழ்ந்து வந்தார். ஒரு பால்காரன் இந்த மாதிரி வாழ்ந்தால், ஊரார் மனம் சும்மாவா இருக்கும்? திடீரென்று ஒருநாள் அவர் மனைவி இளம் வயதிலேயே இறந்துவிட்டாள். ஊரார் மனம் அப்போது மகிழ்ந்திருக்குமோ என்னமோ, யார் கண்டது? கண்ணுச்சாமிப்பிள்ளை தன் ஒரு வயது மகனைக் காப்பாற்றுவதற்காக மற்றொரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டார். இவ்வளவும் அவரது இருபத்தேழாவது வயதில் நடந்துவிட்டது.

* * *

மறுநாள் காலை எழுந்ததும், மழை 'சோ' என்று பெய்துகொண்டிருப்பதைக் கண்டார் பிள்ளை. 'வாடிக்கைக்காரர்களுக்கு எப்படிப் பாலைக் கொண்டுபோய்க் கொடுப்பது? வீட்டிலேயே கறந்து கொண்டுபோய் அங்கங்கே கொடுத்துவிட்டே வரலாமா, அல்லது மழை நின்ற பிறகு பசுக்களை ஓட்டிக்கொண்டுபோய் கறந்து பால் ஊற்றலாமா?...சிறிது நேரம் காத்துக்கொண்டிருப்போம். மழை நின்ருல் பசுக்களை ஓட்டிக் கொண்டு போவோம்; இல்லாவிடில் இங்கேயே கறந்து கொண்டுபோய் வாடிக்கைக்காரர்களின் வீடுகளில் கொடுத்துவிட்டு வரலாம்...' என்று முடிவு செய்துகொண்டார். அதற்குள் அவருக்குக் கூடமாட உதவிசெய்யும் சிறு பையனும் மழையில் நனைந்து கொண்டு வந்துவிட்டான். மழையும் சிறிதுசிறிதாக நின்று சிறு தூறல்களாகப் பெய்து கொண்டிருந்தது. "சரி, கிளம்பலாமா?" என்று பையனைக் கேட்டபடி மாடுகளை ஓட்டி கிளம்பினர்.

முதலில் மாடுகளை ஒரு கட்டினர். அந்த வீட அவர் முதலில் பால் கறந்து பிறகு மற்ற வீடுகளுக்குப் போ அந்த வீட்டுக்காரர் ஒரு சர் உத்தியோகஸ்தர். சிறு சிறு தூ களாகப் பெய்து கொண்டிரு மழை திடீரென்று பலத்துவிட்ட தெருவிலிருந்து பசுவை அழைத்துக் கொண்டு, உள்ளே சென்ருர். ரேழியில் பசுவைக் கட்டிக் கறப்பதற்கான இடமிருந்தது. மழை 'சோ'வென்று பெய்யும்போது அந்தமாதிரிதான் செய்வது வழக்கம். பசுவையும் அதன் கன்றையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்று, கதவை மூடலானர். அப்போது மற்றொரு கன்றுக்குட்டி—சற்றே பெரியது—மழையில் நனைய முடியாமல் தவித்தபடி, குளிரால் நடுங்கும் உடலை உதறிக் கொண்டு, உள்ளே வரப் பார்த்தது. அதற்குள் அவர் கதவை மூடிவிட்டார். மூடப்பட்ட கதவை இடிக்கலாயிற்று அந்தக் கன்று. அதுகூட அவருடையதுதான். ஆனல் அந்தப் பசுவினுடையதல்ல.

அந்தச் சமயத்தில் வீட்டுக்காரரான சர்க்கார் உத்தியோகஸ்தரின்குழந்தை ஒன்று உள்ளிருந்து வெளியே வந்தது. ரேழியில் பசுவைக் கட்டிப் பால் கறப்பதை வேடிக்கை பார்க்க வந்த அந்தக் குழந்தைக்குச் சுமார் நான்கு, ஐந்து வயதிருக்கலாம். குறுகுறுப்பான பார்வை உடைய குவளைக் கண்கள் கொண்ட அந்தக் குழந்தையிடம் பால்காரக் கண்ணுசாமிக்குப் பிரியம் அதிகம். குழந்தை வந்ததும், பால்காரர் ஒரு கன்றுக் குட்டியை உள்ளே விட்டு, மற்றொரு கன்றை வெளியிலேயே நிறுத்தி மழையில் நனைய வைத்ததையும், அந்தக் கன்று கதவை மோதிக் கொண்டு உள்ளே வரப் பார்ப்பதையும் ஒரு நொடியில் பார்த்துவிட்டது. குழந்தைகளுக்கே உரித்தான 'என், எப்படி, எதற்காக' என்ற பல்ல

...பித்துவிட்டது. குழந்தை ...த்தறிவாளர்களும் இந்தப் ...ளைய உபயோகிப்பதற் ...பிறந்தவர்கள்போலும்!

...பால்காரரே! அந்தக் கன் ...ட்டியை மாத்திரம் மழையில் ...யவிடுகிறீர்? இந்தக் கன்றுக் ...டி அதன் தாயின் பக்கத்தில் ...ந்தால்தான் பால் கறக்கும் ...ன்று அதை மாத்திரம் அதன் தாயின் பக்கத்தில் கட்டி வைத்திருக்கிறீர்! அந்தக் கன்றுக்குட்டியை மாத்திரம் பாவம், மழையில் நனைய விடுகிறீர். அதற்கும் ஒரு தாய் இருந்தால் இப்படி மழையில் நனைய விடுவீரா?...உபயோகம் இருந்தால்தான் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்வீர்கள்போலும்!''.....இப்படி இலக்கணமாக அந்தக் குழந்தை பேசவில்லை; ஆனால் இதே கருத்துக்களைத் தன் மழலை மொழியில் அழகுத் தமிழில் பேசியது.

பால்காரரின் மனத்தில் அந்தச் சொற்கள் 'சுருக்'கென்று தைத்தன. கூர்மையான வேலை விட, அதிகக் கூர் வாய்ந்த சொற்கள் அந்தக் குழந்தையிடமிருந்து கிளம்பும் என்று அவர் நினைக்கவில்லை. அது சொன்னது அத்தனையும் எவ்வளவு உண்மை! குழந்தை உள்ளத்திற்கும், வயது வந்தவர்களின் உள்ளத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்? தனக்கு உபயோகமுள்ள பொருள்களைத்தான் மனிதன் வெகுகவனமாகக் கவனித்துக்கொள்வான். ஆனால் குழந்தை உள்ளமோ, தன்னைப் போன்ற எல்லோரும் தன்னைப் போலவே வாழவேண்டும் என்று விரும்புவது. அந்தக் குழந்தை உள்ளத்திலிருந்து எழுந்த சொற்கள் அவர் இதயத்தைச் சுட்டெரித்தன. பேசாமல் கதவைத் திறந்து, மற்றொரு கன்றுக்குட்டியையும் உள்ளே விட்டு, மழையில் நனையாமல் தடுத்தார்.

வீட்டிற்குப் போனதும், குழந்தையின் சொற்கள் அவர் உள்ளத்தை அலைக்கழித்தன. நேற்று இரவு கண்ட கனவிற்கும், குழந்தையின் சொற்களுக்கும் ஏதோ ஒரு சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது அவரது மனம்.

'...உபயோகமில்லாத பொருளை யாரும் ஜாக்கிரதையாகக் காப்பாற்ற மாட்டார்களா? அப்படியானால் தன் முதல் மனைவியின் குழந்தையைத் தன் இரண்டாவது மனைவி நன்றாகக் கவனித்து வளர்க்க மாட்டாள் அல்லவா? 'அதற்கும் ஒரு தாய் இருந்தால் இப்படி மழையில் நனைய விடுவீரா...' என்று அந்தக் குழந்தை கேட்டதே!...ஒரு சமயம் தன் குழந்தையை அவள் வீட்டை விட்டு மழையில் துரத்தியிருப்பாளோ?'—அதற்கு மேல் அவரால் ஒன்றும் சிந்திக்கவும் முடியவில்லை; வேறு வேலைகளைச் செய்யவும் முடியவில்லை. தன் முதல் குழந்தை அங்கே ஏதோ நரகவேதனை அனுபவிப்பது போல் ஒரு பிரமை அவருக்குத் தோன்றியது. குழந்தையின் சொற்களும், முதல் நாள் கண்ட கனவும், அந்தப் பிரமைக்கு ஒரு முழு உருவம் கொடுத்தன. அப்போதே ரயிலேறி ஊருக்குப்போய் தன் முதல் குழந்தையைப் பார்க்கவேண்டும் என்று நினைத்தார். ஆனால் ரயில் அவர் நினைத்த நேரத்திற்குப் புறப்படுமா?

அவரது இரண்டாவது மனைவி, பொதுவாக இரண்டு குழந்தைகளிடத்திலும் பாரபட்சமில்லாமல்தான் நடந்து கொண்டாள் என்று சொல்லலாம். ஆனால் அவளுக்குப் பிரசவ சமயமாயிற்றே, இப்போது? அவள் எங்கே அவரது முதல் குழந்தையைப் பார்த்துக் கொள்ளப் போகிறாள்? அவள் வீட்டினர் தன் குழந்தையைச் சரிவரப் பார்த்துக் கொள்வார்கள் என்பது என்ன நிச்சயம்? அவளது குழந்தையை மாத்திரம் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்வார்கள். இது உலக நியதிதானே? அப்படி



கைக்
குப் ட
கொடு
ஞெரு
ரிடம் க
கிளம்பினர்
மிகவும் மெ
நகர்ந்துகொ
போவதுபே
அவருக்குத் தே
றியது. கடைசியில்
ஊர் வந்து சேர்ந்
தார்.

மழை வேறு
பெய்துகொண்
டிருந்தது. வீட்டுக்
குப் போய்ச் சேர்ந்
ததும், முதல் காரிய
மாகத் தன் மனை
வியை நோக்கி,
" அவன் எங்கே?
எங்கே அவன்?"
என்று அலறினர்.
அவர் கோலத்தைக்
கண்டு அவள்
பயந்துவிட்டாள்...
அந்தச் சமயத்தில்
அந்தக் கடும் மழை
யில் அவாது மகன்
கடைக்கோ, எங்கோ
சென்றிருக்கிருன்
என்று சொல்ல அவ
ளுக்குத் தெரிய
வில்லை. தனக்குத்
தெரியாதது போல்,
" உள்ளே அவர்
களைக் கேட்டால்
தெரியும்! அப்படி
எங்கே போயிருக்கப்
போகிருன்?"
என்று மழுப்பினள்

யானல் அவரின் முதல் குழந்தை
எனை பாடு படுகிருமே?......

* * *

[illegible] காலை புறப்பட்ட முதல்
[illegible]யில் பிளளை கிளம்பிவிட்டார்
[illegible] கூ நர் [illegible]யில்லை. வாடிக்

அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது
அதற்குள் காப்பி, பலகாரம் எல்லாம்
ஒன்றும் குறைவில்லாமல் வெள்
ளித் தட்டுகளிலும், தம்ளர்களிலும்
வந்தன. எதற்குக் குறைவிருந்தாலும்

...ரவம் குறைய யாரும் ...ல்லை அல்லவா?

... வெறுப்பாக அவை ... செய்துகொண்டிருந் ... அந்த வேளையில் அவர் ...ழையில் நனைந்தபடி கையில் ...பையில் சில காய்கறிகளையும், ... சாமான்களையும் தூக்கிக் ...ண்டு வந்தான். சட்டை தொப் ...க நனைந்திருந்தது. ஆளே ...டையாளம் தெரியவில்லை. பாதி ...யாகிவிட்டிருந்தான் அவன். அவர் தம் மனைவியைச் சுட்டெரிப்பது போல் பார்த்தார். அந்தப் பார் வையைத் தாங்கமாட்டாமல் அவள் உள்ளே போய்விட்டாள். அதற்குள் வீட்டிற்குள்ளிருந்து ஒரு கனத்த குரல் "எண்டா, மழை நின்ன பிறகு தானே உன்னைக் கடைக்குப் போகச் சொன்னேன்? இப்படி மழையில் நீ நனைந்துகொண்டு வருவதை உங் கப்பா பார்த்து என்னதான் நினைச் சுக்கமாட்டார்?" என்று கேட்டது. கடைக்குப் போகச் சொன்னது அவள் தான்-அதாவது அவரது மாமி யார். ஆனால் 'மழையில் போகாதே என்றுவது சொல்லும் அளவிற்கு உனக்குக் கருணை இருந்ததே, அதுவே போதும்' என்று அவர் மனத்திற் குள் நினைத்துக்கொண்டார். அப்படி யானல் அவன் இங்கே கடைக்குப் போகவும், சாமான் வாங்கவுந்தான உபயோகப்படுகிறான்? ஆம்; அப் படித்தான் இருக்கவேண்டும். இல்லா விட்டால் அவன் என் இப்படித் துரும்பாய் இளைத்துப்போயிருக்கி றான்? ஊருக்குப் போகும்போது எப் படிக் 'கொழு கொழு' என்று இருந் தான் அவன்?...

* * *

மறுநாள் காலை அவனை அழைத்துக் கொண்டு, அவர் ஊருக்குக் கிளம்பி விட்டது, அவருடைய மனைவிக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவர் வந்தது முதல் நடந்துகொண்டது அவளுக்குப் பெரும் வியப்பாக இருந் தது. தன் மகனை அவர்கள் சரியாக கவனிப்பதில்லை என்று யாரோ அவ ரிடம் கோள் மூட்டியிருக்கவேண்டும்; அதனால்தான் அவர் அப்படிப் பேத லித்துப் போய்விட்டார் என்று நினைத்தாள் அவரது துணைவி.

ஊருக்கு வந்து சேர்ந்ததும், தன் மகனைத் தீரவிசாரித்து ஆறுதலடைந் தார் பிள்ளை. 'வேளைக்குச் சாப்பாடு போட்டார்களா? ஒரு நாளைக்கு எத்தனை முறை கடைகளுக்குப் போவதுண்டு? அது தவிர வேறு வேலைகளைச் செய்வதுண்டா?' என் றெல்லாம் கேள்விகேட்டார். அவை களுக்கு அவன் கொடுத்த பதிலைக் கேட்டதும், அவனை இங்கே அழைத் துக்கொண்டு வந்தது மிகவும் நல்ல தாகப் போய்விட்டது என்று கரு தினர் அவர்.

பால் வார்க்க மறுநாள் அந்தச் சர்க்கார் உத்தியோகஸ்தரின் வீட் டிற்குச் சென்றதும், அவரது குழந்தை கள்ளங் கபடமில்லாமல் சிரித்துக்கொண்டு ஓடிவந்தது. கள்ள மில்லாத குழந்தை உள்ளத்தில் எத் தனை இனிய கருத்துக்கள் ஊறியிருக் கின்றன; எத்தனை புதிய உப தேசங்கள் கிடைக்கின்றன என்று அவர் வியந்தார். ஆம்; உள்ளம் ஒரு சுரங்கம்; அதிலும் குழந்தை உள்ள மிருக்கிறதே, அதுஒரு தங்கச்சுரங்கம். சுரங்கத்தைத்தோண்ட, விலை உயர்ந்த பொருள்கள் கிடைக்கும். அதுபோல் குழந்தையின் உள்ளத்தைக் கிளறி விட்டால், அவற்றைவிட விலை யுயர்ந்த அறிவுரைகள் கிடைக்கும். குழந்தை உள்ளத்திலிருந்து பிறக்கும் நல்லுரைகள் மனித உள்ளத்திற்கு நல்ல உரம் தரும்.

அந்தக் குழந்தையின் சொற்களால் தான் தன் முதல் குழந்தையை யமன் வாயிலிருந்து மீட்டோம் என்ற பிரமை தோன்றியது அவ ருக்கு அவர் குழந்தையைத் தூக்கி அணைத்து முத்தமிட்டார். அந்தக் குழந்தையின் உள்ளத்திலிருந்து எழுந்த சொற்கள் மற்றொரு குழந் தையைக் காப்பாற்றின என்று அவர் நினைத்தது தவறல்லவே? ★



# முடிவு

நாடகம் — ர. வேங்கடரத்தினம்

## 1

[அன்று காலையில் பி. ஏ. பரீட்சை முடிவு வெளியாகியிருந்த தினசரித் தாளைப் பார்த்துத் திகைத்த சிவபாதம், அதைத் தன் மனைவி மரகதத்திடம் காட்டுகிறார்.]

சிவபாதம்: உன் பிள்ளையாண்டான் பண்ணியிருக்கிற காரியத்தைப் பார்த்தாயா? நான் அப்போதே சொன்னேன்; உனக்கு ஏறல்லே. இப்பொழுது அவனைக் கட்டிக்கொண்டு நன்றாய் அழு.

மரகதம்: பரீட்சையென்றால், ஒருசமயம் வரும்; ஒருசமயம் தவறிப்போகும்; இரண்டும் தான் உண்டு. ஏதோ அவன் தவறிப்போய் பெயில் ஆகிவிட்டான் என்பதற்காக இத்தனை கோபமா? இந்தத்தரம் போய் விட்டால், இன்னொரு தரம் நன்றாய்ப் படித்து எழுதிப் பாஸ் பண்ணுகிறான்!

சிவபாதம்: இந்தத் தடவையே பாஸ் பண்ணாதவன் அடுத்த தடவையில் என்னவோ பிரமாதமாய் எழுதி உலகத்தையே புரட்டிவிடப்போகிறான்! நீ நம்பிக்கிட்டிரு.

மரகதம்: இப்போது போனது போகட்டும்; நீங்க என்மேல் இருக்கிற கோபத்திலே வர தடவைக்குச் சாபம் ஒன்றும் இட வேண்டாம்.

சிவபாதம்: ஏன், நீ வேண்டுமானால் பாஸ் ஆகிவிடுவானென்று வரம் கொடேன்! நீ பண்ணியிருக்கிற காரியத்துக்கு, நான் உண்மையைச் சொன்னால், குறைந்து போகுமோ? நான் வேண்டாம், வேண்டாமென்று அப்போதே அடிச்சிக்கிட்டேன்! நீ அவசரப்பட்டு அவன் படிப்பைக் குட்டிச்சுவராக்கினே!

மரகதம்: எதுக்கெடுத்தாலும் உங்க வழக்கப்படி என் மண்டையைப் போட்டு உருட்டுங்க. ஏதோ தவறு நேர்ந்து போச்சேன்னு ஒத்துக்கிட்டாலும் விடாதீங்க.

சிவபாதம்: நீ ஒத்துக்கிட்டால் யுனிவர்சிட்டிக்காரன் உன் பையனுக்கு பாஸ் போட்டுவிடப் போகிறானா? அவன் படித்த படிப்புக்கு நீதான் பாஸ் போடணும்.

மரகதம்: அதுமட்டும் சொல்லாதீங்க. அவன் என்னத்தினு

பெயில் ஆகியிருக்
ஆனல் படிக்கவில்லை
ட்டும் சொல்லாதீங்க.

நம்: ஆமாம், ரொம்பப்
ரன். ஏனென்ருல் மாடி
க்குப் பத்துப் பதினேரு
மட்டும் அணைகிறதில்லை
று சொல்லு. அங்கே அவன்
டத்தையா படிச்சிக்கிட்டிருந்
திருக்கப்போருன்? அவன் பாட்
டில் பெண்சாதியோடே பேசிக்
கிட்டிருந்திருப்பான். வ் ண் ட
வாளமெல்லாம் இப்பொழுது
ரிசல்ட் வந்தப்புறம்தானே தெரி
கிறது?

**மரகதம்:** இங்கே நடுக் கூடத்
திலே படுத்துக்கொள்ளறதி
ஞலே, உங்களுக்குத் தெரியாது.
பின்கட்டிலே வந்து நின்று
பார்த்தால், அவன் படிக்கிற
குரல் ஒருநாளைப்போலப் பதி
னேரு மணிமட்டும் கேட்கும்.
இப்பத்தான் மூன்று மாசமாய்
பரீட்சை எழுதினதிலிருந்து
அவ்வளவு நேரம் வாசிக்கிற
தில்லை.

**சிவபாதம்:** நான் உன்னை
அதெல்லாம் கேட்கவில்லை. இவ்
வளவு நாள், இந்த பி.ஏ. வகுப்பு
மட்டும் ஒரு தடவைகூட பெயில்
ஆகாதவன் திடீரென்று இப்ப
வந்து 'கோட்' அடிப்பானேன்?
இருந்தாப்போல இருந்து, மூளை
வறண்டு போயிடுத்தா? எல்
லாம் நீ பண்ணிவச்ச கலியா
ணத்திஞலே தானே, இப்படி
ஆச்சு? இதுவரை ஒரு பரீட்சை
யிலேயும் தவறிப் போகாமல்
வந்தவனைக் கெடுத்து அவன்
படிப்பைக் குட்டிச்சுவராக்கினது
நீ தானே?

**மரகதம்:** இதுமட்டும் பெயிலே
ஆகாதவன் நடராஜன், கடை
சிப் பரீட்சையிலேயும் பாஸ்
பண்ணிவிடுவான் என்று நம்
பித்தான் கலியாணம் பண்ணச்
சொன்னேன். என்னவோ தவ
றிப் போய், பெயில் ஆகிவிட்
டான்.

**சிவபாதம்:** அதுதான் சொல்
லாதே என்கிறேன். அவன்
தவறிப்போய் பெயில் ஆக
வில்லை. நீ அவனை பெயில் ஆக
அடித்தே! 'வீணய் அவன்
படிப்பைக் கெடுக்காதே' என்று
நான் படிச்சுப் படிச்சுச் சொல்லி
யும், உன் யோசனைக்கு ஏறல்லை.
இப்ப அவன் பரீட்சையிலே
சுழித்துவிட்டு நிற்கிருன். மரு
மகளையும் மகனையும் மணையிலே
வைத்துக் கண்குளிரப் பார்த்து
ஆனந்தப்படு. உனக்கு வேண்
டியது அவ்வளவுதானே?
அவன் படிப்புப்பற்றி உனக்
கென்ன கவலை?

**மரகதம்:** எனக்குத்தா'ன்
கவலையில்லை; நீங்களாவது க
யாணம் வேண்டாமென்
உறுதியாய்ச் சொல்லி நிறுத்
யிருக்கிறதுதானே? நடராஜன்
கெட்டிக்காரன்; பாஸ் பண்ணி
விடுவான் என்று நான் சொன்
னதை நீங்களும் ஆமோதித்துத்
தான் சரி'ன்னீங்க. இப்பொழுது
எல்லாப் பழியையும் என்மேலே
போடுங்க.

**சிவபாதம்:** இதுதானே பெண்
புத்தி'ங்கிறது? மருமகள் வந்து
வீடு நிறைந்திருக்கணும், நம்ம
நடராஜனுக்கு ஒரு கலியாணத்
தைப் பண்ணிப் பார்க்கணும்,
இன்னும் என்னென்னவோ
வெல்லாம் சொல்லிக் கலியா
ணத்தை நடத்திக்கிட்டு, எல்
லாம் முடிஞ்ச பிற்பாடு, இப்ப
வந்து கையைப் பிசையறியே.



இது தானே பெண் புத்தி பின் புத்தி என்கிறது?

மரகதம்: பெண் புத்தி பின் புத்தி என்கிறது தெரிஞ்சும், பெண் புத்திப்படியே நடந்து விட்டு, எல்லாம் ஆன பிற்பாடு பெண் புத்தி பின் புத்தி என்று தூற்றறது தானே ஆண் புத்தி?

சிவபாதம்: இப்போது பேசுகிறதெல்லாம் பிரமாதமாய்த் தான் இருக்குது. அப்போ அந்த காய்ச்சலிலிருந்து பிழைத்ததும் பிழைக்காததுமாய், எப்படியும் அவனுக்குக் கலியாணம் பண்ணிப்பார்த்துவிட்டுத்தான் சாகணும் என்று, என்னவோ கலியாணம் ஆன கையுடன் சாகப்போகிறவள் போலத்தான் பேசினே. திடீரென்று எங்கேயிருந்து தான் உனக்கு மருமகள் ஆசை பிறந்ததோ? உனக்குத் தான் அப்படியென்றால், உன் பிள்ளைக்கும் கலியாணம் பண்ணிக்கொள்ள ஆசை பிறந்ததே, அதைத்தான் சொல்லணும். எல்லாம் படிச்சு முடிச்சப்புறம் பார்த்துக்கலாம் என்று ஒரு சொல் சொ மாட்டானே? 'கலியா இதோ' என்று அவன் வாக்கிய பரிபாலனம் ப விட்டான்!

மரகதம்: ஏதாவது சொல் தீங்க. பிடிவாதமாய் மாட்டே மாட்டேன் என்று சொன் வனை நான் எத்தனை கெஞ்சி கேட்டுச் சம்மதிக்க வைத்தேன் தெரியுமா?

சிவபாதம்: அவனைக் கெடுக்கிறதுக்கு அனுமதி அவனையே கெஞ்சிக் கேட்டு வாங்கிக்கிட்டாயாக்கும்! கலியாணம்தான் பண்ணிவச்சே; அத்தோடே நின்னியா? மருமகளை இங்கே கூட்டிக்கிட்டு வந்தே. அப்புறம் பையன் எங்கே படிக்கிறது? பெண்டாட்டியையே சுற்றிச் சுற்றி வந்துக்கிட்டே இருக்க வேண்டியது தான்.

மரகதம்: ரொம்பப் பார்த்தாப் போலப் பேசாதீங்க. நடராஜன் கமலியையே சுற்றிக்கிட்டுத் தான் இருக்கானே? அவன் அப்படி இருந்தாலும், உங்க மருமகள் விடமாட்டாள். அவள் புத்திசாலித்தனம் உங்களுக்கும் எனக்குங்கூட வராது. அவன் சரியாப் படிக்காவிட்டால், அவளே 'இன்னும் கொஞ்ச நாள் தானே? நன்றாய்ப் படிச்சிடுங்க' என்று சொல்லித் திருத்தக்கூடியவள். லீவு நாட்களில், மாடி ஏறிப் போய்விட்டுப் பாதிதூரம் போனதும், 'அவர் படிச்சிக்கிட்டிருக்கார்' என்று திரும்பி வந்துவிடுவாள். அவள்மேலே பழி சாட்டாதீங்க.

சிவபாதம்: அவ்வளவெல்லாம் இருந்தும், ஏன் குண்டு அடித்தானும்?

இன்னும் இரண் ... தம் பொறுங்க. செப் ... ரீட்சையிலே எழுதிப் ... ணிவிடுவான்; பார்த் ... ட இருங்க.

... ம்: இப்ப காலேஜிலே ... படிக்கிறபோதே கோட் ... தவன், இந்த இரண்டரை ... ழும் நடந்த பாடத்தை ... ல்லாம் வீட்டிலிருந்து படித்தே பாஸ் பண்ணிவிடப் போகிருஞ?

மரகதம்: ஒருதரம் ஏற்கெனவே படித்த பாடந்தானே! அதனுலே நடராஜன் இந்தத் தடவை கட்டாயம் பாஸ் பண்ணிவிடுவான்.

சிவபாதம்: இத்தனை நாள் காலேஜுக்குப் போய் அந்த நேரத்திலேயாவது ஏதோ பாடம் அங்கே காதிலே விழுந்திருக்கும். இனிமேல் அதுவும் போச்சு. வீட்டிலேயே இருக்கப் போருஞ,...? அதனுல் அந்தப் பெண்ணை வலம் வரத்தான் நேரம் சரியாய் இருக்கும்!

மரகதம்: வீணுய் ஏன் அந்தப் பெண்ணைக் கரித்துக் கொட்டுறீங்க? இவனுக்குப் போயிட்டதென்ருல், அது என்ன செய்யும்?

சிவபாதம்: நானே அந்தப் பெண்ணை ஒன்றும் கரித்துக் கொட்டவில்லை. இந்த ஐந்தாறு மாதமும் அது தன் பிறந்த வீட்டிலேயே இருந்திருந்தால், எவ்வளவு நல்லாயிருந்திருக்கும்! இன்றைக்கு நடராஜன் பி. ஏ. பாஸ் பண்ணியிருந்திருப்பான். உடனே போய்க் கமலியை இங்கே கூட்டிவந்துவிட்டிருக்கலாம். இப்போப்போல



பரீட்சையிலே பெயில் ஆயிருக்க வேண்டாம், பாரு!

மரகதம்: நடராஜன் பெயில் ஆனதுக்குக் காரணம் கமலி தான் என்கிறீங்களா? அந்த மாதிரி ஏதும் சொல்லிக்கிட்டிருக்காதீங்க. அந்தப் பெண் காதிலே பட்டுவைக்கப்போறது! அது பக்கத்து அறையிலே தான் இருக்குது.

சிவபாதம்: உன் பிள்ளையாண்டான் எங்கே, காணுமே?

மரகதம்: அவன் ஸ்டேஷனிலேயே போய் வண்டி வந்ததும் பேப்பர் வாங்கிப் பார்த்துவிட்டு வரேன் என்று சொல்லிப்புட்டுப் போனுன். இன்னும் வரல்லை.

சிவபாதம்: மாடியிலே ஓசைப் படறதே, பின்னே யார் அங்கே போயிருக்காங்க?

மரகதம்: ஓ, அப்படியானுல் அவன் வந்துட்டான்போல் இருக்குது. நீங்க சொன்னதெல்லாம் கேட்டுக்கிட்டுப்போனுனே, என்னவோ?

சிவபாதம்: நல்லாக் கேட்கட்டுமே. இப்ப வேணுமின்னுலும் சொல்லறேன். அவன் பெண்

டாட்டியைக் கொண்டுபோய் விட்டுவிட்டு வரணும், முதல் காரியம். அப்பத்தான் இந்தத் தடவையாவது பாஸ் பண்ணற துக்கு வழியுண்டு.

மரகதம்: சரி சரி, நான் உள்ளே போறேன். நின்னல், வேணுமின்னே அவங்க காதிலே படும்படியாய் ஏதாவது பேசு வீங்க.

## 2

[அதே நாள் மாலை மாடியறையில் பி. ஏ. வில் தேருததை நினைத்து வருத்தத்துடன் உட்கார்ந்திருக் கும் நடராஜனிடம், அவன் மனைவி கமலி வந்து சமாதானம் செய்கி ருன்.]

கமலி: போனது போச்சுங்க! இனிமேல் பரீட்சை போன தைப்பற்றி மறந்திடுங்க.

நடராஜன்: பரீட்சையைப்பற்றி நான் கவலைப்படவில்லையே!

கமலி: பின்னே, ஏன் இப்படி உட்கார்ந்துகிட்டிருக்கீங்க?

நடராஜன்: பரீட்சையிலே போய்விட்டதேயென்று நான் யோசனை பண்ணல்லே. எப்படி பெயில் ஆச்சென்றுதான் யோசிக்கிறேன். எல்லாப் பேப் பருமே நன்ருய்த்தான் எழுதி னேன். எப்படிப் போயிருக்கு மென்றுதான் புரியமாட்டேங் குது.

கமலி: அது கிடக்கட்டும்; இதைச் சொல்லுங்க. என் உடம்பு முந்திக்கு இப்ப எப்படி இருக்குது?

நடராஜன்: ஏன், கொஞ்சம் இளைப்பாய்த் தெரியுது. என்ன விசேஷம்?

கமலி: என்னவோ சுரம் வந் தாப்போல இருக்கு. உடம்பு கலகலப்பாய் இருக்கமாட்டேங் குது.

நடராஜன்: டாக்ட அழைச்சிக்கிட்டுப் போய டலாமா?

கமலி: அதெல்லாம் டாம்.

நடராஜன்: லேடி டாக் காட்டவேண்டிய விஷயமே

கமலி: சேச்சே, அதெல்ல இல்லீங்க.

நடராஜன்: பின்னே?

கமலி: அம்மாவைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தால் தேவலை. அதுவும், ஒரு வாரம் அவங்க கிடந்து பிழைத்ததா கப் போனவாரம் வந்த கடிதத் தைப் பார்த்ததிலிருந்து, என் மனசு பக் பக்கென்று அடிச் சுக்குது.

நடராஜன்: ஆமாம், எனக்குக் கூடச் சத்தம் கேட்டுது.

கமலி: என்ன, விளையாடறீங் களே!

நடராஜன்: விளையாட்டில்லை நீ சொல்லு.

கமலி: அம்மாவோடே போய் ஒரு மாதம் இரண்டு மாதம் இருந்துவிட்டு வரலாம் என்று ஒரு ஆசைங்க.

நடராஜன்: என்ன, செப்டம் பர் மாதம்மட்டும் அங்கே இருப்பாயா?

கமலி: ஆமாம், அவ்வளவு தான்! அம்மா பக்கத்திலே ஒத் தாசையாய் இருந்துவிட்டு வர லாம்.

நடராஜன்: நீ தாராளமாய்ப் போய் இருந்துவிட்டு வா; எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனல் திடீரென்று அம்மா மேல் இத்தனை கரிசனம் பிறந்து விட்டதாக மட்டும் சொல்

நான் நம்பத் தயாரா
எனக்கு நிஜக் கராணம்
ம்.

: நிஜக் காரணம் நான்
ல்வதுதான். உடம்பு சரி
இல்லாமல் இருந்த
று லெட்டர் வந்ததே;
ய்ப் பார்த்துவிட்டு வரலாம்
ன்றுதான் சொல்லறேன்.

**நடராஜன்:** இந்த ஆசையெல்லாம் இன்றையப் பேப்பரில் நான் பெயில் ஆனது வெளியானப்புறம்தான் தோன்றியதோ? செப்டம்பர் பரீட்சைக்கு நான் நன்றாய்ப் படித்துப் பாஸ் பண்ணவேண்டும் என்பதற்காகத்தான் நீ போக எண்ணுகிறாய். இந்தத் தடவையும் தவறிப்போய்விடாதிருக்கணுமே என்ற பயத்தில்தான் நீ போக ஆசைப்படுகிறாய்.

**கமலி:** அப்படியானால், நீங்க பெயில் ஆனதுக்குக் காரணம் நான்தான் என்பீங்கபோல் இருக்கே. நீங்க நல்லாப் படிக்கல்லையென்றால், அதுக்கு நானா பொறுப்பு? என்மேல் தூக்கிப் பழியைப் போடறீங்களே.

**நடராஜன்:** பின்னே, இது மட்டும் ஒரு தரம் கூடப் பெயிலே ஆகாதவன், திடீரென்று இப்போது பெயில் ஆவானேன்? இத்தனை நாள் கெட்டிக்காரனாய் இருந்தவன் திடீரென்று மண்டு வாய்விட்டேனா?

**கமலி:** அப்பா உள்ளே சொல்லிக்கிட்டிருந்தாங்களே, அதே போலப் பேசறீங்களே! நானா உங்கள் படிப்பைக் கெடுத்தேன்?

**நடராஜன்:** அப்பா சொன்னதையெல்லாம் நீயும் கேட்டுக் கொண்டிருந்தாயா?

**கமலி:** நான் அப்போ, பக்கத் தரையிலே தானே இருந்தேன்?

**நடராஜன்:** சமாச்சாரம் இப்ப விளங்குது. அப்பா சொன்னதைக் கேட்டதும், நீ இந்த இடத்தை விட்டுக் கிளம்பிவிடறதென்று முடிவு கட்டிட்டே. செப்டம்பர் பரீட்சை எழுதி முடிக்கிறமட்டும் பிறந்த வீட்டிலேயே இருக்க முடிவு பண்ணிவிட்டே. ஆனால், இந்தக் காரணத்தைச் சொல்லி ஊருக்குப் போகிறதாகச் சொன்னால், நான் உன்னை விடமாட்டேன். அதனால் அம்மாஉடம்பு மேலே பழியைப் போட்டுவிட்டுக் கிளம்பத் திட்டம் போட்டுட்டே.



**கமலி:** அதெல்லாம் இல்லை.

**நடராஜன்:** அதெல்லாம் இல்லைன்னா, உன் சிரிப்பே சொல்லுதே. அம்மாவுக்கு உடம்பு சரியாய் இல்

லேங்கிறதெல்லாம் தீர்ந்து ஒரு வாரமான பின்னுல், இப்பத் தான் போய்ப் பார்க்க ஆசை பிறந்ததோ, கேட்கிறேன்.

கமலி: உங்க ரிசல்ட் வந்தப் புறம் பார்த்திட்டுப் போகலா மின்னிருந்தேன். அது தான் இன்றைக்கு இப்படி வந்து விட்டது.

நடராஜன்: அது சரி, உண் மையிலே நான் பெயில் ஆன துக்குக் காரணம் நீதான்னு நீ நினைக்கிருயா? அப்பா சொன் னதை நீ ஒப்புக்கொள்றீயா?

கமலி: அதென்னவோ நீங்க தான் சொல்லணும். உங்கள் படிப்பை நான் ஒன்றும் கெடுக் கல்லே என்பதுதான் என் எண் ணம்.

நடராஜன்: ஏன், என் அபிப் ராயமும் அதுதான். நான் என் னவோ நல்லாத்தான் படித் தேன். ஆனுல், பெயில்னு ரிசல்ட் வந்தப்புறம், அதெல் லாம் சொல்லிக்கொண்டிருந் தால், கேட்பாங்களா? நானும் நிச்சயம்பண்ணிவிட்டேன். உன் னைக் கொண்டுபோய் விட்டுவிட வேண்டியதுதான். அப்பா வுக்கு எப்ப அந்தமாதிரி ஒரு எண்ணம் உண்டாயிருந்ததோ, அதுக்கப்புறமும் உன்னை நான் இங்கேயே வைத்திருந்தால், நல்லா யிருக்காது. உன்னை இங்கே வைத்துக்கிட்டு, படிச் சால்கூட ஒப்புக்கொள்ளமாட் டார். 'அவன் எங்கே படிக்கப் போருன்' என்றுதான் கேட் பார்.

கமலி: நானும் அதுதான் சொல்றேன். நீங்க இந்த மூன்று மாதமும் சிரமப்பட்டுப் படி அதுக்கப்புறம் என்னை அ துக்கொண்டு வரலாம்.

நடராஜன்: எப்ப கிளம்பல

கமலி: இன்று ராத்தி வண்டியிலேயே புறப்பட்டுவி லாம்.

நடராஜன்: என்மேல் கோபமா கமலி? அப்பா வார்த்தைக்கா கத்தான் உன்னை அனுப்பு கிறேனே ஒழிய, உன்னுல் என் படிப்புக் கெட்டதென்று எனக் குக் கொஞ்சம்கூட எண்ண மில்லை.

கமலி: ஆமாம், எவனே ஒருத்தன் வார்த்தைக்காகக் காட்டுக்கே மனைவியை அனுப் பிய ஆண் இனமில்லையா நீங்கள்?... எல்லாம் செய்வீங்க.

## 3

[அடுத்தநாள் காலை தினசரியைப் படித்துக் கொண்டிருக்கிருர் சிவ பாதம். மரகதம் அவரது படிப்பில் குறுக்கிடுகிருள்]

மரகதம்: என்ன இருந்தாலும் நீங்க நேற்றுச் சொல்லிக்கொண் டிருந்தது கொஞ்சங்கூட நல்லா யில்லே. அவ்வளவும் அவங்க காதிலே விழுந்திருக்கும். அத ஞல்தான் நடராஜன் அவளை அழைத்துக்கிட்டு நேற்றே கிளம்பிவிட்டான்.

சிவபாதம்: நான் நல்லாத் தான் சொன்னேன். சொன்ன திலே என்ன தப்பு? பெண் டாட்டியைச் சுற்றிச் சுற்றி வந் தால், பரீட்சையிலே பாஸ் கிடைத்துவிடுமா?

மரகதம்: நடராஜன் அப்படித் தான் அவளைச் சுற்றி வலம்

ுகொண்டிருந்தாஞ? அப் வந்தால்தான், என்ன ? அவன் பெண்டாட்டி ள். நாஞும் நீங்களும் ஏன் அவங்க விஷயத்திலே தலையிட ஞும்?

**சிவபாதம்:** ஆமாம், அதுகள் இரண்டும் கந்தர்வலோகத்திலே கனவு கண்டுகொண்டிருக்கட்டும், பிழைப்பு நடந்துவிடும்!

**மரகதம்:** அதைச் சொல்கிறதிலே ஒரு தினுசில்லே? இப்படித்தான் காட்டாள் கணக்காக அங்கே அவங்க காதிலே கேட்கிறபடி இரைகிறதா? நடராஜன் என்ன நினைத்துக்கிட்டிருப்பான்?

**சிவபாதம்:** என்ன வேண்டுமாஞலும் நினைத்துக்கொள்ளட்டுமே. அப்படியே மனசு இரண்டு துண்டாய் உடைந்துபோயிடுமோ, கேட்கிறேன். அப்படியாவது திருந்தி, ஒழுங்காய்ப் படித்துப் பாஸ் பண்ணிஞல் சரி.

**மரகதம்:** நடராஜனைத்தான் சொன்னீங்க; அந்த ஊரான் வீட்டுப் பெண்ணைப் பார்த்து அப்படிச் சொன்னீங்களே. அந்தப் பெண் ரொம்ப மானி. நீங்க சொன்னதெல்லாம் கேட்டு அந்தப் பெண்ணே நடராஜனிடம் தன்னைக் கொண்டுபோய் விட்டுவிடச் சொல்லியிருக்கும். ஏதோ விளையாட்டாய் ஒரு தடவை பரீட்சையிலே போய்விட்டால், இப்படித்தான் ஒரு இளம் ஜோடியை அநியாயமாய்ப் புண்படுத்தணுமா?

**சிவபாதம்:** உன் பிரசங்கம் போதும்; அங்கே போட்டிருக்கான் பார்—அந்த இங்கிலீஷ் பேப்பரை எடுத்துக்கிட்டு வா.

**மரகதம்:** நீங்க செய்த காரியம் மட்டும் சரியென்று நினைக்க வேண்டாம். அந்தக் காலத்திலே என்னை ஒரு காரியமும் செய்யவிடாமல், 'மரகதம் மரகதம்' என்று வளைய வளைய வந்து நிற்பீங்களே, அது ரொம்ப ஒழுங்கு; நடராஜன் தன் பெண்சாதியோடே பேசுகிறதுதான் தப்போ?

**சிவபாதம்:** சள சளன்னு பேசிக்கிட்டு நிற்காதே. அதுதான் நான் விட்டுவிட்டேனே. கொஞ்சம் பேப்பர் படிக்க விடேன் என்னை.

**மரகதம்:** ஆமாம், தன் தப்பை ஒத்துக்க யாருக்குத்தான் மனசு வரும்?

**சிவபாதம்:** மரகதம், மரகதம்!

**மரகதம்:** போகச் சொல்லிவிட்டு, மறுபடியும் என்னை எதுக்குக் கூப்பிடுறீங்க?

**சிவபாதம்:** இங்கே வா, ஒரு ஆச்சரியமான செய்தி!

**மரகதம்:** என்ன?

**சிவபாதம்:** நேற்றுப் பேப்பரிலே விட்டுப் போன நம்பர் என்று நம் நடராஜன் நம்பர் வந்திருக்குதடி. பாஸ் பண்ணிவிட்டான் உன் பிள்ளையாண்டான்.

**மரகதம்:** அவன் நல்லாத்தான் படித்தான் என்றுதான் ஆரம்பத்திலிருந்தே நான் சொல்லிக்கிட்டிருந்தேனே!

(திரை) ★




யார் அவள்?.... அவளேதான்!.... யாழ்கிடப் பதைப்போல்
தமிழ்நூல் தனியே படிப்பா ரின்றிக்
கிடப்பதைப் போலக் கிடக்கின்றாள் கிள்ளை!

வேர்மேல் தலைவைத்து மெல்லுடலை நீட்டி
நீர்க்கெண்டை நோக்கி விழிக்கெண்டை பாயக்
கிடக்கின்றாள் கார்காணாத் தோகை கிடப்பதைப்போல்!

கண்ணைத் திறக்காது கல்லில் செதுக்கிவைத்த
வண்ணச் சிலைபோலென் வாழ்வரசி மரத்தடியில்
எண்ணம் எழுந்தோட விழியேங்க நறுஞ்சாந்துக்
கிண்ணம் கிடப்பதைப்போல் கிடக்கின்றாள்!

அவளருகில்,

மெல்ல நெருங்கி நான் வேறேதோ கேட்பான்போல்
சொல்லாடிக் காண்பேன் இனி:

நீலக் கடல்மேல் நெளியும் அலைபோன்ற
கோல நறுங்கூந்தல் பொற்கொடியே! மக்கட்குப்
பால்நிலவு நன்மை பயக்க எழுதலன்றி
கானகத்தில் காய்வதால் என்?

போரைப் புறங்கண்ட என்நாட்டு மூவேந்தர்
கூர்வாளைப்போன்ற குளிர்விழியே! கூறக்கேள்:
போர்வாள் பகையை மறந்தன் புடையோரை
வேர்கல்லி வீழ்த்துவதால் என்?

வானைத் தொடுமலையின் உச்சி வடித்தெடுத்த
தேன்போன்ற இன்சொற் சிறுகுயிலே! அன்புடையோர்
ஊனில் உயிரில் இனிக்கும் தமிழ்ச்சொற்கள்
போன இடமெங்கோ சொல்!

சார்ந்தார்க் கினிமை தரும்பொதிகைச் சாரல்வாழ்
ஈர்சாந்தக் கன்னத் தெழிலே! நல்லன்புடையோர்
சீரைக் கெடுத்துத் தெருவில் விடுவதனால்
ஊருன்னைத் தூற்றிடா தோ?

வளம்பெருக்கும் நீள்குன்றச் சாரல் வளர்ந்த
இளமூங்கில் நற்றோள் இளம்பிடியே! அன்புடையோர்
உளம்வாட்டித் தீய்த்துக் கெடுப்பதுவோ பெண்கள்
தளதளத்த தோளின் தகை?

நாட்டிற் குயிரளிக்கும் நன்மழையை வானத்தில்
கூட்டிவரும் கார்மின்னல் சிற்றிடையே! அன்பரை
வாட்டி வதக்கி மனஞ்சோரச் செய்வதுதான்
தீட்டா இடைசெயலோ செப்பு?

வாத்தும் பிடியும் வளர்காட்டுப் பாறைமேல்
கூத்துப் பயிலும் களிமயிலும் உன்சாயல்
பார்த்து மிகஏங்கச் செய்யலாம்; அன்பைத்
தீய்த்தழிப்ப தாலென்ன வாம்?

செப்பக்கேள்:

சென்ற இளமை திரும்பா! மலர்ச்சோலைக்
குன்றும் பொய்கையும் குளிர்நிழற் பூங்காடும்
இன்றுபோல இருக்குமா என்றும்? நினைத்துப்பார்!
பேசாயோ?......

இனக்கிளிகள் உன்குரலைக் கேட்டுத் திரும்பித்
தினைக்கொல்லை என்றுன்னைத் தேடி வருமென்ற
மனக்கவலை யாலோ வாய்திறவா திருக்கின்றாய்?

பழமுண்ணும் கிள்ளை முன்காணு இணைகோவைப்
பழமென்றே உன்னிதழைப் பார்த்து விரைந்து
நுழையுமென் றஞ்சியோ வாய்திறவா திருக்கின்றாய்?

மாங்குயில்கள் நாண மரக்கூட்டில் பாட்டிசைத்துத்
தீங்கனியைக் கோதும் சின்னஞ் சிறுகுயில்கள்
ஈங்குவரு மென்று வாய்திறவா திருக்கின்றாய்?

முல்லை மலர்மொட்டு! தெங்கின் முளையரிசி!
பல்லில்லை வாயில்! மாதுளையின் வித்தென்று
சொல்லுவா ரென்று வாய்திறவா திருக்கின்றாய்?

விழிச்சிரிப்பும் வெள்ளரித் தீம்பழத்துக் கன்னச்
சுழிச்சிரிப்பும் கூட்டிவரும் வாய்திறந்தால் பூத்த
கழிசிரிக்கும் என்று கலங்கித் தவிக்கின்றாய்?

வாய்திறந்தால் முல்லை மலர்ந்துஆய் வண்டினங்கள்
ஆய்மலர் விட்டுன் இதழ்மலரை அண்டுமென்று
நோய்தீர் ஒருவார்த்தை சொல்லா திருக்கின்றாய்?

என்றேன்;

களுக்கென் றிடைகுலுங்கக் கார்முல்லைக் காடு
சிரித்தது போலச் சிரித்தாள்! நெகிழ்ந்தாள்!
சிறகடித்து வானப் பெருவெளியில் போய்த்திரியும்
மாடப் புறுவானே மே!





# அந்த மண்டு மாரன்!

கரு :
**மாப்பஸான்**

தமிழில் :
**ப. கோதண்டராமன்**

"**பா**ர்த்தாயா நண்பா, 'அந்த மண்டு மாரன்' என்று இப்போது தான் திரும்பச்சொன்னாய். மாரன் என்று சொல்லும் போது மண்டு என்று சேர்த்துச் சொல்லாமல் எவரும் இருப்பதில்லையே, அது ஏன்?" என்றேன் லபார்பிடம்.

சட்ட சபைப் பிரதிநிதியான லபார்ப் என்னை விழித்துப் பார்த்து, "அப்படியானால், மாரனுடைய கதை உனக்குத் தெரியதென்றா சொல்கிறாய்? நீயுந்தான் லரோஷலிவிருந்து வருகிறாய்" என்றான். மாரன் கதை எனக்குத் தெரியாதென ஒப்புக் கொள்ளவேண்டியதாய்விட்டது. பிறகு லபார்ப் கரங்களைத் தேய்த்துக் கொண்டு கதையை ஆரம்பித்தான்.

"மாரனை உனக்குத் தெரியாதா? லரோஷல் துறைமுகத்து அணையில் பெரிய ஜவுளிக்கடையொன்று அவன் வைத்திருந்தது உன் நினைவில் இல்லையா?"

"ஆகா, நன்றாகத் தெரியுமே".

"அப்படியானால், சரி. 1932லோ 1933லோ புதுச் சாக்கு பிடித்துக் கொண்டு வரவேண்டுமென்று சாக்குச் சொல்லி மாரன் இரண்டு வாரம் உல்லாசமாகக் காலங்கழிக்கப் பாரிஸ் சென்றது உனக்குத் தெரிந்திருக்கவேண்டும். பட்டிக்காட்டுக் கடைக்காரன் ஒருவன் பாரிஸில் இரண்டு வாரம் இருக்கிறதென்றால் அவன் ரத்தத்தில் சூடேறாமலிருக்குமா? ஒவ்வொரு நாள் மாலையும் நாடகம்; பெண்களின் ஆடை அவன் மீது உராய்ந்து சலசலக்கும்; இடைவிடாமல் பரபரப்பு; பைத்தியம் பிடித்துவிடுவதுபோலாய்விடும். சதா காலமும் இறுகலாக உடையணியும் நடிகரையும் இழிந்த ஆடை தரிக்கும் நடிகனையும் பார்த்தவண்ணமாயிருந்தான். முதல்தரமான உண்டிகளைத் தவிர வேறெதையும் அவன் சாப்பிடுவதில்லை. இதையெல்லாம் விட்டு வந்தாலும் பரபரப்பு மட்டும் போவதில்லை. முத்தங் கொடுக்க உதடுகள் அவாவும். இதனால் மனம் உற்சாகமடையும்.

"இரவு எட்டு மணி மெயிலில் லரோஷலுக்கு டிக்கட் வாங்கிய போது மாரன் இந்த நிலையில் தான்

இருந்தான். ஸ்டேஷனில் பிரயாணிகள் காத்திருக்கும் அறையில் மேலும் கீழுமாக நடந்தான். அது சமயம் இளநங்கையொருத்தி, முதியவள் ஒருத்தியை முத்தமிட்டாள். அதைக் கண்ட மாறன் திடுக்கென அவள் எதிரே நின்றான். அவள் முக்காடு விலகியிருந்தது. 'ஆகா, இவள் அழகுதான் என்னே!' எனக் களிப்புடன் முணு முணுத்தான் மாறன்.

அவள் 'போய் வருகிறேன்' என்று கூறி முதியவளிடம் உத்தரவு பெற்று, பிரயாணிகள் தங்குமிடத்திற்குள் நுழைந்தபோது, மாறன் அவளைப் பின் தொடர்ந்தான்; பிறகு அவள் ரயில் பிளாட் பாரத்திற்குச் சென்றாள்; மாறன் அவளைப் பின் தொடர்ந்தான்; பிறகு அவள் காலியாயிருந்த வண்டி ஒன்றினுள் ஏறினாள்; அங்கேயும் அவன் அவளைப் பின் தொடர்ந்தான். மெயிலில் செல்லும் பிரயாணிகள் மிகச் சொற்பம். இஞ்சின் ஊத, வண்டி புறப்பட்டது. அவர்கள் தனித்திருந்தனர். மாறன் அவளைத் தன் விழிகளால் விழுங்கினான். அவளுக்கு இருபது வயது இருக்கலாம். அழகாயும் உயரமாயும் இருந்தாள். பார்வையில் நாணம் மிகுந்திருந்தது. ரயில் கம்பளத்தைக் காலில் சுற்றித் தன்னிடத்தில் நீட்டிக்கொண்டு படுத்தாள்.

"இவள் யாரோ வென மாறன் தனக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டான். ஆயிரம் ஊகங்கள், ஆயிரம் எண்ணங்கள் அவன் மனத்தில் தோன்றின. 'ரயில்வே பிரயாணங்களில் எத்தனையோ எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கும் என்பர். தனக்கும் ஏதேனும் நடக்கலாம். யாருக்குத் தெரியும்? அதைப் போன்றதோர் அதிருஷ்டம் விரைவாக அடிக்கும். கொஞ்சம் துணிவுடன் நடப்பது நல்லது போலும். "துணிவு, மேலும் துணிவு, எப்போதும் துணிச்சல்" என்று சொன்னது டாண்டன் தானே. டாண்டன் இல்லாவிடில் மீரபோ. அதனால் பாதகமில்லை. ஆனால் என்னிடம்தான் துணிச்சல் இல்லையே, அது தானே சங்கடம். ஆகா, மக்களின் மனத்தை மட்டும் படிக்க முடிந்தால்! தினந்தோறும் நம்மையும் அறியாமல் அற்புதமான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன என உறுதியாகச் சொல்வேன். அவளும் அதையே விரும்புகிறாளென ஒரு சமிக்ஞை எனக்குக் கிடைத்தால் போதும்.

"பிறகு எப்படி யெல்லாம் நேர்ந்து வெற்றி ஏற்படலாமெனத் தனக்குள் கற்பனை செய்து பார்த்தான். பெண்ணைக் கௌரவித்து உதவுதல், சொற்ப ஊழியம் செய்தல், உத்சாகமுடன் காதல்மொழி பேசுதல் இவையெல்லாம் 'நீ எண்ணுகிறபடியே நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்ற அறிவிப்பில் முடியும் எனத் தன்னுள் கற்பனைச் சித்திரம் வரைந்து கொண்டான்.

"ஆனால் எப்படி ஆரம்பிக்கிறது என்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. சாக்கு அகப்படவில்லை. தகுதியான சந்தர்ப்பத்திற்குக் காத்துப் பார்த்தான். உள்ளம் கிளர்ச்சியுற்றது. மனம் குழம்பியது. தன் வீழ்ச்சியைப் பற்றிச் சிந்திக்கையில் இரவு கழிந்து கொண்டு வந்தது. அழகிய நங்கை இன்னும் தூக்கத்தில் இருந்தாள்; காலை விடிந்தது; கதிரவனின் முதல் மெல்லிய கதிர் தூங்கும் நங்கையின் முகத்தில் பட்டுப் பிரகாசித்தது. அவள் விழித்தெழுந்து நாட்டுக் காட்சியையும் பிறகு மாறனையும் பார்த்துப் புன்னகை புரிந்தாள். மகிழ்வுற்றவள் போல நகைத்தாள். அவள் பார்வை வசீகரமாயும் பிரகாசமாயும் இருந்தது. 'இரவெல்லாம் உன் இடத்தில் மரம் போல உட்கார்ந்திருக்க நீ மகா முட்டாளாகத் தான் இருக்க வேண்டும்' என அவள் சிரிப்புச் சொல்வதுபோலிருந்தது.

'என்னைப் பாரப்பா, நான் வசீகரமாயில்லையா? அழகிய நங்கை

யொருத்தியோடு தனியாயிருக்கையில் இரவெல்லாம் அப்படியா உட்கார்ந்திருப்பாய்? அட மக்கே!'

"அவள் அவனைப் பார்த்த போதும் புன்னகை செய்து கொண்டே இருந்தாள். சிரிக்கக் கூட ஆரம்பித்தாள். எதையாகிலும் பொருத்தமாகச் சொல்ல முயன்றான். புத்தியில் ஒன்றுமே படவில்லை. பிறகு பயங்கொள்ளிகள் காட்டும் துணிச்சலுடன், 'என்ன நடந்தாலும் சரி, துணிவேன்' எனத் தனக்குள் சொல்லிக் கொண்டான். திடுமென சொற்ப எச்சரிக்கையும் செய்யாமல் கரங்களை நீட்டியும் உதடுகளைப் பிதுக்கிக் கொண்டும் அவளிடம் சென்று, அவளைத் தன் கரங்களில் பற்றி முத்தமிட்டான்.

"அவள் குதித்தெழுந்து, 'ஐயோ, உதவிக்கு வாருங்கள்! உதவிக்கு வாருங்கள்!' என்று பீதியுடன் கூச்சலிட்டாள். பிறகு வண்டியின் கதவைத் திறந்து வெளியே கரத்தை அசைத்துச் சைகை செய்தாள்; பிறகு பீதியினால் பைத்தியம் பிடித்து வெளியே குதிக்க முயன்றாள். மனம் குழம்பிய மாரன், அவள் வெளியே குதித்து விடுவாள் என்றஞ்சி அவள் ஆடையின் கீழ் விளிம்பைப் பிடித்து 'ஓ! அம்மா! ஓ! அம்மா' எனத் திக்கினான்.

"வண்டியின் வேகம் குறைந்தது, பின் நின்றது. இள நங்கையின் பீதியுற்ற சமிக்ஞைகளைப் பார்த்த கார்டுகள் இருவர் ஓடி வந்தனர். அவள் அவர்கள் கரங்களில் அடைக்கலம் புகுந்து, 'அந்த மனிதன் என்னை...என்னை...' என்று திக்கினாள். பிறகு மூர்ச்சையடைந்தாள்.

மோஜே ஸ்டேஷனில் காவல் செய்த போலீஸ் சேவகன் மாரனைக் கைது செய்தான். அவனது கொடுமைக்கு ஆளான நங்கை சுய உணர்வு பெற்றதும் அவன்மீது குற்றஞ் சாட்டினாள். போலீஸார் அதை எழுதிக்கொண்டனர். ஐயோ பாவம், அந்த ஜவுளிக் கடைக்காரன் நள்ளிரவு வரையில் வீடுபோய்ச் சேரவில்லை. பொது விடத்தில் ஒழுக்க விரோதமான காரியமொன்றைச் செய்ததற்காக அவன்மீது வழக்கு தொடரப்பட்டது.

## 2

"அது சமயம் நானொரு பத்திரிகாசிரியராக இருந்தேன். ஒவ்வொரு நாளும் காமர்ஸ் காப்பி ஓட்டலில் மாரனைச் சந்திப்பதுண்டு. மேலே குறித்த சம்பவம் நடந்த அடுத்த நாள் அவன் என்னைப் பார்க்க வந்தான். இன்னது செய்வதென அவனுக்குப் புலப்படவில்லை. நான் ஒளிவு மறைவின்றி 'நீ சுத்த மண்டு; மரியாதையுள்ள எவனும் அவ்விதம் நடப்பதில்லை' என்றேன்.

"அவன் அழுதான். அவன் மனைவி அவனை நன்றாகப் புடைத்திருந்தாள். வியாபாரம் பாழாய் விடுமென்று எதிர்பார்த்தான். மரியாதை போய்விடும்; பெயர் சந்தியில் இழுக்கப்படும். நண்பர் பங்கமடைந்து அவனை விட்டுவிடுவர். கடைசியில் அவன்மீது இரக்கப்பட்டேன். எங்களுக்கு ஆலோசனை கூறுமாறு என் தோழன் ரிவெட்டை வரச்சொன்னேன். அவன் தமாஷ்பேர்வழி. ஆனால், புத்திசாலி. வழக்குத் தொடரும் அரசாங்க ஆபீசர் என் நண்பர். அவரைப் பார்க்குமாறு எனக்கு ஆலோசனை சொன்னான். மாரனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு மாஜிஸ்டிரேட்டைப் போய்ப் பார்த்தேன். அவமதிக்கப்பட்டவள் குமாரி ஹென்ரியட் பானல் என்னும் பெயருடைய இள நங்கையென்றும், சமீபத்திலேயே வீடுகளில் சிறுவர்க்குக் கல்வி கற்பிப்பதற்குத் தகுதியுடையவள் என நற்சாட்சிப்பத்திரம் பெற்றவள் என்றும், மோஜேயில் கௌரவமாக வியாபாரம் நடத்திய தன்மாமி, மாமனுடன் விடுமுறை நாட்களைக் கழித்து வந்தாள் என்றும், அந்த மாமன் போலீசாரிடம் புகார்செய்திருப்பதே மாரன் விஷயத்தைச் சிக்கலாக்கி விட்டதென்றும் அவர் சொன்னார் ஆனால், புகார்மட்டும்

வாபசு பெறப்பட்டுவிட்டால் பொது அதிகாரியாகிய தாமும் விஷயத்தை நழுவவிட்டு விடச் சம்மதித்தார்.

“மாரனிடம் சென்றேன். அவன் மனவெழுச்சியினாலும் துயரத்தினாலும் நோயுற்றுப் படுக்கையில் படுத்திருந்தான். அவனை விடாமல் திட்டின அவன் மனைவி என்னை அறைக்குள் அழைத்துச் சென்று அவனைக் காட்டி, ‘ஆகவே, இந்த மாரன் மண்டுவைப் பார்க்க வந்திருக்கிறீர்கள் போலும். அந்தச் செல்வக் குழந்தை இதோ!’ என்று உரக்கக் கத்தினாள். கைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு படுக்கை எதிரில் அப்படியே நின்றாள். நிலைமை எப்படி இருக்கிறதென அவனிடம் தெரிவித்தேன். அந்த மாமனையும் பார்த்து வருமாறு என்னைக் கெஞ்சிக் கேட்டான். அந்த நாசுக்கான காரியத்தைச் செய்ய நான் ஒப்பினேன். அவன் ‘இனி நான் அவளை முத்தமிடவும் மாட்டேனெனச் சத்தியமாகச்சொல்கிறேன்’ என்று பலதடவை உறுதிகூறினான்.

“எல்லாம் ஒன்றுதான். நீ சுத்த மண்டு” என்றேன். நான் உசிதப்படி செலவு செய்ய அவன் என்னிடம் தந்த ஆயிரம் பிராங்குகளை எடுத்துக்கொண்டு தோழன் ரிவெட்டுடன் அந்தப் பெண்ணின் மாமன்வீடு சென்றேன். அழகிய பெண்ணொருத்தி கதவைத் திறந்தாள். விவகாரத்தில் ஈடுபட்ட இளநங்கையே அவள் என்பதில் சந்தேகமேயில்லை. மெல்லிய குரலில் ரிவெட்டிடம் ‘என்ன அழகு! புத்தி மயங்குகிறதே! மாரனை இப்போதே புரிந்துகொள்ள முடிகிறது’ என்று சொன்னேன்.

தொன்னலே என்ற அந்த மாமன் எங்களை மரியாதையுடன் வரவேற்றான். பத்திரிகாசிரியர் இருவர் தன்னிடம் வந்திருப்பதுபற்றி மகிழ்ந்தான். ‘சரி, சமாச்சாரம் முடிந்தாற்போலத்தான்’ என்று ரிவெட் காதோடு சொன்னான்.

‘மருமகள் அறையை விட்டகன்றதும், விஷயத்தை மெல்ல ஆரம்பித்தேன். வழக்கு தொடர்வதால் வீண் அவமானமும் பழியுமே ஏற்படுமென்று அறிவுறுத்தினேன். செய்தி பரவினால் இளநங்கையின் வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் சொன்னேன். அவன் தன் மனைவியுடன் கலந்தாலோசிக்காமல் ஒரு தீர்மானத்திற்கும் வரமுடியவில்லை. வெளியே சென்றிருந்த அவள் அன்றிரவே திரும்பிவருவாள். திடுமென எங்களைப் பார்த்து, ‘இதோ பாருங்கள். எனக்கு ஒன்று தோன்றுகிறது. இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் படுங்கள். என் மனைவி வீடு திரும்பியதும் காரியத்தைத் திருப்திகரமாக முடித்துவிடலாமென்றே எண்ணுகிறேன்’ என்றான்.

அவன் அழைப்பை ஏற்றுக்கொண்டோம். மாமன் மருமகளை அழைத்தான். எல்லோருமாக தோட்டத்தில் உலாவ ஆரம்பித்தோம். ரிவெட் மாமனுடன் அரசியல் விஷயமாகப் பேசினான். நான் இளநங்கையுடன் மெல்ல நடந்தேன். அவளை என் பக்கம் திருப்ப முயன்றேன். அவள் கொஞ்சங்கூடக் குழப்படையாமல், நான் சொன்னதையெல்லாம் சுவையுடன் கேட்டாள்.

“நான் சொன்னேன்: ‘குமரி, இதெல்லாம் உனக்கு எவ்வளவு வெறுப்புத் தருவதாக இருக்கும் என்பதை யோசித்துப் பார். நீதிசபையில் நீ ஆஜராகவேண்டும். கெட்ட எண்ணத்துடன் பலபேர் உன்மீது கண் போடுவர். பலபேர் முன்னிலையில் ரயில் வண்டியில் நடந்ததையெல்லாம் சொல்லவேண்டும். உதவிக்காகக் கூச்சலிடாமல் நீ பேசாமல் அந்த வண்டியை விட்டிறங்கி அடுத்த வண்டியில் ஏறியிருந்தால், எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்’. அவள் சிரித்தாள்! ‘நீங்கள் சொல்வது சரிதான். நான் என்ன செய்வது? பயப்பட்டுவிட்டேன். பயம் வந்துவிட்டால் சிந்திக்க முடிகிறதா? நான் செய்த தவறுக்காகப் பிறகே வருந்தினேன். அந்த மட்டி மனிதன் பைத்தியக்காரன்போல ஒன்றும் பேசாமல் என்னிடம் வந்து என்னைப் பற்றி

ஞன். அவன் என்ன விரும்பினுன் என்பதையும் அறிய முடியவில்லை?' என்று சொல்லிக் கண்களை விழித்து என்னைப் பார்த்தாள்.

"'குமரி, இதோ பார். நீயோ கட்டழகி. உனக்கு எதிரே தனியாக இருந்த அம்மனிதன் உன்னைப் பார்த்துவிட்டு உனக்கு முத்தம் தர வேண்டும் என்ற விருப்பங்கூட இல்லாமல் சும்மாயிருந்துவிட முடியுமா? அவன் மன்னிப்புக்கு உரியவன்' என்றேன் நான்.

"அவள் இடி இடியென்று சிரித்தாள். 'சரிதான், விருப்பத்திற்கும் செயலுக்கும் இடையே, மரியாதை, கௌரவத்திற்கு இடமில்லையா?' என்ருள். 'சரி, இதோ பார். நான் இப்போது உன்னை முத்தமிடுகிறேன் என்று வைத்துக்கொள். நீ என்ன செய்வாய்? சொல்' என்றேன் வடுக்கென்று. அவள் என்னை ஏற இறங்கப் பார்த்தாள். 'ஓ! நீங்களா? அது வேறு விஷயம்!' என்ருள்.

"'வேறு விஷயம் என்று தெரிகிறதம்மா, அண்டை அயலில் என்னைப் 'பார்வைக்கு லட்சணமாயிருக்கும் லபார்ப்' என்றுதான் சொல்லுவர். அச்சமயத்தில் எனக்கு முப்பது வயது. ஆயினும், என்னைப் பொறுத்த மட்டிலும் வித்தியாசம் காட்டுவதேன்?' என்று கேட்டேன்.

"அவள் தோள்களைக் குலுக்கிவிட்டு, 'நீங்கள் அவனைப்போல முட்டாளில்லை. அவனைப்போல அவ்வளவு அவலட்சணமாயுமில்லை' என்ருள்.

"என்னைத் தவிர்க்க என்னிடமிருந்து திரும்புமுன்பே அவள் கன்னத்தில் மனமுவந்து ஒரு முத்தமிட்டேன். அவள் துள்ளி விலகினுள். 'நீங்களுந்தான் அடக்கமுள்ளவராக இல்லை. இனி அவ்விதம் செய்யாதீர்கள்' என்ருள்.

"அவளைத் தாழ்மையுடன் நோக்கி, தாழ்ந்த குரலில், 'குமரி, மாரன் செய்த குற்றத்தை நானும் செய்ததாக என்னையும் நியாயஸ்தலத்துக்கு இழுக்க வேண்டியதுதான்' என்றேன்.

"'என்?' என்று கேட்டாள்.

"'நிதானமாக அவளை நோக்கிக்கொண்டே சொன்னேன்: 'எனெனில், உயிர் வாழ்வோரில் மிக அழகிய நங்கையருள் ஒருத்தியாக நீ விளங்குகிருய். உன்னைப் பலவந்தம் செய்தால் அது ஒரு சிறப்பாகவே எனக்கு இருக்கும். உன்னைப் பார்த்ததும், பிறருங்கூட, 'என்ன இருந்தாலும் லபார்ப் அதிருஷ்டசாலி. 'அந்த பாக்கியம் அவனுக்குத் தகும்' என்று சொல்லியிருப்பர்.

"அவள் மீண்டும் குதுகலமாகச் சிரித்து, 'நீங்கள் ஒரு வேடிக்கை மனிதர்!' என்ருள். அவள் அதைச் சொல்லி முடிக்கு முன்பே என் கரங்களால் அவளைத் தழுவி, நெற்றி, கன்னம், கண்கள், உதடு முதலிய எல்லா இடங்களிலும் ஆர்வமுடன் முத்தமிட்டேன். கடைசியில் தன்னை விடுவித்துக்கொண்டு, வெட்கத்துடனும் கோபத்துடனும், 'ஐயா, நீங்கள் முறைகெட்டவர். நீங்கள் சொன்னதற்கெல்லாம் நான் செவிசாய்த்ததற்காக வருந்துகிறேன்' என்ருள்.

"சிறிது குழப்பத்துடன் அவள் கையைப் பிடித்து, 'குமரி, உன் மன்னிப்பைக் கேட்கிறேன். நான் உனக்குக் கோபமுண்டாக்கிவிட்டேன். மிருகத்தைப்போல நான் நடந்துகொண்டேன். நான் செய்ததற்காக என்மீது நீ கோபங்கொள்ள வேண்டாம். நீ மட்டும் இதை அறிவாயானல்—' என்று மேலும் சொல்லாமல் நின்றேன். 'அறிவதற்கு ஒன்றுமில்லையே' என்ருள் அவள். 'குமரி, நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்றேன் நான்.

"அவள் உண்மையிலேயே ஆச்சரியமடைந்தாள். என்னைப் பார்க்க முகத்தை உயர்த்தினுள். 'ஆமாம், குமரி. நான் சொல்வதைத் தயவு செய்து கேள்; மாரனை நான் அறியேன். அவனைப்பற்றிய கவலையும் எனக்கில்லை. அவன் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டால் எனக்

கொன்றுமில்லை. சென்ற ஆண்டு நான் உன்னைப் பார்த்ததிலிருந்து உன்னைப்பற்றிய எண்ணம் என்னை விட்டு அகலவேயில்லை. என்னை நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, உன்னைப் பூசிக்கும் நான் உன்னை மீண்டும் பார்க்க அவாவி னேன். இந்த முட்டாள் மாரனை ஒரு சாக்காகக் கொண்டு உன்னைக் காணவந்தேன். மரியாதையின் வரம் பைக் கடந்து செல்வதற்கான நிலைமை ஏற்பட்டது பற்றி வருந்து கிறேன்' என்றேன்.

"என் பார்வையிலிருந்து உண் மையைக் கண்டறிந்து மீண்டும் புன் னகை செய்ய ஆயத்தமானாள்; பிறகு அவள் 'நீங்கள் சுத்த மோசக்காரர்!' என்று முணுமுணுத்தாள். நான் என் கையை உயர்த்தி, 'சத்தியம் செய்கிறேன், நான் பேசுவது உண் மையே' என்று சொன்னேன். அவள் 'உண்மையாகவா?' என்றாள்.

"அவளுடைய மாமாவும் ரிவெட் டும் வேறொரு பாதையில் சென்று மறைந்துவிட்டதனால், நாங்கள் இரு வரும் தனித்திருந்தோம். என் காதல் மொழிக்குப் பின் அவள் கரங்களைக் கெட்டியாகப் பிடித்து முத்தமிட் டேன். எவ்வளவுதூரம் நம்பலா மென அறியாதநிலையிலும், அனுபவம் மட்டும் புதிதாவும் மனோரம்மிய மாயும் இருந்தது அவளுக்கு. நான் சொன்னதை நான் நம்பினேன். வெளிறினேன், நடுங்கினேன். அவள் இடையில் கையைவளைத்து காதோடு பேசினேன். அவள் மெய்மறந்தாள்.

பின்னால் திரும்பியபோது ரிவெட் டைப் பார்த்தேன். அவன் சிரித்துக் கொண்டே 'என்னப்பா, இவ்வித மாகத்தான் மாரன் விஷயத்தைத் தீர்க்கிறாயாக்கும்?' என்றான். நான் பெருமையுடன் 'முடிந்ததைத்தான் செய்கிறேன். சரி, மாமா விஷய மென்ன? எவ்வளவுதூரம்? மரு மகளைப் பொருத்தவரையில் நான் ஜவாப்தாரியப்பா' என்றேன். 'எனக்கு அவ்வளவு அதிருஷ்டம் ஏற்படவில்லையப்பா' என்றான் அவன். இருவரும் பின்னர் கை கோத்துக்கொண்டு உள்ளே சென் றோம்.

## 3

"உணவுக்குப் பின் நிலவொளியில் உலாவச் சென்றோம். எண்ணிய இனிய மொழிகளையெல்லாம் அவள் காதோடு சொன்னேன். பிறகு வீட்டையடைந்ததும், அத்தை அடுத்த நாள் காலை எழுமணிக்கே வருவாளெனத் தந்தி கிடைத்தது.

"'நல்லது ஹென்ரியட், இக் கனவான்களுக்கு அவர்கள் படுக்க வேண்டிய அறைகளைக் காட்டு' என் றார் மாமன். அவள் முதலில் ரிவெட் டுக்கு ஓர் அறையைக் காட்டினாள். பிறகு என்னை என் அறைக்கு அழைத்துச் சென்றாள். அவள் என் னுடன் தனித்திருந்ததும் அவளைப் பற்றி உணர்ச்சியை எழுப்பி அவள் எதிர்ப்பை வெல்ல முயன்றேன். அவள் இணங்கிவிடுவாள்போலிருந்த போது அறையினின்று தப்பியோடி னாள்.

"கதவைத் திறந்ததும் அவள் உள்ளே நுழைந்து 'நீங்கள் காலை யில் டீயா, காப்பியா, கொக்கோவா சாப்பிடுவீர்கள்? கேட்க மறந்துவிட் டேன்' என்று கேட்டாள் 'நான்—நான்' என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே, அவள் தன்னை விடுவித்துக்கொண்டு மெழுகு வர்த்தியை அணைத்துவிட்டு மறைந் தாள்.

"ஆமாம், நங்கையின் அறைக்குப் பதிலாக மாமாவின் அறைக்குள் சென்றுவிட்டால் என்ன செய்வது? ரிவெட்டின் அறையைத் தேடுவதாகச் சொன்னால் போகிறது, என்று எண்ணினேன். கதவுகளையெல்லாம் பரீட்சித்துக் கொண்டே ஓர் அறைக் கதவின் கைப்பிடியைத் தொட்டேன். அதைத்திருப்பி உள்ளே சென்றேன். நல்லகாலமாக அது ஹென்ரியட்டின் அறையே. அவள் படுக்கையில் உட் கார்ந்துகொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். மெல்ல அவ

ளிடம் சென்று, 'படிப்பதற்கு ஏதா வதொரு புத்தகம் வேண்டும். கேட்க மறந்து விட்டேன். நான் படிப்பதெல்லாம் காதல், வீரம் மலிந்த கதைகள்' என்றேன். அவள் தந்த புத்தகத்தை படித்தேன். பல அத்தியாயங்களைப் புரட்டிப் பார்த் தேன். முடியுமுன் மெழுகுவர்த்தி எரிந்து தீர்ந்து விட்டது.

"என்னப்பா, வந்த வேலையைக் கவனிக்காமல் ஏதோ லீலைகளில் ஈடுபட்டிருக்கிறாயே" என்று கோபத் துடன் கேட்டான் ரிவெட்.

"எட்டுமணிக்கு அத்தை வந்தாள். அவளுடன் விவாதம் சிறிது நடந்தது. அவர்கள் வழக்கை வாபஸ் பெற்ற னர். நகர ஏழைகளுக்குத் தானம் செய்யும்படியாக அவர்களிடம் ஐநூறு பிராங்க் கொடுத்தேன். ஹென்ரியட் மாமனுக்குப் பின் பக்கமாக நின்று தங்கும்படி சமிக்ஞை செய்தாள். நான் உடன்பட்டேன். ஆனால், ரிவெட் பிடிவாதம் செய் யவே, நானும் அவனுடன் புறப் பட்டுப் போக வேண்டியதாயிற்று. ரயில் வண்டியில் ஏறி அவள் கரங் களைக் குலுக்கினேன். 'ரிவெட்' நீ மிருகம்' என்று வைதேன். அதற்கு அவன் 'உன் லீலையை என்னால் புரிந்துகொள்ள முடிய வில்லை' எனப் பதிலளித்தான்.

"நான் பத்திரிகாலயம் அடைந் தேன். 'அந்த மண்டு மாரன் விஷயத் தைத் திருப்திகரமாக முடித்துக் கொண்டு வந்தீர்களா' வென்று அனைவரும் கேட்டனர். லராஷல் நகரமே இது விஷயமாகப் பரபரப் படைந்தது. நானும் ரிவெட்டும் மாரன் வீட்டிற்குச் சென்றோம்.

"மாரன் காலில் கடுகு பிளாஸ்திரி போட்டுக்கொண்டும், தலையில்கட்டுப் போட்டுக் கொண்டும் துயரமே உருவெடுத்தவன் போல சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவன் மனைவி பெண்புலியைப்போல் அவன்மீது எரிந்துகொண்டிருந்தாள். எங்களைப் பார்த்ததும், அவன் கரங் களும் கால்களும் நடுங்கின. நான் உடனே, 'அசட்டு மனிதரே, யாவும் சரியாக முடிந்து விட்டது. இனி யும் அம்மாதிரி நடக்கப் போகிறீர் கள், பத்திரம்' என்றேன்.

"அவன் எழுந்து என் கரங்களைப் பிடித்து முத்தமிட்டான். ரிவெட் டைத் தழுவினான். தன் மனைவியை முத்தமிட்டான். ஆயினும், அவன் அதிர்ச்சியினின்று முற்றும் குண மடையவில்லை. நாடெங்கும் அவனை 'மண்டு மாரன்' என்றே கூப்பிட் டனர். அது அவன் இதயத்தில் ஈட்டியால் குத்துவது போலிருந்தது. அவன் நண்பர்களும் கேலி செய்தனர். விருந்தில் பன்றி இறைச்சியைச் சாப்பிட்ட போது மாரனைப் பார்த்து 'மாரன், இது உன்னுடைய ஒரு துண்டு (பன்றி யின் அம்சம்) என்றனர். இரண்டு ஆண்டுகளில் அவன் மாண்டான்..."

"நான் ஒருசமயம் மக்கள் சபைக்கு ஒரு அபேட்சகனாக நின்றேன். அதுபற்றி நொத்தேர் பெலாங்கிலைப் பார்க்க நேர்ந்தது. அப்போது ஒரு செல்வ மகள் என்னை வரவேற்றாள். 'என்னை நீங்கள் அறியீரோ?' என்றாள்.

'எனக்குத் தெரியவில்லையே' என்று திக்கினேன்.

'நான்தான்ஹென்ரியட்'என்றாள்! அவள் உள்ளே சென்றதும் அவள் கணவன் என்னைப் பார்த்துச்சொன் னார்: 'நான் வெகு நாட்களாக உங் களைப் பார்க்க எண்ணினேன். என் மனைவி உங்களைப்பற்றி மிகவும் சொல்லியிருக்கிறாள். எந்த துர திருஷ்டமான நிலையில் அவளைத் தாங்கள் சந்தித்தீர்கள் என்பதையும், நீங்கள் எவ்வளவு கௌரவமாக நடந்துகொண்டீர்கள் என்பதையும், அந்த மண்டு மாரன் விஷயத்தில் எவ்வளவு அக்கரை காட்டினீர்கள் என்பதையும் நான் அறிவேன்...'

"அதைக் கேட்ட நான் உள்ளுக் குள்ளேயே சிரித்தேன்."

காலத்தின் செல்வன்

இலக்கிய விமரிசனம்.

# எச். ஜி. வெல்ஸ்

கா. அப்பாத்துரை

3

அவர் காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞான அற்புதங்களை மட்டுமன்றி, அதன் பின் ஏற்பட்டுள்ள அற்புதங்களையும் வெல்ஸ் தொலை நோக்குக் கண்கள் கண்டன. கண்டு சித்திரித்தன. அதுமட்டுமன்று. இன்றும் ஏற்படாத, ஏற்படக் கூடுமோ, கூடாதோ என்று வரையறுக்க முடியாத அற்புதங்களையும் அவர் தீட்டிக் காட்டும் திறம் வியக்கத்தக்கது. கலைஞர்கள் பெரும்பாலும் தம் காலத்தையும், ஒரு சிலர் சென்ற காலத்தையும் நமக்கு உயிரோவியமாகத் தீட்டிக் காட்டியதுண்டு. பிளேட்டோ, சர் தாமஸ் மோர், வில்லியம் மாரிஸ் ஆகிய அருகிய சிலர் வருங்காலத்தைக் கனவுலகாகத் தீட்டியதுண்டு. ஆனால் வெல்ஸ் இவ்வனைவரையும் கடந்த கனவுலகக் கலைஞர். ஏனென்றால் அவர் வருங்காலத்தை அற்புத உலகாகமட்டும் தீட்டிக் காட்டவில்லை. நம் நிகழ்காலக் கருத்துக்கிசைய அதை உருவகித்துக் காட்டி நம்மை நம்பவைக்கிறார். நிகழ்காலப் போக்கிலும் குற்றம் குறைகளில் நம் சிந்தனையைத் தூண்டுகிறார். ஒரு சில இடங்களில் அவர் எதிர்கால நோக்கு முற்றிலும் நிறைவேறியும் உள்ளது.

## மூவகைப் படைப்புக்கள்

சிறுகதை, புனைகதை அல்லது நாவல், கட்டுரை நூல்கள் ஆகிய மூன்று வடிவங்களுடன் வெல்ஸின் கைத்திறம் காட்சியளிக்கிறது. ஆனால் அவற்றின் பண்பை நோக்கி நாம் அவற்றை மூன்று வேறுவகைகளாகப் பிரிக்கலாம். விஞ்ஞானம் பற்றிய அவர் கற்பனைகள் இவற்றுள் முதன்மையானவை. அமெரிக்காவிலும் வட ஐரோப்பாவிலும் அவருக்குப்பெரும் புகழ் அளித்தவை இவையே. இவற்றை நாம் காலத்தின் கலைச் செல்வங்கள் அல்லது பிரசாரத்தில் மலர்ந்த மலர்கள் என்னலாம். 'காலப்பொறி', 'உலகங்களின் போராட்டம்', 'கண்காணுமனிதன்', 'குருடர் உலகம்', 'கடல்நங்கை' 'திங்களுலகடைந்த முதல் மனிதன்' ஆகியவை இத்திறத்தவை.

ஆனால் வெல்ஸுக்குத் தனிச்சிறப்பளித்த இன்னொரு வகை இலக்கியம் உண்டு. இவையே பிரசார அறிவுரைச் சார்பில்லாமல், வாழ்க்கைக் கண்ணாடியாயமைந்த 'கிப்ஸ்', 'காதலும் லூயிஷாமும்', 'பாலி' ஆகிய புனைகதைகள். நடுத்தர வகுப்பின் புறவாழ்வுக் குறைகளையும் அகவாழ்வின் பண்புகளையும் சாயல்களையும் எடுத்துக்காட்டும் நடுத்தரவகுப்பின் காவியங்கள் அவை. இத்தாலியிலும் தென் ஐரோப்பாவிலும் பெரும்பாலாகமொழிபெயர்க்கப்பட்டவை. இவையே அந்நாடுகளின் வளரும் நடுத்தர வகுப்பின் எழுச்சிகளுக்கு அவை தூண்டுதல் தந்தன.

வெல்ஸின் பரந்த பெரும் புகழுக்குக் காரணமான இன்னொரு துறை கல்வியறிவுத் துறையே. உலக வரலாறு என்ற பெயரைக் கூறியவுடனே நாம் எச். ஜி. வெல்ஸின் பாரிய 'உலக வரலாற்றையோ' அல்லது அதன் சிறிய பதிப்பாகிய 'உலக வரலாற்றுச் சுருக்கத்தையோ' தான் எண்ணுவோம். உலகெங்கும் எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு அது மாணவர் ஆசிரியர் உலக அறிவை வளர்க்கும் அறிவுக் கருவூலமாகியுள்ளது.

இறுதியாக, நான்காவதாக என்று கூடக் கூறலாம், கனவுலகக் கலை

ஞர்களிடையே தலைசிறந்த கனவுலகக் கலைஞராக விளங்கியவர் வெல்ஸ். அவரது 'தற்கால உலகக் கனவு' (*Modern Utopia*) மட்டுமன்றி, அரசியல் சமூக நூல்கள் யாவுமே இப் பண்பு சார்ந்தவை.

அரை நூற்றாண்டுக்கு மேலாக ஆண்டுக்கு ஒன்றிரண்டு எனக் கலைப் படைப்பை அள்ளி எறிந்து கலை உலகைத் திறைகொண்டவர் வெல்ஸ்.

குடியாட்சிக் கலைஞன்.

வெல்லின் இலக்கியப்பணி முதன்முதல் பத்திரிகைத் துறையுடனேயே தொடங்கிற்று. இறுதி வரை அப்பணியின் பெரும் பகுதியும் பண்பில் பத்திரிகை இலக்கியமாகவே இருந்தது. பத்திரிகையின் பரப்பு, கவர்ச்சி, ஆழமின்மை, எளிமை ஆகியவை அவர் நூல்களின் தலைசிறந்த பண்புகள். பத்திரிகை வாசகர்களைப் போலவே அவர் வாசகர்களும் மிகப்பரந்த சமூக மக்களாயிருந்தனர். குடியாட்சிக் காலத்தில் இப்பண்பின் முக்கியத்துவம் எவ்வளவு என்று கூற வேண்டுவதில்லை. தேர்தல் பெட்டியில் தேர்வுச் சீட்டுப் போடச்செல்லும் மொழியாளர்களை அவர் இலக்கியம் சென்றெட்டி அவர்கள் உள்ளங்களைப் பண்படுத்த அவர்களுக்குக் குரல்கொடுக்க, அவர்கள் உள்ளத்தில் நல்லவாக்களைத் தூண்டப் பெரிதும் காரணமாயிருந்தது.

எழுத்தாளர் வாழ்வுக்கும் செல்வத்துக்கும் பொருத்தமில்லை என்று கருதப் படுவதுண்டு. வெல்லின் வாழ்வு இதற்கு முற்றிலும் விலக்கு. குடியாட்சிக் கலைஞனாகிய அவருக்குக் குடியாட்சி புகழும் செல்வமும் வாரிவழங்கிற்று.

அரசியலிலும் சமயத்துறையிலும் இரண்டிலுமே வெல்ஸ் ஆட்சிக் குழுவையும், ஆட்சிக்குழு நலங்களையும் அதற்கு வாய்ப்பான தத்துவங்களையும் எதிர்த்தார். முதலாளித்துவ ஆட்சியின் முடிசூடா மன்னர்களான பெரு முதலாளிகளையும் வணிக மன்னரையும் அவர் தாக்கினர். மதத்தின் தெய்வீகத் தன்மை, மனிதன் படைப்பிலேயே பாவி என்ற கிறிஸ்தவ சமயக் கோட்பாடு, உருவ வழிபாடு ஆகியவற்றை அவர் அறவே வெறுத்தார்.

இருபதாம் நூற்றாண்டின் இருபது முப்பது ஆண்டுகளில் மக்கள் அறிவிலும் கல்விமுறையிலும் வெல்ஸ் கொண்ட பங்கு மிகப்பெரிது.

வெல்ஸ் ஆங்கில மக்கள் இலக்கியப் பிரதிநிதி. அவர்கள் குணங் குறைகளை, அவா அச்சங்களைப் பல துறைகளிலும் தீட்டிக் காட்டிய கலைஞர் அவரே.

(மேலும் கட்டுரைகள் வரும்)

### பன்மடி ஆகுபெயர்

வஞ்சி என்பது மூங்கில். வடமொழியில் இதுவே வஞ்சுளா என வழங்குகிறது. இது கொடி மூங்கிலுக்கும் பூக்கும் பிற கொடிகளுக்கும் ஆகு பெயராயிற்று. பூங்கொடி போன்ற பெண்ணுக்கு உவமையாகு பெயராயிற்று.

தமிழர் ஆகுபெயரார்வம் இத்துடன் நிற்கவில்லை. மூங்கில் நிறைந்த நாடு வஞ்சி நாடு; அநாவது சேரநாடு. அதன் தலைநகர் வஞ்சிமாநகர். சேரன் வஞ்சியான்.

கொடிமூங்கிலால் செய்த படகுக்குவஞ்சி சினையாகு பெயர். மலையாளத்தில் இன்னும் இச்சொல் இப்பொருளில் வழங்குகிறது. படகோட்டிகள் பாடும் பாட்டு வஞ்சிப் பாட்டு. அதன் ஒருவகையே இன்று தமிழின் நான்கு பா வகைகளில் ஒன்றுன வஞ்சிப்பா.

# ஹேமாவின் கணவன்



சகுணபாய் மான்சிங்

நல்ல வெள்ளிய நிலவொளி. அதே மேளதாள ஒலியுடன் கூடின ஓர் திருவிழா தினம். கதம்பம், மல்லிகை, ரோஜா, முல்லை, தாழை மலர்களின் கலந்த பரிமளம் பரவசப்படுத்தியது. சப்பரங்கள் சென்றவுடன் நிலவிய கற்பூர, தீவட்டி, மலர்களின் இசைந்த மனதைச் சுழலச் செய்த வோர் மணம்; திருவிழாப் பார்க்கச் செல்வோரின் பட்டாடைகளின் சலசலப்பு; வளையல்கள் குலுங்கும் சத்தம், கலகலப்பாகப் பேசி, நகைத்து இன்பமனுபவித்த மக்கள் கூட்டத்தின் எதிரொலி! ஆம்; அதேமாதிரியான ஓர் திருநாள். ஆனால் அந்தத் திருவிழாவுக்கும் இதற்கு மிடையே ஆறு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன.

அந்த ஆறு ஆண்டுகட்கு முன் நடந்த சம்பவத்தை ஞாபகப்படுத்திக் கொண்டேன். என்னை யறியாமல் பெருமூச்சொன்று வெளிவந்தது. 'அந்த வாலிபனின் கதி யென்னவாயிற்றோ? இறந்திருப்பானோ? தன் புத்தி அடைந்திருப்பானோ? அல்லது... ஐயோ பாவம், அவன், இன் பக்கோட்டை மாண்டு ஒழிந்தது போல் அவனும் மாண்டு......' என்றெல்லாம் சிந்தித்தவாறு நான் ஜன்னலருகே உட்கார்ந்து, வருகிற போகிற மக்களை மின்னொளியில் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் இன்னமும் பூரண சுகமடையாதிருந்ததால் வேடிக்கை பார்க்கவும், திருவிழாவில் மகிழ்ச்சியுடன் பங்கெடுத்துக் கொள்ளவும் முடியவில்லை.

என்ன அதிசயம்! அதே வாலிபன் அந்தக் கூட்டத்தில் சென்று மறைந்ததைப் பார்த்தேன். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அதே வாலிபனென நிச்சயமாகச் சொல்லுவேன். அப்படியானால் அவன் இறந்துபோகவில்லை; ஆனால் சுய புத்தியடைந்தானா என்ற கேள்வி பிறந்து என்னை உலுப்பியது. அதே எண்ணத்துடன் உட்கார்ந்தவள், ஆறு ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்த சம்பவத்தைப் பளிச்சென்று ஒவ்வொன்றாக மனத் திரையில் அடுக்கி

வேதனையுடன் நினைத்து வருந்தினேன்.

பூர்ணச் சந்திரனையொத்த அழகிய பொன்னிறமேனி. மன்மதனென்றே சொல்லக்கூடிய அளவு முகவசீகரம் பெற்ற, ஒல்லியாக வளர்ந்த வாலிபன். வயது, இருபத்தைந்துக்குமேல் இராது. சுருட்டைக் கிராப்புத்தலை; கட்டியிருந்தது தூய வெண்மை நிற வேஷ்டியும், சட்டையும். படித்தவனென்று முகத்தைப் பார்த்தவுடன் சொல்லக்கூடியதாயிருந்தது. பணக்கார வீட்டுப் பையனென்று பார்த்தவுடன் சொல்லிவிடலாம். ஆனால்... பாவம், அவனுடைய முகத்தில் தோன்றிய வெறுமையோ அல்லது, அதைக்காட்டிலும் பயங்கரமான வெறித்த பார்வையோ என்னை அந்த மின்சார ஒளியில்கூடத் திகிலடையச் செய்தது.

அப்போது நான் தனியாயில்லை. என்னோடு என் சிநேகிதி சரளா, மைத்துனி நிர்மலா, இன்னும் அடுத்த வீட்டு சாந்தா, லீலா எல்லோருமிருந்தனர். நிர்மலா ஒரு கட்டழகி. அவளுக்குக் கல்யாணமாகி இரண்டே மாதங்கள்தான் ஆகியிருந்தது. நாங்கள் ஐந்துபேரும் திருவிழாப் பார்த்துவிட்டுத் திரும்பி எங்கள் வீட்டு வாயிலண்டை பிரியுமுன் சில நிமிடங்கள் நின்று, அடுத்த நாள் 'புரோகிராமை'த் திட்டமிட்டுக்கொண்டிருந்தோம்.

திடீரென அந்த அழகிய வாலிபன் நிர்மலாவை நோக்கியவாறு விரைவாக நடந்து வந்தான். நிர்மலா எங்களுக்குப் பின்னால் ஒளிந்தவாறு 'ஐயையோ......ஐயையோ' எனப் பதறினாள். அதற்குள் அவன் பிறகே இரைக்க, இரைக்க 'ராமச்சந்திரா' வெனக் கூவியபடியே ஒரு வயோதிகர் ஓடி வந்துகொண்டிருந்தார். நாங்கள் 'ஐயோ, பயித்தியம்போல் இருக்கே' எனப் பயந்து நடுங்கிக்கொண்டு நின்றோம். ஓடிவந்த வயோதிகர் அவ்வாலிபனைப் பிடித்துக்கொண்டார். அந்த வாலிபன் எவ்வித உபத்திரவமும் பண்ண எத்தனிக்கவில்லை. நிர்மலாவையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அவனது வெறித்த, பசித்த கண்கள் கவலையுடன் வேறு திசையில் திரும்பி, அங்குமிங்கும் எதையோ தேடும் பாவனையில் சுற்றிச் சுற்றி நோக்கின. நாங்களெல்லோரும் திகைத்து நின்றுகொண்டிருந்தோம். வயோதிகர் பெருமூச்சொன்று விட்டபடி 'நான் நினைத்தது சரிதான். அவனுடைய பிரிய ஹேமாவாயிருக்கலாமா வென இந்த அழகியைக் கவனித்துப் பார்த்திருக்கிறான். அவன் அறையில் காணாதவுடன், திருவிழாக் கூட்டத்தில் தன் ஹேமாவைத் தேடப் புறப்பட்டுவிட்டானென்று யூகித்துக்கொண்டுதான் ஓடிவந்தேன். நல்லகாலம் உடனேயே அகப்பட்டான். வழியிலே எதாவது காரிலோ வண்டியிலோ அகப்பட்டுவிட்டால்...ஆனால் ஒருவருக்கும் உபத்திரவம் கொடுக்கமாட்டான், ஸார். பரமசாது. படித்தவன், பணக்காரன்; அவன் தலையெழுத்து...' என்று பக்கத்தில் கூடியிருந்த கூட்டத்தில் நின்ற கிருஷ்ணசாமியிடம் கூறினார்.

பிறகு சட்டென அவ்வாலிபன் கைகளைப்பிசைந்துகொண்டு தானாகத் திரும்பிவிட்டான். வயோதிகர் பெருமூச்சுடன் அவனைப் பின்தொடர்ந்தார். கிருஷ்ண



சாமி அவரை நிறுத்தி, "என் ஸார் பையன் வந்து மூன்று மாதங்கள் ஆகிறதே, ஏதாவது பிரயோஜனம் உண்டா என்ன? அவன் ஹேமாவை மறக்கப்போவதுமில்லே, இந்த நிலேயினின்று மீளப்போவதுமில்லே என்பதே என் அபிப்பிராயம். ஆனல் ஒன்று, எதையும் காலப்போக்கில் ஆற்றிவிடலாம்" என்று இழுத்தார். வயோதிகர் தலேயாட்டிக்கொண்டே மீண்டும் நடந்தார். திரும்பவும் பின்னல் எட்டிப்பார்த்து, "என் ஸார் அவன் பிழைத்துக் கிடந்தால் என்னவோ சரிப்படுத்தலாம். ஹூம், ஆனல் அதற்கும் அவன் உயிருடன் இருக்கவேண்டுமே. பையன் ஒரு கவளம் அன்னம்கூடச் சாப்பிடக் காணுமே. எல்லாம் கட்டாயத்தில் நடந்து வருகிறது. பையன் அதோ போய்விட்டான். நான் வருகிறேன் ஸார்" என்று கடைசியாக வயோதிகர் விரைந்து சென்ருர்.

அந்த வாலிபனின்கதையை அறிய ஆவல் பிடுங்கித் தின்றது. கிருஷ்ணசாமி எங்கள் குடும்ப நண்பராதலால் அவரிடம் நாங்கள் மாறி மாறி அவனேப்பற்றிக் கேட்க ஆரம்பித்தோம். அவர் பெருமூச்சு விட்டபடி, "ஆஹா, அது பெரிய கதையாச்சே! இப்படி உள்ளேபோகலாம்," என்ருர்.

"...நான் கூறப்போகும் சம்பவம் நடந்து நான்கே மாதங்களாகின்றன. பங்களூரிலுள்ள பிரபல பாரிஸ்டர் ராகவனின் ஒரேபெண்தான் ஹேமாவதி. அவள் இந்த ராமச்சந்திரனுடைய மனேவி. அவளுடைய நாற்பது நாள் இல்லற வாழ்க்கையை நினேத்தால் யாருக்குத்தான் பைத்தியம் பிடிக்காது? ஹேமாவுக்கு வயது பதினெட்டு. அதிரூபவதியென்ருல் அது மிகையாகாது. டாக்டர் நண்பர் அவள் போட்டோவைக் காட்டினர். அழகென்ருலும் அழகுதான். அவளே அறிந்தவர்கள் அவள் குண அழகையும் வெகுவாகப் புகழ்ந்து கூறுகின்றனர். தந்தைக்கு ஒரே பெண்ணனதால், உண்டு, உடுத்து, படுத்து, எழுந்திருக்கத் தான் அவளுக்குத் தெரியும். கோபமாகவோ, இரக்கமின்றியோ, அவளிடம் எவரும் பேசி அறிய மாட்டாள். சமயலறை எப்படியிருக்குமென்றுகூடப் பார்த்தறியாதவள் ஹேமா. தந்தை சீமைக்குப் போய் வந்தவராதலால், சாப்பாடு நவநாகரிகப் போக்குப்படியே தான் நடந்து வந்தது. மேஜையில் தான் உட்கார்ந்து சாப்பிடுவாள். 'இண்டர் மீடியட்' வரை படித்து, வீணே, பியானே முதலிய சங்கீதங்களும் கற்றறிந்த அபூர்வப் பெண்.

ஹேமாவுக்குப் பற்பல படித்த வாலிபர்கள் குட்டிக்கரணம் போட்டுக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தவமிருந்தனர். ஆனல் தந்தை யாவரையும் தள்ளிவிட்டு, அப்போது தான் எம். ஏ. பாஸ் பண்ணி, உத்தியோகம் இல்லாதிருந்த ராமச்சந்திரனேத் தேர்ந்தெடுத்தார். காரணம், அவன் அழகு மற்றவர்களுக்கில்லே. அவன் குணமும் பழுதற்றது. ஹேமாவுக்கும் அவனேக் கண்டவுடன் பிடித்துவிட்டது.

ராமச்சத்திரனுடைய பெற்ருேர் பெரிய நிலபுலன்கள் படைத்த மிராசுதார்கள். ஏகப்பட்ட சொத்து சுகங்களிருந்தன. ஆனல் சுத்த அநாகரிகக் குடும்பம். தங்கள் ஏக புத்திரனேப் பட்டணத்தில் படிக்க வைத்திருந்ததால் அவன் போக்குகள் தற்காலத்தியவை. பெற்ருேருடன் அவன் தங்கிய நாட்கள் கொஞ்சமே. கல்யாணமான பின்பும் ராமச்சந்திரனே ஹேமாவை அவள் தந்தை வீட்டில் ஒரு மாதகாலம் இருக்க வைத்திருந்தான். நிரந்தரமாக அங்ஙனம் தானும்கூட இருந்துவிடலாமென்று கூடத் திட்டம் பண்ணியிருந்தான். ஆனல் தலேவிதியென்ற வழிமறிப்பேய் ஒன்றுதானிருக்கிறதே! மாமியார் மருமகளே வைத்து அழகு பார்க்க ஆசைப்படுகிருளென்று தம்

பதிகள் ஒருவாரம் அங்கு தங்கி வருவதென்று நிச்சயித்து நாட்டுப்புற வாசத்துக்குப் புறப்பட்டனர். மூன்று நாட்கள் எப்படியோ மாமனார் மாமியாருடன் கழிந்தன. நான்காவது நாள் ராமச்சந்திரனுக்கு உயர்தர வேலை விஷயமாக ஏதோ செய்தி வந்தது. உடனே புறப்படவேண்டியதாயிருந்ததால் அவன் பெற்றோரிடம் தன் ஹேமாவைக் கண்ணைப் போலக் காப்பாற்றுமாறு கூறிவிட்டுப் பிரியா விடை பெற்றுச் சென்றான். ஹேமா நல்ல அன்புள்ள, சூதில்லாப் பெண்ணானதால் மாமியாருடன் ஐந்தாறு நாட்கள் கூட இருக்க ஆட்சேபிக்கவில்லை.

ஹேமா வழக்கப்படி காலையில் ஆறுமணிக்கு மேல் எழுந்திருந்து, டூத்பேஸ்ட், பிரஷ் வைத்துப் பல் தேய்த்துக் காப்பி சாப்பிடுவாள். அதுவும் தன் கட்டிலிலோ அல்லது பெஞ்சின் மீதோ கொண்டுபோய் வைத்துச் சாப்பிடுவாள். அப்புறம் சாய்மான நாற்காலியில் படுத்துக்கொண்டு தன்னுடன் கொண்டு வந்துள்ள புத்தகங்களில் எதையாவது வாசிப்பாள்; அல்லது மறுபடியும் தூங்குவாள். மத்தியானமும் சாப்பிட்டு விட்டுத் தூங்குவாள். சாயங்காலங்களில், காப்பி, டிபன் முடித்துவிட்டுத் தனியாக எங்கேயாவது சிறிதுதூரம் காற்று வாங்கி வரப் போவாள். இப்படியாக நாட்களைக் கடத்தினாள். மாமனாருக்கு அவள் மீது அலாதியான அன்பு. அவள் களங்கமற்ற அழகும், குணமும், அன்பும் அவரைக் கொள்ளைகொண்டது. அவருடைய பெண்ணில்லாக் குறையை மருமகளிடம் அன்புகாட்டித் தீர்த்துக் கொள்ளலாமென்று எண்ணியிருந்தார்.

பசுபதி ஐயருக்கு ராமச்சந்திரன் ஒரே புதல்வன். அவர் மனைவி பார்வதியம்மாள் பணச்செருக்கின் காரணமாக யாரையும் மதிக்கும் தன்மையுள்ளவளல்ல. பாரிஸ்டர் ராகவன் பதவியிலும், அந்தஸ்திலும் பெரியவர்கள் மத்தியில் முதல் ஸ்தானமுடையவராயிருந்தபோதிலும் ஐசுவரியம் அதிகமொன்றுமில்லை. வருவதையெல்லாம் வாழ்க்கைக்கு ஒரு குறைச்சலுமின்றி ராஜ போகமாகச் செலவளித்து வந்தார். ஹேமாவையும் யாதும் சீர், சிறப்பின்றி பத்து ஆயிரம் நகைகள், வேண்டிய துணிமணிகளுடன் மட்டும் ராமச்சந்திரனுக்கு மணஞ்செய்து கொடுத்தார். பெருந்தன்மையுள்ள பசுபதி ஐயரும் தாமே முக்கியமான செலவுகளைப்போட்டுப் பெண் கிடைத்தாலே போதுமென்ற ஹோதாவில் முடித்துவிட்டார். ஆனால் பார்வதியம்மாளுக்கு அது என்னவோ பெருங்குறையாய் மனதிலேற்பட்டு மருமகளைப் பரிபூரண அன்புடன் நினைக்கவில்லை. தான் ஜமுக்காளத்தில் உட்கார்ந்திருக்கும்போது மருமகள் நாற்காலியில் கணவனுடன் உட்கார்ந்திருப்பதையும், அவள் குழந்தை மனதுடன் மாற்றாரிடம் சரிசமமாக உட்கார்ந்து அளவளாவியிருப்பதையும் காண்கையில் பார்வதியம்மாளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அந்த மனமாற்றம் ராமச்சந்திரன் பட்டணஞ் சென்ற மூன்றாவது தினத்தில் பலன் கண்டது.

அன்று சமையற்காரனுக்குக் குளிர் காய்ச்சல். பார்வதியம்மாளுக்கும் ஏதோவொரு அசந்தர்ப்பமேற்பட்டு விட்டது. எனவே அந்தம்மாள் தன் கணவனிடம் தோசை வார்க்க ஒருவருமில்லையே எனப் பேசிக்கொண்டிருந்தவாறு ஹேமாவைப் போய் எழுப்பினாள். பசுபதி ஐயர் வேண்டாமென்று தடுத்ததற்கு "நன்றாயிருக்கு, மருமகளைப் பாரு மருமகளை! மாமனார் அவசர ஜோலியாக வெளியே போகவேண்டிருக்கு. எனக்கும் அவகாசமில்லை. மருமகளைச் செய்யச் சொல்லிக்கப் படாதாம்" என்று புகார் பண்ணிக் கொண்டு ஹேமாவை முகத்தைச் சட்டென அலம்பிக்கொண்டு தோசை வார்க்கச் சொன்னாள் பார்வதியம்மாள்.

ஹேமா ஏதோ கனவுலகில் காண்பது போன்ற பிரேமையில் பிரமிப்புடன் மடமடவெனப் பல் துலக்கி, முகங் கழுவிவிட்டு வந்தாள். "மாமி, எனக்கு தோசை, வார்க்கத் தெரியாதே!" என்ருள் குழந்தையைப் போல.

"நன்னருக்கே, தோசை வார்க்கத் தெரியாதுன்னு பொம்மனுட்டி சொல்றதை நான் இந்த லோகத்திலே கேக்கல்லே. இதோ தோசைக் கல், கரண்டி, மாவு, நெய் எல்லாமிருக்கு. ஒண்ணு போட்டுப் பார்த்தேன்ன, தானே வர்றது" என்று ஹேமாவை மணையில் அடுப்புமுன் உட்காரச் சொன்னுள்.

முடியாதென்று சொல்ல அஞ்சினவளாக ஹேமாவும் அடுப்பண்டை உட்கார்ந்தாள். என்ன செய்வதெனத் தெரியாமல் விழித்தாள். மாமியாருடைய இரக்கமற்ற முகத்தைப் பார்த்துப் பயந்து, மாவைக் கரண்டியாலெடுத்துத் தோசைக்கல்லில் வார்க்கப் போகையில், பார்வதியம்மாள் அந்தப் பெண் எப்படி வளர்ந்தவளென்றுகூட யோசிக்காமல் ஆத்திரத்துடன் அத்தனைநாளும் அடக்கி வைத்திருந்த துவேஷம் மேற்கொள்ள "என்னடியம்மா, நெய்யிலே தொட்டு இப்படித் தேய்த்ததல்லவா மாவை வார்க்கணம்" என்று அவள் சொன்னதற்கேற்ப, ஹேமாவின் வலதுகையைப் பிடித்து அதில் நெய்யைத்தொட்டுத் தடவும் சிறு துணி முடிச்சைக் கொடுத்து நெய்யில் தோய்த்து காய்ந்துகொண்டிருந்த தோசைக் கல்லில் தேய்த்தாள். ஹேமாவின் பட்டுப்போன்ற மெல்லிய பூமலர்க்கையை அவளுடைய ஆத்திரத்தில்சற்று பலமாகவே தோசைக்கல்லில் தேய்த்ததால் 'ஆ' வென்று வலி பொறுக்கமுடியாமல் ஹேமா அலறிவிட்டாள். தோட்டத்தில் நின்றிருந்த பசுபதி ஐயர் சத்தத்தைக் கேட்டு அடுக்களைக்குள் சென்ருர். பார்வதியம்மாள் பத்திர காளிபோல் அவர்மீது பாய்ந்தாள். "நல்ல மருமகள் வந்து கிடைத்தாள்; தோசை வார்க்கத் தெரியாது. காட்டிக் குடுத்தாலும் குய்யோமுறையோன்னு கத்தருள். என்ன கருமம்" என்று பிரலாபித்துக்கொண்டு மருமகள் கூச்சலிட்டதின் காரணத்தை அறிந்துகொள்ளாமல் தோசை வார்க்க ஆரம்பித்துவிட்டாள்.

ஹேமாவின் மாசற்ற மனம் ஒரு நொடியில் சிதைந்துபோனது. தான் கனவிலும் நினைக்ககூடாத காரியம் நடந்துவிட்டது. காரியம் சிறிதாயினும், அவள் தூய, கள்ளங் கபடற்ற உள்ளத்தில் அது மலைபோல் பெருத்துக்காணப்பட்டது. கைவிரல்களின் வேதனையைக் காட்டிலும் அவள் மனவேதனை ஆயிரம் மடங்கு அதிகமாயிருந்தது. அவள் மூளையில் ஏககாலத்தில் கேள்விகள் எளம்பின. மனங்குழம்ப, கையைப் பிடித்தவண்ணம் ஹேமா உள்ளே சென்றுகொண்டிருந்தாள். மாமனுர் பின் தொடர்ந்து "ஹேமா, என்னம்மா நடந்தது? எதற்காக அப்படிக் கூச்சலிட்டாய்?" என்று அன்புடன் விசாரித்தார். அவள் மருண்ட மான் கண்கள் அவரை அதிசயத்துடன் நோக்கின. வேதனையைக் காட்டிலும் ஒருவித வியப்பின் சாயைதான் அப்பார்வையில் திகழ்ந்தது.

ஹேமா தன் அழகிய தளிர்க் கரத்தை நீட்டிக் காட்டியபடி, "மாமா, தோசைக் கல்லில் கையை நெய் தோய்த்த துணியுடன் மாமி தேய்த்து விட்டார். வலியெடுத்தது; கத்தினேன்" என்று திகைப்புடன் கூறினுள். பசுபதி ஐயர் மனம் குமுறியது. மகன் கண்டால் யாது கூறுவானே என அஞ்சினுர். அவள் பெற்ருேர் அறிந்தால் என்ன அவமானம், சங்கடம் என்றெல்லாம் எண்ணியவாறு, அன்புடன் ஹேமாவுக்கு அவள் படுக்கையைத் தயாரித்து "படுத்துக்கொள் அம்மா, சாயங்காலம் வைத்தியர் வந்து பார்ப்பார். பேசாமல் படுத்துக்கோ; இதோ வந்துவிட்டேன்" என்று தளதளத்த குரலில் கூறினுர்.

அடுக்களையிலிருந்த மனைவியிடம் கோபாவேசத்துடன் சென்றார். "ஏண்டி ராக்ஷஸி. அருமைப் பெண்ணின் கையைக் கொப்பளிக்க வெச்சுட்டியே. பெண்ணில்லாப் பாவத்துக்கு இதுவேறேகேடா? இனிமேல் ராமச்சந்திரனும், ஹேமாவும் நமக்குச் சொந்தமில் லேன்னு நெனச்சுக்கோ. உன் நாசமாப்போன வீட்டிலே, இனிமேல் அவர்கள் காலை வைக்கமாட்டார்கள்" என்று இரைந்தார்.

ஹேமா உலகத்தை வெறுத்தவள் போல் கண்களைமூடிக்கொண்டு கட்டிலில் படுத்து யோசனையிலிருந்தாள். விரல்களின் வேதனைகூட மறைந்து விட்டது. ஆனால் மன நிம்மதியில்லை. மத்தியானம் சாப்பாடு வேண்டா மென்று ஒரு தம்ளர் காப்பி மட்டும் குடித்தாள்—அதுவும் அவள் அன்பார்ந்த மாமனார் வேண்டுகோளுக்கு இணங்கி. அவளுக்குப் பசியில்லை, ஒன்றிலும் ஆசை தோன்றவில்லை. எல்லாம் அவள் கண்களுக்கு வேறாகத் தோன்றின. பார்வதியம்மாள் வந்து எட்டிப் பார்க்கவில்லை. தன் மருமகள் பாசாங்கு பண்ணுவதாகவே எண்ணி முன்னிலும் அதிகக் கோபமுற்றாள்.

மாமனார் கட்டளைப்படி காப்பி, பலகாரம் ஹேமாவின் அறைக்கு நாலுமணிக்குக் கொண்டுபோகப்பட்டது. அவளுக்குப்பிடித்தமான போளி, தயிர்வடை செய்து அனுப்பச் சொன்னார். ஹேமா ஒன்றையும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. மாமியாரின் எதிர்பாரா நீசத்தனம், கொடுமை அவள் இளம் மனதை வெட்டிவிட்டது. உலகத்தையே தந்தை, கணவன் உள்பட யாவற்றையும் வெறுத்துத் தள்ளினாள். அவள் கலக்கமுற்ற மனதில் ஆற்றின் நினைவு மட்டும் மீண்டும் மீண்டும் வந்துகொண்டேயிருந்தது.

ஐந்து மணி ஆனவுடன் பசுபதி ஐயர் தம் நண்பருடன் கைத்தடியைப் பிடித்துக் கொண்டு ஆற்றோரத்தில் உலாவச் செல்வதுவழக்கம். அன்று அவர் புறப்பட்டுப்போவதை ஹேமா ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

"குழந்தைக்கு வேண்டியதைப் பாத்துக்கோ. ஆறு பெருக்கெடுத்து ஓடறதைக் கொஞ்ச நேரம் பார்த்துட்டு திரும்பிடறேன்" என்று மாமனார் யாரிடமோ சொல்வதைக் கேட்டாள் ஹேமா. ஆனால் ஆறு மணி வரையிலும் ஒருவராவது அவளிடம் வந்ததாக இல்லை.

திடீரென்று ஹேமா எழுந்தாள். 'ஆம், ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறதாம். நானும் போய்ப் பார்க்கிறேன். ஆஹா, அதன் பரிசுத்த நீர்.......' என்று என்னவோ நினைத்துக் கொண்டாள்.

இரவு சாப்பாட்டு வேளையில் ஹேமா வீட்டிவில்லாதது தெரிந்தது. தீவட்டிகளுடன் அவளைத் தேடாத இடமொன்றும் பாக்கியில்லை. ஆறு ஒன்றுதான் பாக்கி. ஆனால் அதைச் சென்று தேட ஒருவருக்கும் துணிச்சவில்லை. ஊர் முழுவதும் அன்றிரவு


# பொன்னி

★

| | |
|---|---|
| உள் நாடு | |
| ஆண்டு சந்தா | ரூ. 6–0–0 |
| வெளி நாடு | |
| ஆண்டு சந்தா | ரூ. 7–0–0 |

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது. சிலோனுக்கு மட்டும் V. P. P. மூலமாக அனுப்பப்படும்.

தனிப்பிரதிக்கு 0–4–9 தபால் தலை அனுப்ப வேண்டும்.

பொன்னி லிமிடெட்
சென்னை—21

துயில் கொள்ளவில்லை. ஆற்றங் கரையில் ஒதுக்கப்பட்ட தங்கச்சங்கிலி யொன்றிவிருந்து ஆற்றின் பெருக் கில் ஹேமா வீழ்ந்திறந்திருப்பதாகத் தெரிந்தது.

மாமியார் வாயிலும், தலையிலும் அடித்துக் கொண்டாள். ஆனால் பலன்...! ஆற்றோரத்தில் உலாவச் சென்றஹேமா பெருக்கெடுத்து ஓடும் பிரவாகத்தில் தவறி விழுந்து இறந்த தாகவே வெளிவந்தது.

ஹேமாவின் பெற்றோரும் வந்த னர்; புலம்பினர். ஆனால் அருமை மகளின் உயிரற்ற உடலைக் கூடக் கண்ணால் கண்டு திருப்தியுறக் கொடுத்து வைக்கவில்லை. ராமச்சந் திரன் மட்டும் கண்ணீர் விடவில்லை. ஒரு வேளை ஹேமாவின் சடலத்தைக் கண்டிருந்தானாகில் விஷயம் வேறு விதமாக இருந்திருக்கலாம். பிணத் தின்மீது தன் கண்ணீரைப் பெருக்கி யிருக்கலாம்; அல்லது சோகத்தின் சிகரத்தில் தன்னுயிரையே தியாகம் செய்திருப்பான். ஆனால் அவன் மௌனப் பித்தனாகிவிட்டான்; அவ னுக்கு நேர்ந்த அதிர்ச்சியில் திக்பிர மையுற்று உணர்வு இழந்தவனானான். அவன் காதல் ததும்பிய மனம் உடைந்து, காய்ந்து வறண்டு விட் டது. அவன் உயிரினும் நேசித்த அன்பு மனைவி மறைந்த அதிர்ச்சி அவனைப் பைத்தியக்காரனாக ஒரு நொடியில் மாற்றி, அவன் அனுப விக்க இருந்த வேதனையை அவன் உணரவகையில்லாது ஆக்கிவிட்டது. அவன் மனதில் எதையும் யூகித்தறிய இடமிருந்ததோ, என்னவோ, அவன் தற்கொலை புரிந்து கொள்ளாதிருக்க இரவும் பகலும் ஒரு வாரமாகக் காவ லிருந்தனராம், ஒருவரிடமும் இந்த நான்கு மாதங்களாக அவன் பேசின தில்லை. அழகிய பெண்களைக் கண் டால் அவர்களை நோக்கி நடப்பான், ஒவ்வொருவரையும் கூர்ந்து நோக்கு வான். அப்புறம் ஏமாந்து போன வனாகக் கைகளைப் பிசைந்துகொண்டு திரும்பி விடுவான். அவன் வாழ்வு பாழாகி விட்டது. அவன் மனதி னொரு மூலையில், தன் ஹேமாவைத் திரும்பவும் காணலாமென்ற நம் பிக்கை இருக்கிறது போலும். அவன் பெரிய உத்தியோகமும் ஹேமா வுடன் மறைந்தது. ஏராளமான பொருள் செலவழித்து மூன்றுமாத காலமாகப் பெயர் பெற்ற டாக்டர் வாசனிடம் வைக்கப் பட்டிருந் தான்...''

கதை முடிந்தது. நாங்கள் ஐவரும் கண்களைத் துடைத்துக் கொண் டோம். வேலைக்காரன் கொண்டு வந்த காப்பி குளிர்ந்து போயிருந் தது. அனைவரும் அதன் ஞாப கமில்லாதவர்களாக, கதை முடிந்த வுடன் எழுந்தோம்; ராமச்சந்திர னுடைய பாழாய்ப்போன வாழ்வு எங்கள் வயிற்றையும் பாழாக்கி வெறுப்புறச் செய்து விட்டது அதி சயமல்லவே!

பழைய கதை மீண்டும் ஞாபகத்தில் வந்தவுடன் ராமச்சந்திரனின் கதை முடிவை அறியவும் ஆவலெழுந்தது. ஆனால் அவன் கூட்டத்தில் மறைந்து விட்டான்.

ஆனால்...!

அடுத்த மாதம் நான் என் மற்றைய சினேகிதிகளுடன் ஆடிப்பெருக்கிற் குக் காவேரிக் கரைக்குச் சென்றிருந் தேன். அப்போது நான் கண்ட காட்சி உண்மையிலேயே எனக்குக் கனவு போலவே பட்டது. என்னென் றால் அங்கு நாங்கள் ராமச்சந்திரனை யும் அவர் துணைவி ஹேமாவையும் புதுமணத் தம்பதிகளாகக் கண்டு கொண்டிருந்தோம். அன்று ஆற் றில் விழவிருந்த ஹேமாவைக் காப் பாற்றிய டாக்டர்வாசன் அவர்களே, பிறகு ராமச்சந்திரனையும் மறுபிறப் பெடுக்கச் செய்து குணப்படுத்தி, ஹேமாவையும் ராமச்சந்திரனையும் ஒன்று கூடச் செய்த கதையை நாங் கள் அறிந்தபோது, எங்கள் உள்ளங் கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை! ★




## மூன்றும் அத்தியாயம்

## காகித ரோஜா

சிறு தூற்றலாக ஆரம்பித்தது கடைசியில் பெரு மழையாகப் பெய்தது. இடையிடையே மின்னலும் இடியும் பிணைந்தன. விண்ணைச் சாடி, மண்ணைச் சார்ந்தவாறிருந்த காற்று சிம்மக்குரல் கொடுத்துப் பயங்கரமாக ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

மாடியில் கைப்பிடிச் சுவரில் சார்ந்தபடி நின்றுகொண்டிருந்த மல்லிகாவின் மனம் குழம்பிக் கிடந்தது. விடிந்ததும், தன்னைப் 'பெண் பார்க்க' கோயமுத்தூரிலிருந்து வந்தால் என்ன செய்வதென்ற சிந்தனை அவளைக் கயிறு கட்டி இறுக்கிவிட்ட மாதிரி இருந்தது.

**எஸ். ஆறுமுகம்**

கடந்த சில நாட்களாக அவள் சித்தம் நிலை தடுமாறிக் கிடந்தது. இன்று அவள் போக்கு—தடுமாற்றம் இன்னும் அதிகமான குழப்பத்தை அடைந்தது.

'...மாப்பிள்ளை வந்து பார்த்து என்ன முடிவு சொல்லப்போகிறார்? முடிவு என்ன? போனதும் கடிதம் போடுவதாக ஒப்பனைக்குச் சொல்லிவிட்டு, அங்கு போனதும் 'பிடிக்கவில்லை' என்று ஒரு சொல்லில் நாசுக்காக

எழுதிவிடுவார். இது தெரிந்தது தானே...? அந்த நிலைக்கு என்னை ஏன் ஆளாக்கிக் கொள்ள வேண்டும்? வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சி விடவா? நான் வெந்து மடியவா?...மீண்டும் அப்பா மனசு தான் விசனம் அடையும். ஆனால்...ஆமாம்; கோயமுத்தூரிலிருந்து மாப்பிள்ளை வீட்டார்கள் இங்கு வந்துபோகாமலிருந்தாலும், அப்பாவுக்கு மனம் கேட்காது. பெற்ற மனம் அது. என்னை—இந்த அபாக்கியவதியை—ஈன்றதற்கு அவரின் கடமை அது. பிறகு என்னால் தான் காரியம் முழுக்க முழுக்கக் கெட்டுப்போய் விட்டதாகச் சீறுவார். இப்போதுதான் அவர் கொஞ்சம் எழுந்து நடமாடுகிறார்—அதுவும் கல்யாணத்துக்கு நான் 'சரி' என்றதிலிருந்து. மனங்கொண்டது தானே வாழ்வு...!

ஆனால், பார்க்கக்கூடக் கூசும் என் அழகிழந்த உருவத்தைப் பார்க்க யார்தான் ஒப்புவார்கள்? அழகுதான் ஆனந்தமா? அழகு என்பதைத் திரை மறைவிட்டு அழைக்கும் சொல் தான் காதலா? உண்மைக் காதலுக்கு அழகு தேவையில்லையே! காதல்!...... அப்படியென்றால் காதல், வெள்ளிபோல் மின்னும் வெறும் 'எவர் சில்வர்' சாமான்தானா? வெளியில் பார்க்கப் பகட்டாக அழகுகாட்டித் திகழும் வெறும் மணமற்ற ரோஜாதானா, காதல்? கடவுளே...இயற்கையே...ஏன் நான் பிறந்தேன்? உலகில் சிறையிருக்கவா? தனிமைக் கூண்டில் ஆயுட் காலக் கைதியாகி ஏங்கிக் கண்மூடவா? உன் படைப்புப் புதிருக்கு நான்தானா அகப்பட வேண்டும்? அது என் தலைவிதியா? அல்லது, இப்படி என்னைப் படைக்கவேண்டி வந்தது உன் தலையெழுத்தா? அம்பிகையே! ஈன்றவளே எனக்கு எமனாகி விட்டாயே!...உன் நினைவுச் சின்னத்தை என்வசம் சிலை வைத்து விட்டாயே...உன்னைச் சிலையாக்கி விட்டார்களே என்பதற்காகவா? உன் வஞ்சனை...... ஐயோ...!'

அப்போது 'திருவனந்தபுரம் எக்ஸ்ப்ரெஸ்' வீட்டை ஒட்டிச் செல்வது போன்ற சத்தத்தை எழுப்பிவிட்டு மதுரை ஜங்ஷனை நெருங்கிச் சென்று கொண்டிருந்தது. அக்கணம் அவளுக்கு ராஜேந்திரன் நினைவு தட்டவே, 'ஓ' வென்று அலறினாள். அழுகை நாவின் மேலண்ணத்தில் ஒட்டிவிட்டது. விம்மல்மட்டும் வெடித்தது. கொதிக்கும் கொப்பரையில் தன்னை யாரோ வேண்டுமென்று திணித்துவிட்டு வேடிக்கை பார்ப்பதைப்போல அவள் துடிதுடித்தாள்; பதைபதைத்தாள்.

எங்கோ போய்விட்டு வீடு திரும்பிய ராமசாமி கதவைத் தட்டினார். சத்தம் கேட்ட வேகத்தில் படிக்கட்டுகளை ஒரே எட்டில் கடக்க எண்ணிய மல்லிகா 'சடக்' கென்று பாய்ந்து ஓடினாள். ஒன்று—இரண்டு—மூன்று படிக்கட்டுகளைத் தாண்டியிருப்பாள். அவ்வளவுதான்! கால் சதங்கையில் சேலைத் தலைப்புச் சிக்கிவிட்டது. அவள் கால்கள் பின்னி விட்டன. கால் தவறிப் படிகளில் உருண்டுவிட்டாள், 'அப்பா'




என்ற கூக்குரலுடன். தலையினின்றும் ரத்தம் பொங்கி வழிந்தது, ஆற்று மணலைத் தோண்டிவிட்டால் கிளம்பும் ஊற்றுப் புனல் கணக்கில்.]

தந்தையைப் பார்த்த அவள் “அப்பா'' என்று அலறினாள்.

இரவுடன் இரவாக டாக்டரை அழைத்து வந்து காட்டினார் ராமசாமி. கருவேப்பிலைக்

கொழுந்து போன்ற தன் ஒரே செல்வியின் இக்கோலத்தைக் காண அவருக்குச் சஞ்சலம் அணை கடந்தது. நெஞ்சு இரு கூறுகப் பிளந்து விட்டது. அவருக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. மல்லிகாவின் விஷயத்திலென்று இப்படித் தடங்கல்கள் ஒன்றன்பின் னென்றுகச் சம்பவிப்பதறிந்து அவர் மனம் புழுங்கினுர். 'விடிந்தால் மாப்பிள்ளை வீட்டார்கள் கோயமுத்தூரிலிருந்து வந்து குதித்து விடுவார்களே...' என்று எண்ணும்போது அவர் அழுதே விட்டார்.

வீட்டின் முகப்பு வசத்தில் அவர் கண்கள் ஓடின. ராஜேந்திரனுடன் தன் புதல்வி மல்லிகாவுக்கு நடக்கவிருந்த அந்தக் கலியாணத்திற்கென அலங்காகாரப் பந்தல் இடப்பட்டிருந்தது, அப்படியே சோம்பிப்போய் அப்பொழுது அவருக்குக் காட்சிதந்தது. திருமணத்திற்காக நடந்து முடிந்த முழு ஏற்பாடுகளையும் நினைத்துக் கொண்டார். வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்த கதை நினைவு வந்தது அவருக்கு. அப்படித்தானே மல்லிகாவின் துர்திருஷ்டமும் அவளைச் சஞ்சலத்தின் முழு வடிவாகத் திருப்பி விட்டது! அவள் பாக்கியம் அவ்வளவு தான்!...நினைக்காத ஒன்று நடந்து விட்டது. எண்ணத் தொலையாத அழகுக்குவியலான அவள், எண்ணவும் முடியாத மெருகிழந்த பதுமையாக—சாயமழிந்து வடுக்கள்பட்ட பொம்மையாக ஆகிவிட்டாள் மல்லிகா...!

கண் வரம்பில் வேலி கட்டிக் கிடந்த வெள்ளம் ராமசாமிப் பிள்ளையின் உணர்வுக்கு அணை போட முடியவில்லை. அவர் விழிப்படைந்தார்.

மல்லிகாவைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர், "வேறென்றும் பயமில்லை; இடது முழங்கால் மட்டும் பலமாக அடிபட்டு விட்டது; என்றும்போல் நடமாட இரண்டு, மூன்று மாதங்கள் நிச்சயமாகும்" என்று சொல்லி, 'இஞ்செக்ஷன்' போட்டு, மருந்தும் எழுதிக் கொடுத்துச் சென்றுர்.

இரண்டு மணி நேர இடைவேளைக்குப் பிறகு, மல்லிகா லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். துயர்ப்பதிப்பாக இருந்த அவள் தலை உருட்டி விட்ட கோலிக்குண்டாகச் சுழன்றது; எண்ணங்கள் சுழன்றேடின. அந்த 'முடிவு' அவளை நச்சரிக்க ஆரம்பித்தது. அவளுக்கு உடல் சிலிர்க்க, நடுக்கமெடுத்தது.

என்ன தோன்றியதோ, மல்லிகா மெல்ல எழுந்து பத்திரமாகத் தலையணையின் கீழ் வைக்கப்பட்டிருந்த ஒரு புகைப் படத்தை எடுத்துப் பார்க்கலானுள். ஹைஸ்கூலில் அவளும் ராஜேந்திரனும் அந் நாளில் படிக்கும் சமயம் பள்ளிக்கூடத்தில் எடுத்த படம் அது. படத்தில் களங்கமற்ற சிரித்தமுகத்துடன் கைகளைக் கட்டியவாறு நின்று கொண்டிருந்த அவ்னையே வைத்த விழி வாங்காது பார்த்துக்கொண்டிருந்தாள் மல்லிகா. அதே நேரத்தில், அவள் அப்படத்தில் தன் உருவத்தையும் கண்டாள். அடுத்த விஞடி,

அவளுக்கு அப்போதய அவளது முகம் மனத்தில் தோன்றியதோ, என்னவோ, "ஐயோ" என்று அலறியவளாகப் படத்தை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்து படுக்கையில் விழுந்து புரண்டு அழலானாள்.

"மல்லிகா, அலட்டிக்கொள்ளாதே. உடம்பு சீர்கெட்டிருக்கிறது" என்று விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே எச்சரித்தார் பிள்ளை. 'இனி மகளுக்கு ஆபத்தில்லை' என்ற உறுதி ஏற்படவே, அந்த நம்பிக்கையில் அவர் மெய்மறந்தார்.

மழை நின்றது!

அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும், முதல் வேலையாகத் தபாலாபீசுக்குச் சென்று மல்லிகாவின் விபத்தைக் காரணங்காட்டிக் கோவைக்குத் தந்தி கொடுத்தார் ராமசாமி. அப்போது, 'இனி மல்லிகாவின் கதி...?' என்று அவர் மனம் கேள்வி கேட்டது. இனி அவள் கதி...! அவர் மனம் மாளாத் துயரம் எய்தியது. ஆனால் அதற்கு நேர்மாருக மல்லிகாவோ 'இப்போதைக்கு என்னை இனிமேல் யாரும் பெண்பார்க்க வரமாட்டார்கள்...' என்று வாய்விட்டு மெல்ல மனதிற்குள் கூறிய வண்ணமிருந்தாள். அது அவளுக்கு உவகையைக் கொடுத்திருக்க வேண்டும். உடல்வேதனையிலுங்கூட அந்த முடிவின் அமைதி மட்டிலா மனச்சாந்தியை அவளுக்கு நல்கியது.

அன்று மாடிப்படிகளிலிருந்து மல்லிகா இறங்குங்கால் விழுந்த சம்பவம் அவளாகவே மனமறிந்த வகையில் ஏற்படுத்திக்கொண்டதென்ற ரகசியத்தைப் பாவம், பிள்ளை எப்படி அறிய முடியும்? எனினும் முகில் வானம் மழை பொழிந்துதானே ஆகவேண்டும்? ஆனால் மல்லிகா...

## நான்காம் அத்தியாயம்

# பூலோக சுவர்க்கம்

மதுரையில் நல்ல வீடாக வசதியான இடத்தில் கிடைத்ததில் ராஜேந்திரனுக்குப் பூரண திருப்தி. பூமாவுக்கும் வீடு பிடித்திருந்தது. 'ஸ்டோர்ஸி'ல் ஒரு பகுதி அவர்களுக்கு. பக்கத்துப் பகுதிகளிலும் வேறு சிலர் வாடகைக்கு இருந்தார்கள்.

ராஜேந்திரன் காலையில் ஆபீஸ் செல்லுபவன், மாலையில் தான் வீடு திரும்புவான். இதற்கிடையில் பொழுது போவது பூமாவுக்குப் பெரிய பாடாகிப் போய்விடும். அந்தச் சமயங்களுக்குப் பக்கத்து வீட்டுப் பெண் அவளுக்குப் பழக்கமானது நிரம்பவும் துணையாயிருந்தது. அவர்கள் வீட்டில் ரேடியோ 'ஸெட்' இருந்தது. அந்தப் பெண் விஜயா, முக்கிய நிகழ்ச்சிகளை வானொலியில் குறித்து வைத்துக்கொண்டு பூமாவின் அபிப்பிராயங் கேட்டு ரேடியோவைத் திருப்புவாள்.

பூமாவிற்கு நாடகங்கள் என்றால் மிகவும் ஆசை. நாடகங்களைக் கேட்பாள். பின் அவை அவள் விமர்சனத்துக்குக் காத்திருக்கும். ஏனெனில் பள்ளிக்கூட நாட்களில் பூமா கதா நாயகியாகப் பலமுறை நடித்துப் புகழ் பெற்றவள். "நடிப்பிற்கு ரேடியோவில் சந்தர்ப்பம் இல்லையென்றாலும், வசனங்களைச் சமயமறிந்து உணர்ச்சி பாவத்துடன் பேசுவதற்கும் எவ்வளவோ திறமை வேணும்" என்பாள் பூமா.

விஜயாவுக்குக் கல்யாணம் இன்னும் ஆகவில்லை. வீட்டு வேலைகள் அவள் பொறுப்பு; எஞ்சும் நேரங்களில் பூமாவுடன் தான் இருப்பாள் அவள். விஜயாவின் குடும்பம் அப்படி ஒன்றும் பெரியதல்ல. அவள்—தாய்—தந்தை மூவர்தாம். தந்தைக்குப் பாங்கில் 'காஷியர்' உத்தியோகம்.

சங்க காலத்துத் தலைவி—தோழியரைப் போலப் பூமாவும் விஜயாவும் நட்புரிமை பூண்டு அன்பு பாராட்டி வந்தார்கள்.

ஒருநாள்...!

இயற்கை அந்தி வானத்தில் கண்கட்டு வித்தை செய்து கண்ணுமூச்சி விளையாடிக்கொண்டிருந்தது, பிரமன் உலகத்தை உண்டாக்கி அத்துடன் விந்தை மனிதர்களையும் படைத்து, மாயச் சிரிப்பை இழையோடச் செய்வதுபோல.

அழகின் சிரிப்பை ரசித்தவாறு பூமா திண்ணையில் உட்கார்ந்திருக்க, அவளருகில் தூணில் சாய்ந்தவண்ணம் நின்றிருந்த விஜயாவும் அக்காட்சியை அனுபவிக்கத் தலைப்பட்டாள். பொன்வண்ணக் கதிர்கள் அவர்கள் மீது இழை பின்னியிருந்தன. அந்தி ஒளியில் அழகுடன் விளங்கிய இருவரும் ஒருவர் அழகை இன்னொருவர் ரசித்துக்கொண்டார்கள்.

"அக்கா, மணி ஐந்து. உன் கணவர் வரும் நேரம் ஆய் விட்டதே" என்று சொல்லி நிறுத்தியதுதான் தாமதம். பூட்ஸ் சத்தம் முன் அறிவிப்புச் சொல்ல, வந்துநின்ற ராஜேந்திரன் யந்திரத்தினால் இயங்குபவன் போலப் பின் திரும்பினான்.

"அக்கா, அப்புறம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு விஜயா 'விருட்'டென்று விரைந்தாள். குறிவைத்து நோக்கிய அவன் விழிகள், அவளது விழி வெட்டின் எழிலைப் பருகின. அவன் ரசித்தான். அழகு எங்கிருந்தாலும் கலைக்கண் கொண்டு நோக்குபவன் அவன்.

அன்றைக்கு விஜயாவைப் பற்றிய பேச்சு, தம்பதிகளின் சொப்பன சொர்க்க இன்பத்துக்கு ஓர் இடைவேளையாக அமைந்திருந்தது.

அழகுப் பொருள்கள் என்றும் இன்பம் பயப்பன. கணவனின் அறையைச் சுத்தம் செய்து சாமான்களை அழகாக அடுக்கி வைத்தாள் பூமா. கண்ணாடி, பவுடர், வாஸலின், ஹேர் ஆயில்—இப்படிப் பொருள்கள் அங்கம் வகித்தன.

அன்றைக்கு அலுவலகத்திற்குச் செல்லும் கணவனுக்குச் சாதம் படைத்து விட்டு விச்-




சிராந்தியாகச் சற்று நேரம் வெளியே வந்து உட்கார்ந்தாள்.

அப்போது தபால்காரன் இரண்டு கடிதங்களை ஜன்னல் திரையை நீக்கி வீசிச் செல்வதை அறிந்தாள். ஓடிப்போய்க் கடிதத்தை எடுத்து முன்னும் பின்னும் உரையைத் திருப்பினாள். 'மைலாப்பூர்...சென்னை' என்ற முத்திரையைக் கண்டதும் அவளுக்குப் புரிந்து விட்டது. 'பட்டணத்திலிருந்து மங்களம் அக்காதான் எழுதியிருக்கிறார்கள்' என்று அறிந்தாள். படபட வென்று மேல் உரையைக் கிழித்துக் காகிதத்தைப் பிரித்தாள்; பார்வை பதிந்தது.

க்ஷேமலாபங்களைத் தெரிவித்துக்கொண்டு கடிதம் எழுத வேண்டியிருந்தாள் மங்களம். கடிதத்தில் உள்ளடங்கிய வரிகள் சில தாமே என்றாலும் பரஸ்பரம் சுகக்ஷேமத்தைப் பரிமாறிக்கொள்ளுவதில் தானே ஆறுதல் உண்டாகிறது! ஒன்றுக்கொன்று பல மைல்கள் தாண்டி இருக்கும் உள்ளங்களுக்குக் கடிதமே மனதிற்கு ஆனந்தத்தை இணைக்கும் அன்புப் பாலமாக—இதயத்

திற்கு அமைதியூட்டும் சமய சஞ்சீவியுமாகின்றது!

அடுத்த கடிதத்தைப் பார்த்தாள். அது அவள் கணவன் ராஜேந்திரன் பார்வைக்கு உரியது. முன்னும் பின்னும் திருப்பினாள். அதில் 'சந்திரன்' என்ற பெயரைக் கண்டதும், அவளை அது படிக்கத் தூண்டியது. தன்னை வாழ்விக்க வந்தவர்களுள் சந்திரனும் ஒருவர் என்பதைப் பூமா என்றுமே மறக்க முடியாதல்லவா!

"அன்புள்ள ராஜா,

வணக்கம். நலம்; நாடுவதும் அதுவே. இங்கு—பூவைமாநகரில் எங்கள் நண்பர் குழாம் உங்கள் மண விழாவின் நினைவுப் பரிசில் ஒன்றைத் தயாரித்து நாளை அனுப்ப முடிவிட்டிருக்கிறது. தங்கள் புது வாழ்வு எப்படியிருக்கிறது? நாடோடிப்பாடலின் பரவசத்தன்மை இருக்குமென்று நம்புகிறேன். வரும் மாதம் எங்கள் பள்ளியில் முதியோர் கல்வி விழாவிற்குத் தாங்கள் தலைமை தாங்க வேண்டும். அழைப்பு தனியே அனுப்புகிறோம். பூமாவுக்கு என் வணக்கம் சொல்லுங்கள்.

சந்திரன்",

பூமா ஓர் இளம் மலர். கதிரவனது கதிர் முத்தத்தில் மடல விழும் கமலம் போல, அன்பு காணுமிடத்து உள்ளம் பற்றியிழுக்கப்பட்டுச் சொக்கிப்போய் விடும் இயற்கை நலமுடையவள். 'அன்பு' என்ற தாரக மந்திரம் அவளது லட்சியக் கோட்டில் நிழலாடியது.

துள்ளும் குதூகலத்துடன் கணவனின் தனி அறையினுள் அடியெடுத்து வைத்தாள். வாயிற்படி மேலிருந்த 'நோ அட்மிஷன்' போர்டைக் கவ்னித்தாள். 'எனக்குக் கூடவா இந்தச் சட்டம்' என்று மனதிற்குள் விளையாட்டிற்குக் கூறிச் சிரித்துவிட்டு ஓடினாள். கலைக்கண்காட்சி மாதிரி அழகாகக் காட்சி கொடுத்த அந்த 'ட்ரெஸிங் டேபிளை'க் கண்ணோட்டமிட்ட பூமாவுக்குப் பெருமை பிடிபடவில்லை.

அன்று பட்டணத்தில் எல்லோருமாக எக்ஸிபிஷனுக்குக் காரில் போய்வந்த சம்பவத்தில் அவள் சிந்தை சென்றது. தன்னையும் தன் கணவரையும் சாடைகாட்டி மங்களம் கேலி செய்த முழு விவரத்தையும் நினைத்துப் பூரித்தாள் பூமா. அங்கிருந்து புறப்பட்ட சமயம் தன் கைகளில் வெள்ளிப் பாலடை ஒன்றைத் திணித்துவிட்டு 'இது என் நினைவுப் பரிசு' என்று மங்களம் சிரித்த நிகழ்ச்சியும் அவளுக்கு நினைவில் வந்தது. இன்ப நினைவுகள் அவளைத் தன்னையும் மறக்கச் செய்து, பலமாகவும் சிரிக்கச் செய்தன. அவள் சிரித்தாள். பேதைச் சிரிப்பு அது.

சிரிப்பின் பண்கேட்ட ராஜேந்திரன் திரும்பினான். அவன் கண்களின் திரை விரிப்பிலே அவன் மனைவி "பூமா சுழன்று கொண்டிருந்தாள், அழகுப் பாவையாக, அழகு மோகினியாக, அழகின் திருமகளாக. தன் திருமணத்துக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துக்கள் அனுப்பியிருந்தவர்களுக்கெல்லாம் நன்றி சொல்லிக் கடிதம் எழுதிக்கொண்டிருந்த அவன் கைப் பேனாவைக் கையிலேயே பிடித்தவாறு அப்படியே உட்கார்ந்துவிட்டான். இவ்வுலக ஞாபகமே

அவனுக்கு அற்றுவிட்டிருக்க வேண்டும். மாயமோகினி பூமா வின் தரிசனம் அவனை அப் படிச் செய்துவிட்டது.

அவன், கண்ணிவைக்க விரித்த வலையைச் சுருக் கவே இல்லை. அவன் பார்த் துக்கொண்டே யிருந்தான். அவளும் பார்த்துக்கொண்டே யிருந்தாள், அப்போதுதான் ஒருவரையொருவர் புத்தம் புதிதாகப் பார்த்துக்கொண்ட வர்களைப் போல. நல்ல தம் பதிகள்......!

அன்று 'முதல் இரவி'ல் அவன் கண்ட பூமாவை அப் படியே அப்பொழுதும் பார்த் துக்கொண்டிருந்தான். அதே ஆடை; அணிகலன்கள். அதே அலங்காரம்! அன்று ராஜேந் திரன்—பூமா தம்பதிகளை அறி முகப்படுத்திவைக்கும் நட்பாள ஞக இருந்த அதே முதல் இரவு, இன்று அவர்களது நன்றிக் கடிதத்தை வைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருந் தது. பூந்தோட்டத்தில் பறிக் கப்படாத முல்லை மலர்களைப் போல விண்மீன்கள் கண் ணடித்துக்கொண்டிந்தன.

இரவும் மங்கையும் போதைப் பொருள்கள்.

ராஜேந்திரனின் தலை கிறு கிறுத்தது.

ரேடியோவைத் திருப்பினாள் பூமா.

...உந்தன் மோடி கிறுக்குதடி
மொந்தைப் பழைய கள்ளைப்போலே...!

அவன், உயிர்த்துணைவியைப் பார்த்துப் பாடியிருக்க வேண் டிய வரிகள் அவை. அவன் நிலை அப்படி!

புளகிதமும் புல்லரிப்பும், அன் பும் ஆதரவும், பெருமிதமும் எக் களிப்புமாக ராஜேந்திரன்—பூமா தாம்பத்தியம் வாழ்க்கையில் அங்கம் அங்கமாகப் பண்பெற் றுத் திகழ்ந்தது. கண் நிறைந்த கணவனின் அமுதச் சூழ் நிலை யில் அவள் முன் பூலோக சுவர்க் கமே உருப்பெற்றிருந்தது. அவள் கனவும் அதுவேதானே! நனவாகிவிடும் கனவு என்றாலே அதன் விலை அதிகம்தான் போலும்! எல்லாக் கனவு களுமே நனவானால்......எல்லா நனவுகளுமே கனவின் களத் திற்குப் பக்குவமானால்...... அதுவேதான் பூலோக சொர்க் கமா......!

ஒரு நாள்......

புள்ளினம் கூடுகளில் 'தஞ்சம் நீ கதியே' என்று அடைக்கலம் புகக்கூடிய பொழுது.

அலுவலகம் முடிந்தது; நண் பர்களிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்ட ராஜேந்திரன் மனை மிதிக்கும் தருணம், தெரு விளக்குகள் ஏற்றிய விளக்கு களாகப் பெருமையுடன் நகை முகங்காட்டி நின்றன. முகப் பரப்பில் பனிபெய்திருந்த மணி களை விரல் முனையினால் வருடி விட்டவாறு மாடிப்படியேறிக் கொண்டிருந்தான். அப்போது அவன் காதுகளில் சதங்கை ஒலி கேட்டது. திரும்பினான். பார்வை கீழே தாழ்த்தப்பட் டது. அடுத்த வீட்டுடன் இணைந்திருந்த கூடத்தில் அவன் கண்ட அக்காட்சி......! கனவுபோலத் தெரிந்தது அக் காட்சி; ஆனால் அது அவனது கண்கள் காட்டிவிட்ட கனவுக் கோலமே தவிர, வேறில்லை. அங்கு பூமா நடனமாடிக்கொண்

டிருந்தாள். அபிநயபாவத்திற்குகந்த முறையில் அவள் விரல்கள் முத்திரை காட்டின; அவள் இதழ்க் கோணத்தில் அழகு ரோஜா ஒன்று அப்போதுதான் மலர்ந்து கொண்டு வந்தது. அவள் நெஞ்சம் எக்களிப்பில் உயர்ந்தது; தணிந்தது. அவளிடமிருந்து பெருமூச்சு விடை சொல்லிக்கொண்டு பிரிந்தது.

"எக்ஸலெண்ட்! டான்ஸ்...ஏ ஒன். ஹஹ்ஹா...!"

நாட்டியம் தடைப்பட்டது; நின்றது. திரும்பினுள் பூமா, அரும்பிக்கொண்டிருந்த பனித் திரையை விலக்கிவிடக்கூட நினைவற்றவளாக. தன் ஆட்டத்துக்குத் தன் கணவரே 'சர்டிபிகேட்' தரும் சந்தர்ப்பத்தை அவள் எப்படி எதிர்பார்த்திருப்பாள்? ஏனென்ருல், வழக்கம்போல வரும் நேரத்திற்கு அரைமணி முன்னதாக அன்று ராஜேந்திரன் ஆபீசை விட்டு வந்துவிட்டான்.

பூமா தலைகுனிந்து கொண்டாள். நாணம் அவள் தோழியாக நின்று அவளைப் பேசவொட்டாது செய்துவிட்டது. ஆனல் அவள் தோழி விஜயாவின் விளையாட்டை......!

"என் சிநேகிதி விஜயாவுக்குத் தெரிந்த ஒரு பெண், பள்ளிக்கூடத்தில் ஆண்டு விழாவில் டான்ஸ் ஆடவேண்டுமாம். விஜயா சொன்னுள். நான் இன்றைக்குச் சொல்லிக்கொடுத்தேன்......நீங்கள் வந்ததை அறிந்துதான், விஜயா என்னிடம் கூடச் சொல்லாமல் கம்பி நீட்டிவிட்டிருக்கிருள் அந்தப் பெண்ணுடன்..."

"நான் பாக்கியவான், நாட்டியம் தெரிந்தவளை மனைவியாகப் பெற."

"நானும் பாக்கியவதி, என் நாட்டியத்தை ரசிக்கத் தெரிந்தவரைப் பதியாக அடைய"

நாட்கள் வந்தன; வந்த நாட்கள் போயின. காலண்டரும் கடிகாரமும் அதற்குச் சாட்சி சொல்லின. காலம் ஓடிக்கொண்டிருந்தது.

அடுத்த வீட்டு வாசலில் ஜட்கா ஒன்று வந்து நின்றது. பூமா கண் பார்வையைத் திருப்பினுள். இளைஞன் ஒருவன் 'ஜம்'மென்று வந்திறங்கினுன்.

"வாங்க அத்தான்" என்ற வரவேற்புடன் விஜயா ஓடிவந்து நின்றதைப் பார்த்ததும், பூமாவுக்கு அவர்கள் நட்பு — உறவு தெரிந்தது. விஜயாவுக்குகந்த விஜயன் தானே?

மத்தியான்னம்.

மீனுட்சி அம்மன் கோவிலிலிருந்து உச்சிக்கால மணி ஓசை காற்றில் மிதந்து வந்தது.

விஜயா வந்தாள்.

"விஜயா, உன் அத்தான் விஜயத்தில் அங்கேயே ஐக்கியமாகி விடுவாயோ என்று சந்தேகப்பட்டுவிட்டேன்" என்ருள் பூமா கேலியாக.

"கேலியிருக்கட்டும், அக்கா. குமார் — அது தான் அவர் பெயர். பி. காம் படிக்கிருர். லீவுக்கு வந்திருக்கிருர். அடுத்த வாரம் மெட்ராஸ் போய்விடுவார்..."

"அதுசரி; இப்போது அவரிடம் இல்லாமல் நீ வந்துவிட்டாயே. பாவம் தனிமையில் அவர் தவித்துவிடப் போகிருர். ஊம்; ஓடு......விஜயா."

"இப்போது போக வேண்டாம். அவர் தூங்குகிறார்"

"புரிகிறது. அதற்குத்தான் என்னைத் தொந்தரவு செய்ய வந்துவிட்டாயாக்கும். பேஷ்."

"போங்கள், அக்கா."

"அடடே, கோபிக்காதே விஜயா. உன் தனிமைக்கு முற்றுப்புள்ளியிட என்றைக்கு நாள் பார்த்திருக்கிறாய்? இரட்டையராகப் போவது என்று?"

விஜயாவிற்குப் பூமாவின் கலாட்டாப்பேச்சுப் புரியாமலா போய்விடும்? அவள் முறுவலித்தாள்.

"புரிகிறது. சரியான ஜோடி தான்."

"தை பிறந்ததும்—"

"வழி பிறந்துவிடுமென்கிறாயா? ரைட்டோ."

"அக்கா, நீங்கள் நிச்சயம் சினிமாவிற்கு வசனம் எழுதலாம்"

"ஊஹூம்; அது வேண்டாம். சினிமாவில் நடிக்கக் கொஞ்சம் சிபாரிசு செய்யமுடியுமா?" என்று கேட்ட பூமா, கணத்தில் கலீரென்று சிரித்து விட்டாள். விஜயாவும் சேர்ந்து சிரித்தாள். சிரிப்பும் சிரிப்பும் பின்னின, இதயமும் இதயமும் நட்புத் தளையில் இணைவதுபோல.

அன்று 'மாட்னி' ஆட்டத்திற்கு விஜயாவும் அவள் அத்தான் குமாரும் புறப்பட்டார்கள். அதுடன் பூமாவையும் வற்புறுத்தித் தன்னுடன் கூட்டிச் சென்றாள் விஜயா. பூமாவுக்கு, அவள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை சொல்ல முடியவில்லை; புறப்பட்டாள்.

ஆபீஸ் முடிந்து ராஜேந்திரன் வரும்போது, ஆட்டம் முடிந்து ஜட்காவினின்று இறங்கிய மூவரில் தன் துணைவி பூமாவும் இருப்பதைக் கண்டான். விஜயாவுடனிருந்த இளைஞனை ஒரு முறை பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தான். கணவ்னின் நடத்தை பூமாவுக்குப் பயத்தை அளித்தது. கணவனின் உத்தரவன்னியில் பிறருடன் படத்திற்குப் போனது குற்றம் என்ற விஷயம் அவளுக்கு அந்தக் கணந்தான் புலனாகிற்று. அவளது உடலில் மின்னலுணர்வு கொதித்தெழுந்தது. காரணத்தை விளக்கிக் கூறித் துணைவரிடம் சமாதானம் கூற அன்று முழுதும் பூமா துடித்துப் போனாள். ஆனால் அதைப்பற்றி ராஜேந்திரன் பேச்சையே துவக்கவில்லை. அதுவரைக்கும் பூமாவுக்கு நிம்மதி...!

அன்றைக்கு நாடகம் ஒன்றுக்கு ராஜேந்திரனும் பூமாவும் வீட்டைவிட்டுப் புறப்பட்டு, காத்துக்கொண்டிருந்த ரிக்ஷாவில் ஏறப்போனார்கள். அப்பொழுது ரிக்ஷாவில் கடந்து சென்ற ஒரு பெண் உருவத்தைப் பார்த்தான் ராஜேந்திரன். பார்த்ததுதான் தாமதம், அவன் அப்படியே தரையில் நினைவிழந்து சாய்ந்து விட்டான். இதைக் கண்ட பூமா அப்படியே அதிர்ச்சியடைந்து விட்டாள்; அவள் தலை சுற்ற ஆரம்பித்தது. இத்தகைய திரும்பு முனைக்குக் காரணமான அந்தப் பெண் வேறு யாருமல்ல— பாவம், அவள் அபலை மல்லிகா!

(தொடரும்)

திருக்குறள் விளக்கம்

# ஒளிச்சுடர்

**கலைவாணி**

**வை**யகத்தில் வண்ணச் சுவை மிகுந்து வளம் பெறும் வாழ்க்கை முறை இல்வாழ்வு. இந்த நல்வாழ்வு இழையும் இல்லத்தில், இன்னல் இருள் நீங்கி, இன்பக் கதிர் நிலவப் பணி புரிவது வாழ்வின் ஒளி விளக்கான மனைவி. அந்த மனை விளக்கு-மங்கல தீபம் தெறித்திடும் மாணிக்கச்சுடர்கள் தாம் மக்கட்பேறு. இந்தக் கருத்தைத் தான் வள்ளுவமும் வரையறுக்கிறது, ‘மனை மாட்சியின் நன்கலம் நன்மக்கட்பேறு’ என்ற வற்றாத தேனூறும் வார்த்தைகளில்.

செடி சிறக்க மலர் வேண்டும். செந்தாமரை சிரிக்கச் செங்கதிர் வேண்டும். இவை போலவே, தாம் வதியும் மனை விளங்க, மலடு என்ற மாசு நீங்க, தத்தித் தவழ்ந்து தங்க நகை பூக்கும் தளிர் மேனிச் சின்னங்கள் வேண்டும். அந்தச் சின்னங்கள் சிந்தும் சீரிய மழலை மொழிகள் சிதறிக் குலுங்க வேண்டும். அவ்வாறு குலுங்கும் குறு மொழிகளின் ஓசை, ‘கிறு கிறு’க்கும் குழலின் ஒலியை விட, ‘கிண்’ணென்ற நாத மெழுப்பும் யாழின் இசையை விட இனிமையுள்ளது; இன்பம் பயப்பது; இணையற்ற சுகந்தருவது.

வையக் கடலில், அல்லல் அலைகளால் ஆடிக்குலையும் வாழ்க்கைக் கப்பல் அமைதியுற வேண்டுமானால், அதற்கு நன்மக்கள் என்ற நங்கூரம் தேவை. மக்கட் செல்வம் பெற்ற பின்னரே, பெரும்பாலும் மனித மனத்தில் மாண்பு மலர்ந்து, விரிந்து விசாலிக்கிறது. இம் மாறுதலுக்குக் காரணமாக இருக்கும் கருவி, களங்கத்தின் கரை படியாத, மாசும் மண்ணும் மருவாத, பாலப் பருவமே! இது குறித்தே தான் இயேசு நாதர் கூட ‘‘பச்சிளங் குழந்தையின் பரிசுத்த மனதைப் பெறாத எவனுக்கும், பரமண்டலத்தின் கதவுகள் என்றும் திறக்கப் படுவதே கிடையாது’’ என்று தனது பிரசங்கங்களில் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தை— குழைந்து குழைந்து பேசுவதால் விளைந்த காரணப்பெயர். குழைந்த மொழி, குழைந்த குணம் இவற்றைக் கொண்டது தான் கு(ை)ழந்தை. புத்திரி—ஆம்; புது திரி. குடும்ப விளக்காம் தன் தாயின் குணச் சுடர் மேலும் வளர்ந்து கொழுந்துவிட்டெரியப் புதிதாய்ப் புகுந்த திரி, புத்திரி. புத்திரன்—ஆம்; புது திறன். தங்கள் இல்வாழ்வில் திரு விளங்கத் தினமும் திறமையுடன் உழைக்கும் தந்தைக்குப் புதல்வன் தோன்றிப் புது திறன் அளிக்கிறான். ஆகவே அத் தந்தைக்கு அவன் ஓர் புத்திரன். வார்த்தையின் வழக்கில் வடிவு திரிந்து, வல்லினம் இடையினமாக மாறியது [ற-ர]. இந்த விளைவைப் பயன் படுத்தி, பல வடமொழி நூல்கள் இவ்விரு இனிய தமிழ்ச் சொற்கள் வடமொழி என்றும், ‘புத்’ என்ற நரகத்திற்குப் போகாது தடுப்பவர் என்பதனாலேயே இப் பெயர்கள் ஏற்பட்டன என்றும் பல விளக்கங்களை விதைத்து விட்டன.

மின்னும் பொன்னிருந்தாலும், மிளிரும் பொருளிருந்தாலும், செய்யும் செயல் புரியச் சேவகர் பலரிருந்தாலும், சிரித்து விளையாடிச் சிந்தை மகிழ்விக்கும் ஓர் செல்வச் சிசு இல்லா விட்டால், அனைத்தும் பாழ் தானே? ஆகவே தான் ‘தம் பொருள் என்ப தம் மக்கள்’ என்று தமிழ் மறை வலியுறுத்துகிறது.

ஒன்று, இரண்டாக மாறிக் கலப்பதில் தான் உவகையும், இன்பமும் விளைகிறது என உலகம் கருதலாம். ஆனால், அந்த இரண்டு தரும் இன்பம்

உடலுக்கு மட்டுமே; அது இறுதி வரை நீடிப்பதுமில்லை —இது, இல்வாழ்வின் அனுபவ இலக்கணம்; கற்ருர் அறிந்த உண்மை. ஆனல் இரண்டு, மூன்ருகும் போது தான் உடலளவில் உறைந்திருந்த இன்பம், உயிரிலேயும் கலந்து உண்மை இன்பமாக. மாறுகிறது. இத்தகைய முத்துச் சுவையைத் தரவல்லது, அந்த மூன்ருவது உருவம் மட்டுமே!

இத்தகைய தம் செல்வங்களின் தளிர் விரல்கள் துழாவிய கூழ்கூட, தாம் அருந்தும் போது அமிழ்தை விட அருஞ்சுவையை அளிக்குமாம். அத்துடன் சின்னஞ் சிறு உடல் அசைய, சிங்கார நடை பயின்று, முத்துப்பல் தெரிய, மோகன வாய் திறந்து, 'அம்மா, அப்பா' என்று அழைக்கும் ஒலி கேட்டு அங்கமெல்லாம் பூரித்துப் பொலிய, அவர்கள் அடையும் ஆனந்தத்திற்கு அளவு தான் உண்டோ?

இக் கருத்தைப் பற்றியே, பாண்டியன் அறிவுடை நம்பியும் 'குறு, குறு நடந்து, சிறு கை நீட்டி, இட்டும் தொட்டும், கௌவியும் துழந்தும் ...........' என்று புறநானூற்றில் புகழ்ந்திருப்பது போற்றுதற்குரியது. இது போன்ற, சீர் சான்ற சின்னங்களைத்தான் 'சின்னஞ் சிறு கிளியே, செல்வக் களஞ்சியமே! பிள்ளைக் கனியமுதே! பேசும் பொற் சித்திரமே!' என்றெல்லாம் அழைத்துப் பூரிக்கிருர் அமரர் பாரதியார்.

பிறந்து, வளர்ந்து பின் பள்ளிக்குச் சென்று பயிலும் பருவத்தையும் முடிக்கிருன் பாலகன். பத்து மாதம் சுமந்து பெற்றுப் பின் பகலென்றும், இரவென்றும் பாராது, பரிந்து வந்து வளர்த்த அவன் அன்னை 'கண்ணே! மணியே! கனியின் சாறே! கன்னல் தமிழ்ச் சுவையே!' என்றெல்லாம் கானமிசைத்துக் கண்ணிமை போல் காத்துத்தந்த 'கண் கண்ட தெய்வம்' அவனைக் காணுகிருள். அதைத் தொடர்ந்து அவள் செவிகளில் 'உன் செல்வன் சான்ருேன்; 'உனது மைந்தன் மனிதரில் மாணிக்கம்' என்று ஊரார் போற்றும் புகழுரைகளும் ஒலிக்கின்றன. உடனே உடலும், உயிரும் ஒன்ருகச் சிலிர்க்க உவக்கின்ருள் அவள். இன்ன தென்று கூட விவரிக்க இயலாத இன்னலெல்லாம் அடைந்து அவனை ஈன்றெடுத்தாளே, அன்று அடைந்த இன்பத்தை விட அளவிறந்த ஆனந்தத்தையும் அடைகிருள் அவள்— தாய்!

தன்னிணையற்ற பெருமிதத்தைப் பெற்ருேருக்கு அளிக்கும் தனயனை உருவாக்குவது, தந்தையின் கடன். இதைப்போல்தான், மக்களைப் பெறுவதைவிட, அவர்களை மாணிக்கங்களாக மாற்றிடும் பணியும். ஆகவேதான் 'அறிவறிந்த மக்கட்பேறு' என்றும் 'பழிபிறங்காப் பண்புடை மக்கள்' என்றும், அழுந்தக் கூறியுள்ளார் ஆசிரியர்.

தந்தையின் இந்தத் தலையாய கடனை, கடமை என்று கூருது, 'தந்தை மகனுக்கு ஆற்றும் நன்றி' என்று தெரிவிக்கிருர் தெய்வப் புலவர். அந்த நன்றி—கடமை—தன் மகனை அறிஞர் நிறைந்த அவையிலே அனைவருக்கும் மேலான ஆராய்ச்சியாளனுக ஆக்குவதே. 'ஈன்று புறந் தருதல் என் தலைக்கடனே—சான்ருேனுக்குதல் தந்தைக்குக் கடனே' என்று ஒரு பெண் வாயிலாகப் புறநானூறு உணர்த்துவதும் இதனையே வற்புறுத்துகிறது.

இவ்வாறு தான் பெற்ற பேறுக்கும் புகழுக்கும் பெரிதும் கருவியான தன் தந்தைக்கு அத் தனயன் செய்யும் உதவி—பிரதிபலன், 'இவ் வுத்தமனைத் தன் மகனுகப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்திட்டானே!' என ஊரும் உலகும் போற்றிப் புகழும் பொன்னுரைகள்.

இத்தகைய தாயும் தந்தையும், தனயனும் தவழும் நாடே, தரணி புகழும் நன்ஞடாகும்!

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை
—அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற"

★

# வளரும் இலக்கியம்

## இன்ப வாழ்க்கை

ஆசிரியர் :

தோ. ந. வீரராகவன்

இமயப்பதிப்பகம், நாகப்பட்டினம்

விலை. ரூ. 1–8–0.

திரு அகிலன் முன்னுரையுடன் ஏடு தொடங்கும் 'இன்ப வாழ்க்கை' திரு. தோ. ந. வீரராகவனின் இலக்கியப் படைப்பு.

எண்ணிக்கையில் பதினேரு கதைகளைக்கொண்ட இத் தொகுப்பில், சிந்திக்கத் தக்க—படித்துக் கதைகளை ஓரளவு நினைவில் கொள்ளத்தக்க முறையில் இரண்டு கதைகள் இணைக்கப்பட்டிருப்பது குறிப்பிட வேண்டியதே. 'கலைஞனின் வெறி', 'முழுமுத்தம்' ஆகிய இரண்டும் என் மனதிற்கு இதம் தந்தன. 'சுங்கமித்திரா துறவு' ஏற்கனவே பலமுறை பலரது சிந்தனைக்கு இலக்காகிவிட்ட பழைய சரக்கு.

மொத்தத்தில், கதைகளின் சம்பவங்கள் சாதாரணம் என்ருலும், கதையைச் சொல்லிப் போகும் முறையும், கதைகளைச் சொல்லக் கையாண்டிருக்கும் உயிருள்ள தமிழ் நடையும் 'இன்ப வாழ்க்கை'யின் போற்றக் கூடிய அம்சங்கள். விலை கொஞ்சம் அதிகம்.

—பூபாலன்

---


**மாதவிடாய் நின்றுபோனதா?**

**நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)** Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/628

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

**கர்ப்பதடை**

**நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)** Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfors: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

பிராஞ்ச 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

# Rs. 63,000

*Tele :*
*'JINIX'*
*Phone : 29*

முழுதும் சரியாக உள்ள 14 பரிசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

எல்லாப் பரிசுகளுக்கும் உத்தரவாதம்

**எல்லாம் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 4,500. இரண்டு வரிசைகள் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,750. முதல் ஒரே ஒரு வரிசை மட்டும் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 85. முதல் இரண்டு எண்கள் சரியாக உள்ளதற்கு ரூ. 25. பரிசுகள் நிச்சயம் வழங்கப்படுகின்றன.**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

*9-லிருந்து 24 வரையுள்ள எண்களைத் தந்திருக்கும் கட்டங்களில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் அல்லது எல்லாப் பக்கங்களிலும் எப்படிக் கூட்டினாலும் 66 வரவேண்டும். ஒரு எண்ணை ஒரு முறைதான் உபயோகிக்கவேண்டும்.*

முடிவு தேதி : **10–12–52.** விடை : **20–12–52**

**பிரவேசக் கட்டணம்:—கூபன் 1-க்கு ரூ. 1. 4 கூப்பன்களுக்கு ரூ. 3. 8 கூப்பன்கொண்ட செட் 1-க்கு ரூ. 5.**

*முந்திய விடை மொத்தம் 62*

| | | | |
|---|---|---|---|
| 12 | 21 | 18 | 11 |
| 17 | 14 | 9 | 22 |
| 10 | 19 | 20 | 13 |
| 23 | 8 | 15 | 16 |

**விதிகள் :** *வெள்ளைத்தாளில் விதித்துள்ள பிரவேசக் கட்டணத்துடன் எவ்வளவு கூபன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கூப்பன்களுடன் M. O. ரசீது, போஸ்டல் ஆர்டர், பாங்க் டிராப்ட் மூலமாகவோ கட்டணத்தைச் செலுத்தலாம். புலந்த்ஷாரிலுள்ள பெரிய பாங்கியில் சீல் செய்திருக்கும் எங்கள் விடைகளுக்குச் சரியாக உள்ளவையே சரியான விடையுள்ளனவாக கொள்ளப்படும். ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதவேண்டும். M. O. கூப்பனில் உங்களது பெயர், விலாசம் வேண்டும். முழுதும் சரியான விடைகளுக்குத் தக்கபடி பரிசுத் தொகை அமையும். ஆனால் உத்தரவாதம் செய்யப்பட்ட பரிசுகள் மாறமாட்டாது. விடை தேவையானால் தபால் தலையுடன் கூடிய விலாசமிட்ட கவர் அனுப்பவேண்டும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானதாகும்.*

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :

## PHOENIX CORPORATION REGD. (P. M.)
BULANDSHAHR, U. P.




பாலா

## வளையாபதி

பொதுவாக, அண்மையில் திரையிடப்படும் தமிழ்ப் படங்களுக்குக் குறைவில்லை என்றுதான் சொல்ல வேண்டும், எண்ணிக்கையில். ஆனால் படங்களின் திறனாய்வில் அவை பெரும்பாலும் தரம் குறைந்துதான் போகின்றன. இந்த வகுப்பில் சேர்க்கப்படவேண்டியது, சமீபத்தில் மாடர்ன் தியேட்டர்காரர்கள் வெளியிட்ட 'வளையாபதி'. கைதேர்ந்த டைரக்டர் சுந்தரமும் அவருக்குத் துணையாக மஸ்தானும் படத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாக இடம் பெறும் 'வளையாபதி'யின் கதைப்போக்குக்கு, உயிரளிக்கும் பெருமை கொண்ட கவியரசர் பாரதிதாசன் அவர்களது தீந்தமிழ் வசனங்கள் படத்தில் ஒவ்வொரு அங்கத்திலும் உயிர்த்துடிப்பாக நாதமிழைக்கிறது. எல்லாம் இருந்தும், படம் வெற்றிபெறவில்லையென்றால், படவுலகில் பெயரடையாத ஒன்றிரண்டு பேர்கள் நடித்திருப்பதுதான் அதற்குக் காரணம் சொல்லி நிற்குமோ?

படவுலகில் ஏ. வி. எம். அறிமுகப்படுத்தி, ஓரளவு நற்பெயரையும் மக்கள் வாயிலாகச் சம்பாதித்துக் கொடுத்த டி. ஏ. ஜெயலட்சுமி இரட்டைக் கதாநாயகிகளுள் ஒருவராக— வளையாபதியின் முதல் மனைவி அந்தரியாக நடித்திருக்கிறார். அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாகம் மிகச் சாதாரணம்; எனினும் கொடுத்த பாகத்தை உணர்ந்து நடித்துள்ளார். ஆனாலும் அவரது திறமை வெளிப்படப் படத்தில் ஒரு கட்டமும் காணப்படவில்லை.

வளையாபதியாக வரும் முத்துக் கிருஷ்ணன் சுமாராக நடித்திருக்கிறார். இவர் நடிப்பும் பேச்சும் சில சமயங்களில் நாடகமேடை நடிகர்களை நமக்கு நினைவூட்டுகிறது. இரண்டாவது மனைவி சத்தியவதியாக நடிக்கும் சௌகர் ஜானகியின் நடிப்பு உயிரே இல்லாததாக அமைந்து விட்டிருக்கிறது. புளிமூட்டை ராமசாமி படத்தில் வந்து போகிறார், படம் பார்ப்பவர்களைச் சிரிக்கவைக்கவேண்டுமே என்ற நிர்ப்பந்தத்துக்காக. கருணாநிதி—முத்துலெட்சுமி ஜோடியின் ஹாஸ்யம் பொருந்தாததாயும், அர்த்தமற்றதாகவும் உள்ளது. சிறுவர்கள் சுதாகரும், ராமகிருஷ்ணனுமே ரசிர்களின் கைதட்டலுக்குப் பாத்திரமாகின்றனர்.

பாட்டுகள் கேட்பதற்குச் சுவை தருகின்றன. ஒளி, ஒலிப்பதிவுகள் நேர்த்தி யென்பதற்குப் படத்தின் ஆரம்பம் சாட்சி சொல்லுகிறது.

'வளையாபதி'யின் உயிர்த் துடிப்பாக உள்ளது கவியரசரின் வசனங்கள்; அதுவேதான், இந்நாள் வரை நகரின் பல பகுதிகளில் இப்படம் ஓரளவு ஓடிக்கொண்டிருப்பதற்குக் காரணமாகவும் அமைய முடியும்!

*Printed and Published by PR. AL. M. N. Narayanan for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21.*
*Editor: K. Appadurai M.A., L.T.*